# எழுத்து உலகின் நட்சத்திரம்

# 'தீபம்'. நா. பார்த்தசாரதி



தொகுப்பாசிரியர்
வல்லிக்கண்ணன்

எழுத்து உலகின் நட்சத்திரம்

# "தீபம்" நா. பார்த்தசாரதி

தொகுப்பாசிரியர் :

வல்லிக்கண்ணன்

ஞானியாரடிகள் தமிழ் மன்றம்

ப.எண்.7, பு.எண். 17 நாகமணி தெரு

சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.

| | |
|---|---|
| பதிப்பாசிரியர் | அ.நா. பாலகிருஷ்ணன்<br>சென்னை-600 002.<br>போன் 28589314 |
| உரிமை | பதிப்பாசிரியருக்கே<br>டிசம்பர் 2004 |
| விற்பனையாளர்கள் | கௌரா ஏஜென்ஸீஸ்<br>எண்.6, தோப்பு வெங்கடாசலம் தெரு<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை-600 005.<br>போன் : 28443791<br><br>விஜயா பதிப்பகம்<br>20, ராஜவீதி<br>கோயம்புத்தூர் - 641 001.<br>போன் : 2394614 |
| அட்டைப்பட வடிவமைப்பு | எம்.ஏ.எஸ். கம்யூனிகேஷன்ஸ்<br>திருமலைப்பிள்ளை ரோடு<br>தி.நகர், சென்னை-17.<br>போன் : 98400 25535 |
| ஒளி அச்சுக்கோப்பு | சுகன் கம்ப்யூட்டர் கிராபிக்ஸ்<br>சென்னை-2. |
| ஒருங்கிணைப்பு | ராஜ் எண்டர்பிரைசஸ்<br>சென்னை-14. 28111754 |
| பக்கங்கள் | |
| விலை ரூபாய் | 40/- |

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | எனது நண்பர் 'நா.பா.'<br>த. ஜெயகாந்தன் | 1 |
| 2. | அமரர் 'நா.பா.' சில நினைவுகள்<br>தி.க.சிவசங்கரன் | 3 |
| 3. | "தீபம் யுகம்"<br>சின்னக்குத்தூசி | 8 |
| 4. | பிடிவாதக்காரர் நா.பா.<br>கி. ராஜேந்திரன் | 18 |
| 5. | தீபம் காட்டிய வழி !<br>ஆரணி எஸ் சம்பத் | 22 |
| 6. | நா.பா. வளர்த்த இலட்சிய 'தீபம்'<br>வல்லிக்கண்ணன் | 25 |
| 7. | பேசப்படுகிறார் பேச்சாளர் நா.பா.<br>திருப்பூர் கிருஷ்ணன் | 30 |
| 8. | நா.பா. என்கிற நல்ல மனிதர்<br>சுப்ரபாலன் | 37 |
| 9. | நாபாவின்கதை<br>தீபம் எஸ்.திருமலை | 43 |
| 10. | வாழ வைத்த தீப ஒளி<br>கௌதம நீலாம்பரன் | 51 |
| 11. | மணிவண்ணனின் மாபெரும் சாதனை<br>லெனின் கோவிந்தராசன் | 61 |
| 12. | நண்பர் நா.பா.வின் நினைவில்<br>எஸ். இராமசுப்பிரமணியம் | 65 |
| 13. | உயர் பண்புகளின் உருவகம் நா.பா.<br>சுப. கோ. நாராயணசாமி | 68 |
| 14. | எனது வேலை நீக்கம்<br>நா. பார்த்தசாரதி | 76 |
| 15. | திக்கெட்டும் பரவுக தீபச்சுடர்<br>நா. பார்த்தசாரதி | 114 |

# பதிப்புரை

"சுவடில்லாத பாதையிலே தனிவழி அமைத்துக் கொண்டு போகச் செய்யப்படுகிற முயற்சி எதுவும் முயற்சியாக முக்கியமானதுதான். இந்த முயற்சிகளில்தான் பிற்காலத்தில் இலக்கிய சிகரங்கள் எட்டுவது சாத்தியமாகிறது."

க.நா.சு.

"தீபத்தில் வெளியாகும் கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள்யாவும் கற்பனையே. ஆனால் அதே சமயத்தில் அவை, அவற்றைப் படைத்த இலக்கியச் சிற்பிகளின் பொறுப்பு என்கிற கம்பீரமான பலத்தைச் சார்ந்து நிற் பவையாகும்".

நா. பார்த்தசாரதி

பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் கல்கியில் என்னுடைய பொன் விலங்கு தொடர்கதை வெளிவந்து கொண்டிருந்தபோது சென்னை கோ- ஆப்டெக்ஸில் வேலை பார்த்துக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் ஆர்வத்தோடு என்னைச் சந்திக்க வந்தனர். என் எழுத்துக்களில் ஆர்வமும் நேசமும் காட்டினர். தொடர்ந்து பழகினர்.

அவர்கள் திருவாளர்கள் அ.நா. பாலகிருஷ்ணனும், மீரான் பண்ணையாரும் ஆவார்கள். திருநெல்வேலி மாவட்டத்தை சார்ந்த மீரான் பண்ணையாரும், காஞ்சிபுரத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணனும் இரட்டையர் போல் நெருக்கமான பழக்கமுடையவர்கள். நட்பும் அன்புறவும் நிறைந்தவர்கள்.

இருவரும் தீபம் தொடங்கிய நாளிலிருந்து ஏன் அதற்கு முன்பேயும் என் மேலும் என் முயற்சிகளின் மேலும் நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஆவலும் உள்ளவர்கள். தீபத்துக்காக தங்களால் முடிந்த பணிகளை அவ்வப்போது ஆற்றுவார்கள்.

தீபம் தொடங்கிய பின் தமிழ் இலக்கிய இரசிகர்களின் நடுவே மலர்ந்த முகங்கள் அதிகமாயின. அதில் இந்த இரு முகங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்த இரட்டையர்களின் மனத்தில் சினிமா, சொற்பொழிவு, விலைவாசி, சம்பளநாள் இவற்றைப் போல் இவற்றையும் விட அதிகமாகக் கூட 'தீபம்' என்கிற பத்திரிகையும் நினைவிருக்கும். இவர்களால் மறக்க முடியாத விஷயங்களில் – இவர்களின் அக்கறையும் சிரத்தையையும் பெற்ற விஷயங்களில் தீபம் என்னும் இதழ் முக்கியமானதாயிருக்கும்"

''தீபம் ஜூலை 1975 இதழில் நமது இலக்கிய குடும்பம் பகுதியில் ''நா.பார்த்தசாரதி'' எழுதிய கட்டுரை.

18.12.64 நா.பா.வை கல்கி அலுவலகத்தில் சந்தித்தேன். தீபம் தொடங்கியது முதல் அவர் இறக்கும் வரை தினந்தோறும் சந்திக்கும் பழக்கத்தினால் நட்பும், பாசமும் ஏற்பட்டது. அவர் அளித்த கடற்கரை நினைவுகள் புத்தகத்தில் உடன்பிறவா சகோதரர் என்று எழுதி கையெழுத்து இட்டு அன்பளிப்பாக அளித்துள்ளார்கள். 1965ல் தீபம் ஆரம்பித்தஉடன் எனக்கு அரசு பணிக்கு உத்திரவு வந்தது. அந்த பணிக்கு மருத்துவச் சான்றிதழ் நா.பா.வின் நண்பர் டாக்டர் பி.எஸ்.கிருஷ்ணன் அவர்களிடம் காசு கொடுக்காமல் வாங்கித் தந்தார். அது போல் முன்பு நான் பணியாற்றிய நிறுவனத் திலிருந்து எனக்கு சம்பளமாக சேர வேண்டிய தொகை ரூ.150/–ஐ அவரது நண்பர் வழக்கறிஞர் திரு.எஸ்.ஆர்.எஸ். மூலம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து பெற்றுத்தந்தவர் நா.பா. தான். அதற்கு இன்று வரை திரு.எஸ்.ஆர்.எஸ். பணம் பெறவில்லை என்பதை நன்றியுடன் கூறிக் கொள்கிறேன்.

நான் பணியில் சேர்ந்த சில தினங்களுக்கு பின் தீபம் நிர்வாகி திரு. சு. திருமலைக்கு சிறைத்துறையில், தட்டச்சுப் பணி நியமனம் வந்தது. ஆனால் திருமலை அரசு பணிக்குச் செல்லாமல், ''தீபம்'' நிர்வாகியாகவே கடைசி வரை, நா.பா.விற்கு நன்றிக்கடனுடன் பணியாற்றினார். இன்றும் வாரப்பத்திரிகையில் ப்ரூப் பணியில் பணிசெய்கிறார். சென்ற ஆண்டு (2003) நா.பா. பிறந்த நதிக்குடிக்கு திருமலையும், நானும் சென்று வந்தோம். நா.பா. வாழ்ந்த, திருமணம் செய்த, பணியாற்றிய பள்ளிகளையும் பார்த்து அவர் நடந்த சுவடுகளில் நடந்து பசுமையான நினைவுகளை திருமலை கூற நான் மனதில் உள் வாங்கி கொண்டு சென்னை திரும்பினோம்.

1965ல் திருச்செங்கோட்டில் சிலம்பொலி செல்லப்பன் நடத்திய கண்ணகி விழாவில், சென்னையிலிருந்து நா.பா.வுடன் அவரது ''ஆஸ்டின்'' காரில் சென்று கலந்து கொண்டேன். அவ்விழாவில் டாக்டர் மு.வ. கவிஞர் கண்ணதாசனும் கலந்து கொண்டார்கள். திரும்பி வரும் பொழுது திரு ஒளவை நடராசனும் காரில் எங்களுடன் சென்னைக்கு திரும்பினார்.

மீண்டும் தீபம் ஏஜென்சி நியமிப்பதற்காகவும், கோவை யில் திரு.மு.வேலாயுதம் ஏற்பாடு செய்திருந்த இலக்கிய விழாவில் கலந்து கொள்வதற்காகவும் அதே காரில் சென்னையிலிருந்து

கோவைக்கு புறப்பட்டோம். அப்பொழுது மு.வேலாயுதம் தான் வைத்திருந்த சிறிய பெட்டிக்கடையில் ''தீபத்தையும்'' விற்பனை செய்து கொண்டிருந்தார். சுமார் இரண்டாயிரம் பிரதிகள் கோவையில் விற்பனையை உயர்த்திய பெருமை வேலாயுதத்தின் உழைப்பும், நா.பா.மீது அவர் வைத்திருந்த பாசத்தினால்தான். வேலாயுதம் மதுரை மேலூரை அடுத்த உலகநாதபுரம் கிராமத்தை சேர்ந்தவர். உலகநாதபுரத்தில் நடைபெற்ற அவரது தம்பி, தங்கையின் திருமணத்தில் நா.பா.வுடன் நானும் பங்கு கொண்டேன். ஈரோடு நண்பர் குருராஜனும் கலந்து கொண்டார்கள்.

1967ல் நா.பா.ரஷ்யா பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பியவுடன் அவருக்கு காஞ்சிபுரத்தில் ''நேரு சோசலிச பேரவை'' சார்பில் எனது உறவினர் திரு. மா. கச்சபாளையம் தலைமையில் ஓர் பாராட்டு கூட்டம் பச்சையப்பன் பள்ளியில் நடத்தினோம். அந்த கூட்டத்தில் (ராமாஸ் கேப்) வி.ஆர்.ஜியும் கலந்து கொண்டதாக நினைவு. அப்பொழுது சென்னையிலிருந்து ஸ்டேண்டர்ட் எரால்ட் காரில் நா.பா. வந்து சென்றார். எனது காஞ்சிபுரம் இல்லத்தில் உணவு அருந்தினார். இதற்கு முன் 1969ல் வேலூரில் நடைபெற்ற இலக்கிய கூட்டத்திற்கு சென்று திரும்பிய வழியில் காஞ்சியில் இருந்த காஞ்சி லாட்ஜில் இரவில் தங்கினோம். மறுநாள் எனது வீட்டிற்கு வந்து உணவு அருந்தினார். எனது தந்தையார் பட்டு நெசவு செய்ததை கண்டு, தறி விபரங்களை கேட்டு அறிந்தார். எனது தாயாரின் எண்ணெய் கத்திரிக்காய் குழம்பு விரும்பி சாப்பிட்டார். ஒரு பருக்கையும், ஓர் கருவேப்பிலையும் அவர் சாப்பிட்ட இலையில் காண முடியவில்லை. காரணம் உணவை வீண் அடிக்கக்கூடாது என்பதை அவர் மூலம் நான் உணர்ந்தேன்.

பல நாட்களில் நா.பா. தியாகராய நகர் வீட்டிற்கு மாலையில் அவருடன் சென்று இரவு உணவு, அவரது அம்மா கையினால் வத்தல் குழம்பு, சுட்ட அப்பளம் சாப்பிட்டது மறக்க முடியாது. திருமதி சுந்தரவல்லி அவர்கள் பரிமாறவும் உணவு அருந்தியுள்ளேன். நா.பா.வின் அம்மா மறைந்த போது அவருடன் இடுகாட்டிற்கு சென்றேன். அதோடு அவர்கள் குடும்ப நிகழ்ச்சிகளை பத்தாம் நாள் அன்று எனக்கு மற்றவர்களுடன் உணவு வழங்கினார்கள்.

பெரியகுளம் அருகிலுள்ள அநுமந்தம்பட்டி கிராமத்தில் நா.பார்த்தசாரதியின் அக்கா மகள் திருமணத்திற்கு திரு.கோவிந்த ராசனுடன் சென்று இருந்தேன். திருமணம் முடித்து திரும்பி வரும் பொழுது நா.பா. காரில் அவர் குடும்பத்துடன் மதுரை வந்து, அவரது மாமனார் திருமலை ஐயங்கார் ஊரான அழகர் கோயிலுக்குச் சென்று தங்கினேன். இடையில் மதுரையில் காலேஜ் விடுதியில் நான், நா.பா, பூரணி (அப்பொழுது இளம்வயது)உணவு அருந்தினோம். நா.பா.வின் பையை பூரணியிடம் ஒப்படைத்துவிட்டு நானும், நா.பா.வும் கை கழுவ சென்றோம். பின்னாலேயே பூரணி வந்துவிட்டார். திரும்பிச் சென்று பார்த்தால் கைப்பை காணவில்லை, போனது போனதுதான் – ஒரு வாறாக இருக்கின்ற பணத்தில் பெட்ரோல் போட்டு சென்னை திரும்பினோம். அழகர் கோயிலில் நானும், திருமலையும் நா.பா.வின் மாமனார் திருமலை ஐயங்காரை சென்ற ஆண்டு சென்ற போது சந்தித்தோம். நா.பா.வின் முயற்சியினால் தமிழ் வித்துவான் படித்து தமிழ் ஆசிரியர் பணிபுரிந்து ஓய்வுபெற்று சென்னையில் வசிக்கின்ற அவரது அண்ணன் நா. சீனிவாசன் ஐயங்கார் அவர்களை திருமலையுடன் சென்ற ஆண்டுச் சந்தித்தேன்.

தீபத்தின் குடும்பத்தைச் சேர்ந்த சங்கரிபுத்திரன் தீபம் முதல் பிரதியை கொடுத்தார். அதிலிருந்து நா.பா.வின. தலையங்க கட்டுரையை இப்புத்தகத்தில் இணைத்துள்ளோம்.

1969–செப்டம்பரில் குறிஞ்சிமலர் உதகையில் பூத்துக் குலுங்கியது. உதகையில் இலக்கிய நண்பர் கிருஷ்ணசாமி ஏற்பாடு செய்திருந்த இலக்கிய விழாவில் கலந்துகொள்ள நானும் நா.பா. வுடன் சென்று இருந்தேன். அப்பொழுது ஈ.ரோடு. குருராஜனும் ஈ.ரோட்டிலிருந்து உதகைக்கு எங்களுடன் வந்தார். கிருஷ்ணசாமி காரில் தான் குறிஞ்சி மலர்களை உதகையில் நடுவட்டம் பகுதியில் கண்டு களித்தோம். ஓர் நாள் இரவு 12 மணிக்கு மேல் – உதகையில் உள்ள முதுமலை காட்டிற்கு காரில் அழைத்து சென்று மிருகங்களை காண்பித்தார்.

அச்சுக் கோப்பு பகுதிதான் முதலில் தீபம் அச்சகத்தில் ஏற்பட்டது. அதற்கு அண்மையில் மறைந்த ராஜதுரை பொறுப்பேற்று ஆரம்பம் முதல் நா.பா.மறைந்த பிறகு வெளிவந்த கடைசி தீபம் வரை அவர் பணியில் இருந்தார். இவர் திருமணம்

செய்து கொள்ளவில்லை. புரசை எஸ். ரங்கநாதனுக்கு சொந்தமான ராஜீவ் பிரிண்டிங் பிரஸ்சில் எனது முயற்சியினால் வேலைசெய்து 98 ஜுன் மாதம் மறைந்தார். அவரது உடல் கேட்பாரற்று ஒருவாரம் ராயப்பேட்டை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாக அறிந்து மனம் வருந்தினோம். தினமணியில் இவரது மறைவுச் செய்தி வெளிவந்தும் உறவினர்கள் யாரும் வரவில்லை. நக்கீரன் கோபால் மூலம் முயற்சித்து வந்தவர்கள் இதோ வருகிறேன் என்று பின்பு எட்டிப் பார்க்கவில்லை. உயிரோடு இருக்கும் பொழுது இவரது அண்ணன் மகன்கள் வந்து பயன் பெற்றார்கள் என்பது தான் இதில் சோகமான நிகழ்வு. தீபம் அச்சகத்தில் சிம்சன் கம்பெனியின் தொழிலாளர்களின் யூனியன் பத்திரிக்கை "சங்கநாதம்" உப்பிலி சீனிவாசனை துணை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்தது. கணையாழியும் முதல் முதலில் கஸ்தூரி ரங்கன் மேற்பார்வையில், அசோகமித்திரன் (ஜ. தியாகராஜன்) அவர்கள் பொறுப்பாசிரியராக தீபம் அச்சகத்தில் தான் அச்சிடப்பட்டது. தீபம் அலுவலக மாடியில் பவர் என்ற அமைப்பின் மூலம் அடிக்கடி இலக்கியக் கூட்டங்களை நா.பா. நடத்தினார். இந்த அமைப்பில் அசோக மித்திரன் முக்கிய பணிகளைச் செய்தார்.

நா.பார்த்தசாரதியின் உறவினர். திரு. ஆர்.அனுமந்த் கோவிந்த ராஜ் அவர்கள் எனக்கு அறிமுகமானார்கள். அவர் மத்திய அரசு நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார். மாலை வேளையில் தினந்தோறும் தீபம் அலுவலகத்திற்கு வருவார். அவர் தீபம் நிர்வாகத்தின் ஆங்கிலக் கடித போக்குவரத்தை கவனித்துக் கொண்டார். மேலும் அவர் குடும்பத்தின் முன்னோர்கள் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்கள். அதனால் அவரும் கதர்தான் அணிந்திருப்பார். நா.பா.விற்கு காமராஜ் அவர்களை அறிமுகப் படுத்தியவர் இவர்தான். மயிலை மாங்கொல்லையில் முதன் முதலில் சிந்தனையாளர் மன்றம் என்ற அமைப்பை காங்கிரஸ் சட்ட சபைக் கட்சி அலுவலகத்தில் ஏ.என். சிவராமன் தலைமையில் நா.பா. தொடங்கி நடத்தி வந்தார். மறைந்த புலவர் வெ. புகழேந்தி காரியதரிசியாக இருந்தார். காங்கிரஸ் கட்சியை ஆதரித்து நா.பா. பேசினார். இதன் பிறகு கால வெள்ளத்தில் அடிப்பட்டு அரசியலில் இருந்து ஒதுங்கி இருந்தார். 1980 களில் நா.பா.வின் மூத்த மகள் பூரணியின் திருமணமும், மகன் நாராயணனின் பூநூல் அணிவித் தலும் தி.நகரிலுள்ள மீனாட்சி திருமண மண்டபத்தில் மூன்று

நாட்கள் நடைபெற்றன. இத்திருமணத்திற்கு குறிஞ்சிபாபு, குறிஞ்சி வேலன், அமெரிக்க தூதரகத்தில் பணியாற்றிய நடராஜன், மேத்தா, மு. வேலாயுதம், சேவற்கொடியோன் போன்ற நெருங்கிய இலக்கிய நண்பர்கள் கலந்து கொண்டார்கள். இந்த திருமணத்திற்கு கலைஞர், ஆற்காடு வீராசாமி, திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி, முன்னாள் முதல்வர் பக்தவத்சலம் வந்து வாழ்த்துத்துகிறார்கள். 1982 ம் ஆண்டு ஜனவரி மாதம் தைப்பூசத் திருநாளை கடலூர் திருப்பாதிரிப் புலியூர், ஞானியாரடிகள், மடத்தில் நடைபெற்ற ஐந்தாம் குருநாதராகிய ஞானியாரடிகள் குருபூசையில் கொண்டு ஞானியாரடிகளின் தமிழ் பணியின் பெருமைகளை விரிவாக இரண்டு மணி நேரம் சொற்பொழிவு ஆற்றினார். இக்கூட்டத்தில் புலவர்.வெ. புகழேந்தி கலந்துக் கொண்டார். அன்று பகல், இரவு எனது துணைவியாரின் தாய் வீட்டில் தங்கினார். நீண்ட நாட்களுக்குப் பிறகு கிணற்றில் வாளியில் தண்ணீர் இறைத்து ஆனந்தமாகக் குளித்தார். மிகுந்த மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். இக்கூட்டத்தில் குறிஞ்சி வேலன், நடராஜன் போன்ற நண்பர்கள் நா.பா.வுடன் இருந்தனர். ஊருக்கு அருகிலுள்ள தேவனாம் பட்டிணம் திருமால் கோயிலுக்கு சென்று வந்தோம்.

1984 ம் ஆண்டு செகந்தராபாத்தில் விஜயா பதிப்பகம் சார்பில் மு.வேலாயுதம் புத்தகக் கண்காட்சியை 10 நாட்கள் நடத்தினார். அதை தொடங்கி வைக்க நா.பார்த்தசாரதி வந்தார். நானும் சென்று இருந்தேன். இங்கு நடைபெற்ற இலக்கியக் கூட்டங்களில் திரு.சுஜாதா, திருப்பூர் சுப்ரபாரதி மணியன், திருமதி. அனுராதா ரமணன் போன்ற எழுத்தாளர்கள் பங்கு கொண்டனர். அப்பொழுது தான் திருப்பூர் கிருஷ்ணனுக்கு ஐதராபாத்தில் பெண் பார்த்து திருமணத்தை நிச்சயப்படுத்தினார் நா.பா.

15-11-1987 ஆம் ஆண்டு மலேசியாவில் 6வது உலக தமிழ் மாநாடு மலேசியா அமைச்சர் டத்தோ சாமிவேலு தலைமையில் நடை பெற்றது. இம்மகா நாட்டை தலைவர் கலைஞர் ஆய்வரங் கங்களை துவக்கி வைத்து பேருரை ஆற்றினார். இரண்டு நாள் கழித்து தலைவர் கலைஞர் சென்னைக்குத் திரும்பி விடுகிறார். இரண்டு நாட்களுக்கும் பிறகு நா.பார்த்தசாரதி உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள தலைவர் கலைஞரை சந்தித்து விட்டு மலேசியா செல்கிறார். மாநாட்டில் கலந்து கொண்டும், நண்பர்கள் வீட்டிற்கு சென்று நண்பர்களைப் பார்த்து விட்டு டிசம்பர்

முதல்வாரத்தில் சென்னைக்கு விமானத்தில் புறப்பட்டு வருகிறார். வரும் வழியிலேயே இதய நோய் நா.பாவை தாக்குகிறது. வீட்டிற்கு தகவல் அனுப்பப்படுகிறது. சென்னை விமான நிலையத்தில் அவரது மருமகன், மகள், குடும்பத்தினர் எதிர் கொண்டு அழைத்து வந்து, வரும் வழியில் கத்திப்பாரா அருகிலுள்ள பாலாஜி மருத்துவ மனையில் அனுமதிக்கப் படுகிறார். மருத்துவ மனையில் நானும் சென்று பார்த்தேன். இடியாப்பம் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். நான் வாங்கிச் சென்ற ஆப்பிலை சிறியதாக பொடியாக்கி சிறிது சாப்பிட்டார். ஒருவாரத்தில் நன்கு குணமாகி வீடு திரும்பினார். 12–12–87 காஞ்சிபுரம் சென்று விட்டேன். 13–12–87 ஞாயிறு மாலை சென்னை திரும்பும்போது வீட்டிற்கு வரும் வழியில் இரவு 8 மணி டி.வி.செய்தியில் நா.பா. மாரடைப்பால் மறைவு செய்தியை அறிந்து மிகவும் வருந்தினேன். மறுநாள் காலை வீட்டிற்குச் சென்று துன்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்டேன் . இடுகாட்டில் சிறிய இரங்கல் கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது தீபம் வாசகர் வட்டம் துவக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. பிறகு ஞானியாரடிகள் தமிழ் மன்றம் சார்பில் வருடா வருடம் அவர் மறைவு தினத்தில் கூட்டம் நடை பெற்றது.

நா.பார்த்தசாரதி மறைவுச் செய்தியை அறிந்து தலைவர் கலைஞர் 15–12–87 அன்று முரசொலியில் கீழ் கண்ட இரங்கல் செய்திபதிவு செய்யப்பட்டுள்ளது. தீபம் பார்த்த சாரதி மறைவு குறித்து கடலூரிலிருந்து தலைவர் கலைஞர் அனுப்பியுள்ள இரங்கல் செய்தி:–

இறந்த எழுத்தாளரும் கவிஞருமான எனது நண்பர் தீபம் நா.பார்த்தசாரதி அவர்கள் திடீரென இயற்கையெய்திய செய்தி கண்டு அதிர்ச்சியுற்றேன்.

அரசியல் துறையில் எனக்கும், அவருக்கும், பல்வேறு கருத்து வேறுபாடுகள் இருப்பினும், இலக்கியத்துறையில், எழுத்துத் துறையில் நாங்கள் ஒருவரையொருவர் இதயமார நேசித்தோம். இருவரும் பொது நிகழ்ச்சிகளில் மட்டு மின்றி தனித்து உரையாடி மகிழ்ந்தவர்கள். கடித வாயிலாக தொடர்பு கொண்டு தோழமையை வளர்த்தவர்கள்.

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்கு சென்று திரும்பிய பிறகு ஆராய்ச்சி கருத்தரங்கில் கலந்துகொள்ள இரண்டு நாட்களுக்குப் பிறகு மலேசியா சென்றார்.

அப்போது அவரிடம் மலேசிய நண்பர்களுக்கு நான் அனுப்ப இருந்த நன்றிக் கடிதங்கள் சிலவற்றை அவரே கொண்டுபோய் சேர்ப்பதாக வாங்கிச் சென்றார். எதிர்ப்பில் கடுமையிருந்தாலும் இதய மார பழகுவதில் இனிய தன்மை கொண்ட நண்பர் 'தீபம்' பார்த்த சாரதியை இழந்துவிட்ட துயரத்தைஅவருடைய குடும்பத் தாருடனும், நண்பர்களுடனும் நானும் பகிர்ந்து கொள்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் தனது ஆழ்ந்த இரங்கலை அயர்த்தி தீபம் பார்த்த சாரதி குடும்பத்தார்க்கு தந்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

1973 டிசம்பர் திங்களில் பெரியார் அவர்கள் மறைந்து விடுகிறார். 1947 திங்கள் தீபம் ஜனவரி இதழில் இலக்கிய மேடையில் கீழ் கண்ட கேள்வியும், பதிலும் பதிவு செய்யப்பட் டுள்ளது.

கேள்வி :- அமரர், ஈ.வெ.ரா.வும் நீங்களும் எப்போதாவது சந்தித்துள்ளீர்களா ?

பதில் :- ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன் சென்னை துறைமுகப் பகுதியில் நடைபெற்ற ஜீவானந்தம் சிலை திறப்பு விழாவில் இருவரும் ஒரே மேடையில் பேசினோம். அருகே இருந்த பாலதண்டாயுதம் அவர் வந்ததும் என்னை அறிமுகம் செய்து வைத்தார். நான் எழுந்து நின்று அவரை வரவேற்றேன். அவர் அன்போடு விசாரித்தார். "எங்கே வேலை பார்க்கீறீங்க? "என்று கேட்டார். சொந்தமாக பத்திரிகை நடத்த ஆரம்பித்தி ருப்பதாக கூறியதும் அது ரொம்பக் கஷ்டமாச்சே என்று அனுதாபப்பட்டார். கருத்து வேறுபாடுகள் பல இருந்தும் அந்த பழுத்த பழத்தை நேரில் கண்டபோது அவ்ரிடம் என்னையறியாமலே என்னுள் அன்பும் மரியாதையும் எழுந்தன.

நா.பா.வின் படைப்புகளில் குறிஞ்சிமலரில் வருகின்ற கதாபாத்திரங்கள் அரவிந்தன், பூரணி மற்றும் பொன்விலங்கில் வருகின்ற பாரதி, விஜயா என்ற பெண் பாத்திரங்கள் பெயர்கள், அவரது இலக்கிய ரசிகர்களின் வீடுகளில் பிறந்துள்ள பிள்ளை களுக்கு சூட்டப்பட்டுள்ளன. இதில் நா.பா. தன் மூத்த மகளுக்கு பூரணி என்றும் இரண்டாவது மகளுக்கு பாரதி என்றும் பெயர்

சூட்டி மகிழ்ந்தார். அதுபோல் மு.வேலாயுதம், தன் மூத்த மகனுக்கு அரவிந்தன் என்றும் தனது ஒரே மகளுக்கு விஜயா என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தார். கலைஞரின் மகன் திரு.மு.க.ஸ்டாலின், அரவிந்தனாக பாத்திரம் ஏற்று ''குறிஞ்சி மலர்'' என்ற தொலைக் காட்சி தொடரில் நடித்து தொலைக்காட்சி ரசிகர்களின் அன்பைப் பெற்றார்.

19.8.2003 குமுதம் ஜங்ஷன் வார இதழில் நா. பார்த்தசாரதி மகன் நா.பா. நாராயணனின் பேட்டி வெளிவந்துள்ளது. அதில் தன் குடும்பத்து செய்தியை நன்கு பதிவு செய்துள்ளார். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். க்கும் தனது தந்தைக்கும் ஏற்பட்ட நட்பையும் அதன் நிகழ்வுகளையும் விரிவாக எழுதியுள்ளார். இந்த இதழில் தலைவர் கலைஞர், திருமதி எம்.எஸ்., முன்னாள் முதலமைச்சர் பக்தவச்சலம், போன்றோர் பூரணி திருமணத்தை ஆசீர்வதிக்கும் புகைப்படமும் பிரசுரமாகியுள்ளது.

சமீபத்தில் 5.8.2004 அன்று திரு. வை.கோ.வின் நடைபயணம் நெல்லையில் தொடங்கிய செய்தியை செய்தித் தாளில் பார்த்தபோது, அந்தக் கூட்டத்தில் ஆலடி அருணா பேசும் போது நா.பா.வின் குறிஞ்சிமலர் அரவிந்தன் பாத்திரம் படித்து தான் வை.கோ.விற்கும், தனக்கும் இளமையில் இலட்சிய வேட்கை ஏற்பட்டதாக கூறியிருந்தார்.

15.9.2004ல் வை.கோ.வின் நடைபயணம் முடிந்தபோது தீவுத்திடலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய திரு. வலம்புரி ஜான் நா.பா.வின் குறிஞ்சிமலர் அரவிந்தன் இலட்சிய வாழ்க்கை தான் தனக்கும் திரு.வை.கோ.விற்கும் வலு சேர்த்ததாக பேசிய பேச்சை செய்திகளின் மூலம் அறிந்தேன்.

டிசம்பர் 2004ல் ஆசிரியர் வீரமணி அவர்கள் பெரியார் மையத்தில் ஆற்றிய உரையில் சாகித்திய அகாடமி பரிசு ஓர் எழுத்தாளர் எப்படி பெற்றார் என்று தீபம் இதழில் நா.பா. எழுதிய கட்டுரையை வாசித்துக் காட்டினார் என்ற செய்தியையும் செய்தித்தாளில் பார்த்தேன்.

''தீபம்'' நா.பார்த்தசாரதி தான் எழுதிய எழுத்துக்கள் இருக்கின்ற வரையிலும், தீபம் இதழ்கள் தமிழ் பேசும் தமிழ் சமுதாயத்தில் பாதுகாக்கபடுகின்ற வரையில், வருகின்ற தமிழ் இளைஞர்கள் நினைவு படுத்திக் கொண்டே இருப்பார்கள்.

''எழுத்து உலகின் நட்சத்திரம் ''தீபம்' நா.பார்த்தசாரதி'' என்ற புத்தகத்தின் முதல் அட்டைப்படத்தை கொடுத்துதவிய ஆனந்த விகடன் நிர்வாகத்திற்கும், பின் அட்டையின் படத்தை, ''பாண்டி மாதேவி'' வெளிவந்த கல்கியின் இதழ்களை பத்திரமாகப் பாதுகாத்து எங்களுக்கு கொடுத்துதவிய நண்பர் திரு. ஏ.என்.எஸ். மணியன் அவர்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். ''எனது வேலை நீக்கம்'' கட்டுரைப் பகுதியை தாமரையிலிருந்து எடுத்து வெளியிட அனுமதியளித்த ''தாமரை'' பத்திரிகை நிர்வாகத்திற்கும் நன்றி.

''தீபம்'' 1983 ஜனவரி மாத இதழில் ஒரு கேள்விக்கு நா.பா. பதில் தருவதை படித்துப் பாருங்கள்.

கேள்வி : தீபம் வெள்ளிவிழாக் கொண்டாடுமா?

பதில்: வெள்ளிவிழா மட்டுமென்ன பொன்விழா, நூற்றாண்டு விழா எல்லாம் கூட கொண்டாடும். அந்த மகிழ்ச்சியில் கலந்து கொள்ளும் பாக்கியம் உமக்கு இருக்குமாக.

''மாற்றம் என்பது மட்டும் மாறாதது'' என்ற கீழை நாட்டு மார்க்சின் சிந்தனைகள் தான், கடல் கோள் ஏற்பட்டாலும் மாறாது இருக்கும் போலும்.

20.12.2004 அ.நா. பாலகிருஷ்ணன

# எனது நண்பர் 'நா.பா.'

## த. ஜெயகாந்தன்

நண்பர் நா. பார்த்தசாரதி அமரராகி 18 ஆண்டுகள் சென்றது தெரியவில்லை. நா.பார்த்தசாரதி எப்போதும் போல் நம்முடன் தான் இருக்கிறார். தன் படைப்புகளின் மூலம் என்று மெய்யாகவே உணருகிறவன் என்ற படியினால் அவர் மறைவில் எனக்கு சோகம் ஏதும் இல்லை. ஆனாலும் அவரது குடும்பத்தார், சுற்றத்தார் தினசரி நெருங்கிப் பழகிய அனைவரும் இந்த 18 ஆண்டுக்காலத்தில் குறைந்த பட்சம் 18 முறையாவது அவரது பிரிவை உணர்ந்திருப்பார்கள் என்று என்னால் உணர முடிகிறது.

ஒருவரின் பிரிவினால் நம் மனத்தில் சூழ்கிற சோகம், அவரைப் பற்றிய நினைவுகளினால் மகிழ்ச்சி தரும் என்றால் அந்த மனிதர் மிக மிக நல்ல மனிதர் என்று அர்த்தம். அத்தகு மனிதரை மக்கள் இனம் மறப்பதே இல்லை. அவ்வாறு எனது நினைவில் வாழுகின்ற நா. பார்த்தசாரதி எனது எழுத்தால் ஈர்க்கப்பட்டு என்னைத் தனது நண்பராகக் கொண்டார்.

அவர் திருமால் மாதிரி பெரிய ஆகிருதி உள்ளவர் என்றாலும் பெண்மையும், நளினமும் மிகுந்தவர். இனிமையாகப் பேசுகின்ற சுந்தரபுருஷர். அவரது உருவமே என்னைக் கவர்ந்தது.

அப்போது அவர் பசுமலையில் இருந்தார். நான் மதுரைக்குச் சென்றபொழுது ஒரு கூட்டத்தில் சந்தித்து வீட்டிற்கு அழைத்துப் போய் விருந்து கொடுத்து உபசரித்தார். எனக்கு அய்யங்கார் வீட்டு சாப்பாடு ரொம்பப் பிடிக்கும். அது அவருக்குத் தெரிந்திருந்தது. அதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, அவர் ஒரு வைஷ்ணவனை ஒரு வைஷ்ணவன்தான் அறிந்து கொள்வார்' என்றார். நான் வைணவன் இல்லையே என்றேன். உங்கள் பெயர் விஷ்ணு சகஸ்ரநாமத்தில் வருகிறது என்று புரிந்து கொண்டதற்கு விளக்கம் தந்தார். ''நான் பாதி வைஷ்ணவன்'' என்றேன்.

என் தாய் வழி வைஷ்ணவம், என் தந்தை வழி சைவம். எங்கள் ஜாதியில் இந்த இரு பிரிவினருக்கும் கொள்வினை, கொடுப்பினை உண்டு. இப்போது சொல்லுங்கள்'' என்றேன்.

இரண்டும்தான், எல்லாம்தான் என்று சிரித்தார். எங்களது இருபத்தைந்தாவது வயதில் இவ்வண்ணம் தொடங்கிய நட்பு இறுதிவரை அவ்வாறே நீடித்தது. அவர் இருந்திருந்தால், தமிழர் கள் அலைகிறார்களே; அந்த ஞானபீட பரிசை எப்போதோ வாங்கித் தந்து இருப்பார். சாகித்திய அகாடமியின் தலைவராகி இருப்பார். பல அற்புதமான படைப்புக்கள் கிடைத்திருக்கும். நூறு வயது வரை அவர் இருந்து இருந்தாலும் ஒருபோதும் சோர்ந்து போய் இருக்க மாட்டார்.

அவரது நினைவில் தோய்ந்து அவரது படைப்புகளில் ஆறுதல் காணுகிற நண்பர்களோடு என் உணர்வுகளை இக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்கிறேன்.

# அமரர் 'நா.பா.' சில நினைவுகள்

**தீ.க. சிவசங்கரன்**

*அமரர் நா.பார்த்தசாரதியின் நினைவுகள், நினைக்க நினைக்கத் துயரும், இனிமையும் தருபவை.*

*18–12–1932 இல் ராமநாதபுரம் மாவட்டத்தில் நதிக்குடி என்னும் சிற்றூரில் பிறந்து 13–12–1987 இல் சென்னை மாநகரில் மறைந்த இந்தத் தமிழ் எழுத்தாளன் வாழ்வும் பணிகளும் ஒரு தனி நூலாக எழுதப் பெற்றால், இன்றையத் தமிழ் இலக்கிய வரலாற்றின் முக்கியப் பகுதிகளை அதில் ஓரளவு காண முடியும்.*

*1932இல் ஒரு தமிழ் நாட்டுக் கிராமத்தில் பிறந்த இந்த இளைஞன், வசதியான பொருளாதாரச் சூழ்நிலையைப் பெற்றிருக்கவில்லை. எனினும், மதுரையில், தமிழில், 'வித்துவான்' பட்டம் பெற்று, அங்குள்ள ஓர் உயர்நிலைப் பள்ளியில் இரண்டு ஆண்டுகள் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1960 முதல் 1965 வரை 'கல்கி'யில் உதவி ஆசிரியராக விளங்கினார். பின்னர் 1965 ஏப்ரலில் தமது சொந்த இலக்கிய இதழான 'தீபம்' மாதப் பத்திரிகையைத் தொடங்கி 1987 நவம்பர் வரை. தமது மேற்பார்வையில் அதை நடத்தி வந்தார். இடையில் சில ஆண்டுகள் (1979 முதல் 1983–84 வரை) தினமணிக் கதிரின் பொறுப்பாசிரியராகவும் விளங்கினார். 1987 டிசம்பர் 13 இல், தமது 55ஆம் வயதில் மறைந்தார்.*

*இந்தச் சிறிய குறிப்புகளின் பின்னே, வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்ட ஒரு தமிழ் எழுத்தாளனின், மகாகவி பாரதியின் வழியைப் பின்பற்றிய ஒரு லட்சியவாதியின், நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இனப் பற்று இவற்றின் அடையாளமாகத் திகழ்ந்த ஒரு படைப்பாளியின் வெற்றிகளும், தோல்விகளும், நெஞ்சுரமும், வேதனைகளும், கடுமையான உழைப்பும், சாதனைகளும் அடங்கியுள்ளன.*

*நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், மொழி பெயர்ப்பு முதலிய பல துறைகளில் ஏறத்தாழ 80 நூல்களை வெளியிட்டுள்ள நா.பா. எழுத்தாளர், பத்திரிகை ஆசிரியராக மட்டுமின்றி, அருமையான இலக்கியப் பேச்சாளர், சாகித்ய அகாதமியின் தமிழ் மண்டல அமைப்புச் செயலாளர், பொது நல*

ஊழியர் எனப் பல வகைகளிலும் சுறுசுறுப்பாகப் பணி புரிந்தார். இலங்கை, மலேசியாவிலும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சுற்றுப் பயணம் செய்துள்ளார்.

'குறிஞ்சி மலர்' – மூலம் பிரபலமான நா.பா.வுக்கும், எனக்கும் நேரில் நட்புறவு ஏற்பட்டது எப்போது? 1964 டிசம்பர் 14 ஆம் தேதியிலிருந்து 25 ஆண்டுகள் தொடர்ச்சியாக நான் சென்னையில் வாழ்ந்த காலத்தில் எங்களிடையே நேர்முக உறவு ஏற்பட்டு, நாள் தோறும், மாதந்தோறும் பல ஆண்டுகள் வளர்ந்தது, வலுப்பெற்றது. அவரது இறுதிக் காலம் வரை மணம் வீசியது.

1960 முதல் எனக்கும் நா.பா.வுக்கும் இடையே அவ்வப் போது கடிதத் தொடர்பு இருந்தது. அச்சமயம் நான் நெல்லையில் இருந்தேன். 'தாமரை'யில் வந்த என் எழுத்துக்கள் பற்றி அவர் எழுதுவார். 'தாமரை'யிலும் பிற ஏடுகளிலும் வந்த அவரது படைப்புக்கள் பற்றி நான் பதில் எழுதுவேன். இப்படியாகக் கடிதத் தொடர்பு மட்டும் இருந்தது.

1965 ஜனவரியில் எங்கள் நேரடித் தொடர்பு சென்னையில் ஏற்பட்டது. அப்போது அவர் 'கல்கி'யிலிருந்து, தமது கொள்கைப் போராட்டத்திற்காக வேலை நீக்கம் செய்யப் பெற்ற காலம்.. புதுமைத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு வணிக ஏடுகள் பெரிய இடையூறுகள் செய்கின்றன. நச்சு இலக்கியத்தை வளர்ப்பதிலும், நல்ல இலக்கியத்தை எதிர்ப்பதிலும் இவை எவ்வாறு முனைந்து நின்றன. இவை பற்றியெல்லாம் பல நாட்கள் பல மணிநேரம் விவாதித்தோம்.. எங்களுக்குள் இந்த விஷயத்தில் கருத்து உடன்பாடு ஏற்பட்டது. அப்போது கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு எங்கும் கிளை பரப்பி வந்தது. அதன் அமைப்பாளர் தோழர் ப.ஜீவா அவர்கள் மறைந்து விட்டாலும், பேராசிரியர் நா.வானமாமலை, டாக்டர் எஸ் ராமகிருஷ்ணன், கே.பாலதண்டாயுதம், ஆர்.கே.கண்ணன், தொ.மு.சி. ரகுநாதன், ஜெயகாந்தன், கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், குன்றக்குடி அடிகளார் முதலான பலர் ஒவ்வொரு மாவட்டத்திலும் வீறுடன் பணியாற்றி வந்தனர். பெருமன்றத் தின் சிறப்புக் கூட்டங்களில் நா.பா.வும் பங்கேற்றார். அத்துடன் 'தாமரை'யிலும் வல்லிக்கண்ணன், ஆர். சூடாமணி மற்றும் பலரைப் போன்று, சிறுகதைகளும் எழுதி வந்தார்.

1965 இல் 'தாமரை'யின் பொறுப்பாசிரியராகப் பணியேற்ற நான் ''எனது வேலை நீக்கம்'' என்னும் தலைப்பில் 'தாமரை'க்கு ஒரு கட்டுரைத் தொடர் தருமாறும், 'கல்கி'யில் உதவி ஆசிரியர் என்ற முறையில் அவரது அனுபவங்களை ஒளிவு மறைவின்றி எழுதுமாறும் கேட்டுக் கொண்டேன். நா.பா . அதற்கு இசைந்தார். பல மாதங்கள் தாமரையில் அந்தக் கட்டுரைத் தொடர் வந்தது. தமிழ் இலக்கிய உலகில் ஒரு பரபரப்பு ஏற்பட்டதுமின்றி, வணிக ஏடுகளில் பணியாற்றும் உதவி ஆசிரியர்கள் எவ்வாறு கொத்தடிமைகளாக நடத்தப் படுகிறார்கள் என்பதையும், நா.பா.வின் கட்டுரைத் தொடர் அம்பலப்படுத்திற்று. தமது நல உரிமைகளுக்காகப் போராடும் ஒன்றிரண்டு உதவி ஆசிரியர்களும் இல்லாமல் இல்லை என்பதையும், அது தெளிவு படுத்தியது.

'கல்கி'யில் வேலை இழந்த நா.பா. சும்மாயிருக்க விரும்பவில்லை. தி.ஜ.ர. கு. அழகிரிசாமி, அகிலன், வல்லிக் கண்ணன், வெ. சாமிநாத சர்மா மற்றும் பல தேசபக்தர்களையும், லட்சியவாதிகளையும், பிரபல எழுத்தாளர்களையும், கலைஞர் களையும் சந்தித்தார். கோவை 'விஜயா' பதிப்பக உரிமையாளர் மு.வேலாயுதம், சேவற்கொடியோன், சென்னை பாலகிருஷ்ணன், மற்றும் பல இளைஞர்கள் அவருக்குத் துணையாக நின்றனர். 'தீபம் இலக்கியக் குடும்பம்' உருவாயிற்று. அக்குடும்பத்தின் ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும், 1965 ஏப்ரலில் 'தீபம்' மாத இதழ் தோன்றியது. நா.பா.ஆசிரியராகவும், அவரது அக்காள் மகன் (மருமகன்) எஸ்.திருமலை உதவி ஆசிரியர் மற்றும் நிர்வாகியாகவும் பணியாற்றினர்.

1965 இல் 'தீபம்' தொடங்கியது. 1987 டிசம்பரில் நா.பா. மறைந்த பிறகு, 1988 மார்ச் – ஏப்ரல் வரை 3 இதழ்களைத் திருமலை வெளியிட்டார். அத்துடன் தீபமும் மறைந்தது. எனினும், தனது 23 ஆண்டுக் கால வாழ்வில், புதுமைத் தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும், புதிய எழுத்தாளர்கள் பலருக்கு ஆதரவும் ஊக்கமும் அளிப்பதிலும் 'தீபம்' கணிசமான சாதனை புரிந்துள்ளது என்பதில் ஐயமில்லை. தமிழ் இலக்கிய வரலாற்றில், அறுபது, எழுபது, எண்பதுகளில் தீபத்தின் சாதனை ஒளிமயமான எழுத்துக்களில் பொறிக்கப்படும் என்பது உறுதி.

1965 முதல், தீபத்தின் வளர்ச்சியில் நானும் சிறிது பங்கேற்றேன். 'மணிக்கொடி' சீனிவாசன், டி.எஸ். சொக்கலிங்கம், நா.வானமாமாலை, தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோரைத் 'தீபம்' சார்பில் பேட்டி கண்டேன். இத்தகைய பேட்டிக் கட்டுரைகளுடன், தீபத்தில் நடைபெற்ற இலக்கிய விவாதங்களிலும் பங்கேற்றேன். நூல் மதிப்புரைகளும் எழுதினேன். என்னை விட மிக அதிகமாக எழுதி, 'தீப'த்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர் முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் என்பதை இங்கே அவசியம் குறிப்பிட வேண்டும். சி.சு.செல்லப்பா, க.நா.சுப்ரமணியன், தி.ஜானகி ராமன், இந்திரா பார்த்தசாரதி, ஆதவன், வண்ணதாசன், வண்ணநிலவன், சுந்தர ராமசாமி மற்றும் எத்தனையோ தலை சிறந்த எழுத்தாளர்களையும், வாசகர்களையும் ஒருங்கிணைக்கும் பாலமாகத் 'தீபம்' ஒளிவீசியது என்று பெருமிதத்துடன் குறிப்பிடலாம். இதில் இலங்கைப் படைப்பாளிகளும் அடங்குவர்.

1960 ஆம் ஆண்டுகளில் கலைமகள், அமுதசுரபி முதலிய இலக்கிய மாத இதழ்களும் வந்தன. 'எழுத்து' முதலிய சிற்றேடுகளும் வந்தன. 'தாமரை'யும் வந்தது. எனினும், தரமான இலக்கியம் படைக்கும் பல படைப்பாளிகளை ஒருங்கிணைக் கும் சீரிய அரங்கமாகத் 'தீபம்' வெற்றிகரமாகப் பணியாற்றியது. அதற்கான அடிப்படைக் காரணம், 'தீபம்' என்ற கப்பலைத் திறம்படச் செலுத்திய ஆசிரியர் நா.பா.அவர்கள்தாம்.

நல்ல தரமான, ஆக்கப் பூர்வமான கலை இலக்கியத்தை வளர்த்தல், இந்திய இலக்கியத்திற்கு, உலக இலக்கியத்திற்கு நிகராகத் தமிழ் இலக்கியத் தரத்தை உயர்த்துதல், இப்பணியில் அனைத்துப் படைப்பாளிகளையும் இணைத்தல், அவர்களது கருத்துச் சுதந்திரத்திற்கு, அவர்களையே பொறுப்பாக்குதல், சுருங்கச் சொன்னால், பாரதியின் பாதையைக் கலை இலக்கியத் துறையில் வழுவாது கடைப்பிடித்தல், இத்தகைய உன்னதக் கொள்கைகளைத் 'தீப'த்தில் நடைமுறைப்படுத்தினார் நா.பா. தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தொன்மையான தமிழ் மரபின் சிறந்த அம்சங்களை உள் வாங்கிக் கொண்டு, புதுமை இலக்கியங்களை நமது படைப்பாளிகள் உருவாக்க வேண்டும் என்பது நா.பா.வின் கருத்து. இது அவரது பத்திரிகையின்

இலட்சியமாக மட்டுமின்றி வாழ்க்கை இலட்சியமாகவும் இருந்தது. ஆம்: அவரது இறுதி நாள் வரை நீடித்தது என்பது நா.பா.வின் சிறப்பு. அவரது ஆளுமையின் முக்கியத்துவம்.

சாகித்ய அகாதமியின் தமிழ் மண்டலச் செயலராக அவர் இருந்த சில ஆண்டுகளில், சாகித்ய அகாதமிப் பரிசுகள் பெரும்பாலும் வாசகர்கள் ஏற்கத்தக்க வகையில் வழங்கப் பெற்றன. யார் யாருக்குப் பரிசு கிடைக்க வேண்டுமோ, தகுதியும், தரமும் இருக்கிறதோ அவர்கள் அனைவரும், குறிப்பாக மூத்த எழுத்தாளர்கள், பரிசு பெற நா.பா.காரணமாக இருந்தார் என்று குறிப்பிடலாம்.

நா.பா.வுடன் அடிக்கடி வல்லிக்கண்ணன் வீடு உள்பட பல இடங்களுக்குச் சென்னையில் சென்றிருக்கிறேன். சில காலம் தீபத்தில் அரும்பணி புரிந்த திருப்பூர் கிருஷ்ணனும், நா.பா.வும் ஆதம்பாக்கத்தில் எங்கள் இல்லத்திற்கு வந்து, ரசமான இலக்கிய உரையாடல்களில் ஈடுபட்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் விரிக்கிற் பெருகும். எனினும், நா.பா.வின் 'சுந்தரக் கனவுகள்' நாவல் வெளியீட்டு விழாவுக்காக நண்பர் 'விஜயா' வேலாயுதத்தின் அழைப்பின் பேரில் நா.பா.வுடன் ரயிலில் கோவை சென்றதும், அங்கே இலக்கியக் கூட்டத்தில் அந்நூலை நான் திறனாய்வு செய்ததும், கோவை இலக்கிய நண்பர்களைச் சந்தித்துவிட்டு நாங்கள் இருவரும் ரயிலில் சென்னை திரும்பியதும், இன்னும் நினைவலைகளாக நீங்கா இடம் பெற்றுள்ளன.

மொத்தத்தில் நா.பா.வுடன் நான் மிக நெருங்கி உறவாடிய 1965-1987 கால கட்டம், மிக இனிமையானது. எங்கள் நட்புறவு, பரஸ்பரம் அன்பும், மரியாதையும், தோழமையும் நிறைந்தது. நா.பா.வின் மறைவு என் வாழ்வில் நிரப்பவே முடியாத ஒரு வெற்றிடம். அவரது நினைவுகள் என் உள்ளத்தில் என்றும் பசுமையாக இருக்கும்.

# "தீபம் யுகம்"

## சின்னக்குத்தூசி

தந்தை பெரியார் அவர்களால் திருச்சியில் தொடங்கப்பெற்ற பெரியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் நான் பயின்று கொண்டிருந்த காலமது. அப்போது – திருச்சியில் இப்போது உள்ள தில்லை நகரை உருவாக்கும் வேலைகள் நடந்து கொண்டிருந்தன! புதிய கட்டிடங்கள் கட்டுவதற்காக வழி நெடுகிலும் குவியல் குவியலாக ஆற்று மணல் கொட்டப்பட்டிருந்தது.

அன்றைய கால கட்டத்தில் – இலக்கிய உலகில் அகிலனின் கொடி, பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது. தென்னூர் நெடுஞ்சாலையில் – அஞ்சல் நிலையத்துக்கு எதிர்ப்புறத்தில் பட்டாபிராமப் பிள்ளைத் தெருவில் வசித்து வந்தார் அகிலன். ரயில்வேயில் அஞ்சல் துறையில் (R.M.S.)பணி புரிந்து கொண்டிருந்தார் அவர்.

மாலை நேரங்களில் – வாரத்தில் ஓரிரு நாளாவது அவரை சந்திப்பதைப் பழக்கமாக்கிக் கொண்டிருந்தேன். அதே தென்னூர் நெடுஞ்சாலையில் இந்தி பிரச்சார சபா அருகேயுள்ள ஒரு கட்டிடத்தில் அறை எடுத்துத் தங்கியிருந்த சீர்காழியைச் சேர்ந்த ரஷீத், சம்பந்தம் ஆகிய இரு நண்பர்கள், நான் தங்குவதற்கு தங்களது அறையில் இலவசமாக இடம் தந்திருந்தார்கள். அங்கிருந்து அகிலனின் வீடு அதிக தொலைவு இல்லை.

அகிலன் விருந்தோம்பலில் தாராள உள்ளம் படைத்தவர். அவரை சந்திக்கச் செல்லும் பெரும் பாலான நாட்களில் எனக்கு மாலைச் சிற்றுண்டியும் வழங்குவார். பின்னர் புதியதாக உருவாகிக் கொண்டிருந்த தில்லை நகர் வளாகத்துக்கு இருவரும் செல்வோம். அங்கு கொட்டிக்கிடந்த மணற்குவியல்களில் ஒன்றைத் தேர்வு செய்து, அதிலமர்ந்து நீண்ட நேரம் பேசிக்கொண்டிருப்போம். அப்போது முன்னுக்கு வந்து கொண்டிருந்த புதிய எழுத்தாளர்கள் பற்றிய பேச்சு வரும்போதெல்லாம் நா. பார்த்தசாரதியின் எழுத்துக்களை மிகவும் பாராட்டிப் பேசுவார் அகிலன். நா.பா.வின் கதைகளில் உள்ள வாக்கியங்கள் சிலவற்றை அவர் அப்படியே மனப்பாடம் செய்தவர் போல் ஒப்புவிப்பார். இப்படி சமயம் வாய்க்கும் போதெல்லாம் நா.பா.வைப் பற்றி அகிலன் புகழ்ந்து

பேசும்போதெல்லாம், நா.பா.வை நேரில் சந்திக்க வேண்டும் என்ற ஆசை என் உள்ளத்தில் உரம் பெற்ற படியே இருந்தது.

1960களில் நான் சென்னைக்கு வந்து சேர்ந்தேன். காலஞ்சென்ற சொல்லின் செல்வர் ஈ.வெ.கி. சம்பத் அவர்கள் நடத்திய

தமிழ்ச் செய்தி என்ற நாளிதழில் பணிபுரிய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. சிறிது காலத்திற்குள்ளேயே அவரது தனிச் செயலாளராகவும் ஆகிவிட்டேன் நான்.

அந்தக் காலகட்டத்தில் – கலைஞன் பதிப்பக உரிமையாளர் நண்பர் மாசிலாமணி மூலம் எனக்கு அன்று பிரபலமாக இருந்த தமிழ்வாணன் உள்ளிட்ட பல பெரிய எழுத்தாளர்களின் நட்புக் கிட்டியது. நா.பா.வை சந்திக்கும் வாய்ப்பும் விரைவில் வந்துவிடும் என்று ஆவலோடு அந்த நாளுக்காகக் காத்திருந்தேன் நான்.

அந்த நாளும் வந்தது. ஆனால் அது மகிழ்ச்சிகரமான சந்திப்பாக இல்லை. வருத்தமே மேலோங்கிய ஓர் சூழ்நிலையில் நா.பா.என்னை வந்து சந்தித்தார்.

நா.பா. என்னை வந்து சந்திப்பதற்கு முதல்நாள் – சென்னை அமைந்தகரையில் லட்சுமி தியேட்டர் அருகே ஓர் அஞ்சலிக் கூட்டம். அது காலஞ்சென்ற கல்கி அவர்களின் நினைவாக – கல்கி ஊழியர்களே நடத்திய கூட்டம். அப்போது கல்கியின் துணை ஆசிரியராகப் பணியாற்றி வந்த நா.பா. அவர்களும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வார் என்று விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது.

'தமிழ்ச் செய்தி' அலுவலக வேலைகளை முடித்துக் கொண்டு நா.பா. வைக் காணவும் அவரது பேச்சைக் கேட்கவும், அமைந்த கரைக்குச் சென்றேன். கூட்டத்திற்கு ராஜா பாதர் என்னும் கல்கி ஊழியர் – 'போர்மன்' தலைமை வகித்ததாக நினைவு.

கூட்டத்தில் பேசிய எல்லோரும் 'கல்கி' யின் எழுத்தாற்றலை – மனித நேயத்தை அவரது சுதந்திரப் போராட்ட கால தியாகங்களை எல்லாம் போற்றிப் புகழ்ந்தார்கள். அதே சமயம் அவர்கள் எல்லோரும் தங்களது பேச்சின் ஒரு கட்டத்தில் "அமரர் கல்கிக்கு, கல்கி அலுவலக வளாகத்தில் திருவுருவச் சிலை அமைக்க வேண்டும் என்று நாங்கள் எல்லோருமே விரும்புகிறோம், ஆனால் நிர்வாகம் அனுமதிக்க மறுக்கிறது. கல்கி பத்திரிகையை தனது

எழுத்தாற்றலால் கட்டி வளர்த்த கல்கிக்கு சிலை எழுப்ப முடியவில்லை" என்று கோபம் கொப்பளிக்கப் பேசினார்கள். இறுதியில் பேச வந்த நா.பா.வும் உணர்ச்சி வசப்பட்டார். கல்கி நிர்வாகத்தைக் கண்டித்து, கல்கி சிலை நிறுவ வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார் அவர்.

அந்தக் கூட்டத்தின் மூலம் எனது நீண்ட நாள் ஆசையின் ஒரு பகுதி நிறைவேறியது. இன்னொரு பகுதி நிறைவேறவில்லை.

கூட்டம் முடிந்ததும் நா.பா. காரில் ஏறி விரைந்து விட்டார். ஆகவே அவரது சொற்பொழிவைக் கேட்க வேண்டும் என்ற ஆசை நிறைவேறியது. ஆனால் அவரை சந்தித்துப் பேச வேண்டும் என்ற ஆசை நிறைவேறவில்லை.

அமைந்தகரையிலிருந்து நுங்கம்பாக்கம் செல்லும் பேருந்தில் ஏறும்போதே (தமிழ்ச் செய்தி அலுவலகம் நுங்கம்பாக்கம் போலீஸ் நிலையம் அருகில் இருந்தது) அடுத்த நாள் பத்திரிகையில் இந்தக் கூட்டச் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட வேண்டும் என்று முடிவெடுத்து விட்டேன்!

மறு நாள் முதல்பக்கம் எட்டு க(ா)லச் செய்தியாக எதை வெளியிடுவது என்று யோசித்தபோது – கல்கி நினைவுநாள் கூட்டமே – முதல் பக்க – முதன்மைச் செய்திக்கு உரியது என்ற எண்ணம் எலுப்பட்டது.

'கல்கி' க்கு சிலை வைக்க
மறுக்கும் கல்கி
நிர்வாகத்தின் போக்கிற்கு
ஆசிரியர் நா. பார்த்தசாரதி
கடுங்கண்டனம்!

என்ற ரீதியில் தலைப்பிட்டு அதை ஒரு பெரிய செய்தியாக்கி விட்டேன்.

தமிழ்ச் செய்தி – சென்னையில் மாலையில் வெளிவரும் – அதே இதழ் மறுநாள் காலை வெளியூர்களிலும் கிடைக்கும்.

செய்தி வெளிவந்த சில மணி நேரங்களுக்குள் – தமிழ்ச் செய்தி அலுவலக டெலிபோன் கிணு கிணுத்தது.

டெலிபோனை எடுத்து நான் "தமிழ்ச் செய்தியிலிருந்து தியாகராசன் பேசுகிறேன் வணக்கம்" என்றேன்! அந்த

முனையிலிருந்து "நான் பார்த்தசாரதி பேசுகிறேன்; உங்களோடு ஒரு விஷயம் பேச வேண்டும்" என்ற பார்த்தசாரதியின் குரல் படபடத்தது. "எப்போது வேண்டுமானாலும் பேசலாம். உங்களுக்கு வசதிப்பட்ட நேரத்தைச் சொல்லுங்கள்; நானே உங்களை கல்கி அலுவலகத்தில் வந்து சந்திக்கிறேன்" என்றேன். "வேண்டாம் – நீங்கள் வரவேண்டாம்; நானே வந்து சந்திக்கிறேன்" என்று சொல்லிவிட்டுப் பேச்சை முடித்துக் கொண்டார் நா.பா..

மறுநாள் மாலை நாலரை மணியளவில் நா.பா. வந்தார். அவர் என்னை மெரினா கடற்கரைக்கு அழைத்துச் சென்றார். காரில் ஏறியதுமே,

"என்ன இப்படிச் செய்துவிட்டீர்களே" என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேள்வி எழுப்பினார். அந்த முதல் சந்திப்பிலேயே நா.பா.வுடன் நீண்ட நேரம் உரையாடும் வாய்ப்புக் கிட்டியது எனக்கு. ஆனால்,

நான் வெளியிட்ட செய்தியால், அவரது வேலை பாதிக்கப்படும் சூழ்நிலை ஏறப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்த போது, நான் மிகவும் வருந்தினேன். சில காலம் சென்ற பின் நா.பா. மீண்டும் டெலிபோன் செய்தார். கல்கிக்கும் அவருக்குமிருந்த உறவு முடிந்து விட்டது என்ற செய்தியை அவர் சொன்னார். "என்னாலே இப்படி ஆகிவிட்டதற்காக மிகவும் வருந்துகிறேன்; மன்னிக்க வேண்டும்" என்று நான் தழுதழுத்த குரலில் கூறியபோது – அவர்

"நீங்கள் பிரசுரித்த செய்தியும் ஒரு காரணமாக இருக்கலாம். ஆனால் அதுமட்டுமே காரணமல்ல; அதற்காக நீங்கள் வருந்த வேண்டாம்" என்றார்.

அதன்பிறகு நா.பா.வும் நானும் அடிக்கடி சந்தித்துப் பேசினோம். "நா.பா. சொந்தத்தில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும்" என்று அவரது நலனில் அக்கறை கொண்ட நண்பர்கள் பலரும் தெரிவித்த யோசனை பற்றியே பல நாட்கள் பேசினோம்.

நா.பா. சொந்தத்தில் பத்திரிகை நடத்தும் ஆலோசனையை – ஏற்று மாத ஏடு தொடங்கிட முடிவு செய்துவிட்டார். பத்திரிகையின் பெயர் "தீபம்" என்று அவர் சொன்னார். முழுக்க முழுக்க கதைகள், தொடர் கதைகளே போடாமல் – இலக்கிய விமர்சனங்கள், முழு அளவிலான பேட்டிகள், மொழி பெயர்ப்புக் கதைகள், புதிய

எழுத்தாளர்களுக்கு வாய்ப்பு அளித்தல் – அரசியல் விமர்சனங்களை – நடு நிலைக் கண்ணோட்டத்துடன் – அதே சமயம் தயவு தாட்சண்யத்திற்கு இடமின்றி எழுதுதல் – அவர் தனது சொந்த ஏடு பற்றி உறுதி பொங்கும் குரலில் உற்சாகத்துடன் சொன்னார்.

அப்போது என்னிடம் ஓர் உதவி கேட்டார். ''பத்திரிகையை வெளியில் கொடுத்து அச்சுக் கோத்துக் கொண்டு வருவதென்றால் செலவு அதிகமாகும். நமது விருப்பம்போல் பத்திரிகையின் வடிவமைப்பு அழகாக அமையாது போய்விடும். ஆகவே அலுவலகத்தில் சொந்தத்தில் அச்சுக் கோப்புப் பிரிவை அமைக்க முடிவு செய்திருக்கிறேன்'' என்றார்.

''அதற்கு நான் என்ன செய்யவேண்டும்?'' என்று கேட்டேன்.

''அச்சுக் கோப்புப் பகுதிக்கு ஒரு நல்ல கம்பாசிட்டர் வேண்டும். அவருக்கு இலக்கியத்தில் நல்ல ஆர்வமும் – படைப் பாளிகளிடம் மதிப்பும் இருக்க வேண்டும். அப்படி ஒருவர் கிடைத்தால் – பத்திரிகையின் வடிவமைப்பில் அவரே உற்சாகத்து டன் ஈடுபடுவார்''... என்று சொல்லிக் கொண்டே போனார்.

அப்போது தமிழ்ச் செய்தி அலுவலகத்தில் ராஜதுரை என்று ஒரு கம்பாசிட்டர் இருந்தார். புதுமைப் பித்தனில் தொடங்கி – அந்தக் காலக்கட்டத்தில் புகழ் பெற்றிருந்த அனைத்துப் படைப்பாளிகளின் நாவல்கள், சிறுகதைகள், கவிதைகளை எல்லாம் படிப்பார்; படித்ததை எல்லோரிடமும் உற்சாகம் பொங்க எடுத்துச் சொல்வார்.

நா.பா. பேசிக் கொண்டிருக்கும்போதே என் மனதில் ராஜதுரைதான் – நா.பா.விரும்பும் இலக்கிய ஆர்வம் கொண்ட கம்பாசிட்டர் என்பது பளிச்சிட்டது.

''எங்கள் அலுவலகத்திலேயே நீங்கள் குறிப்பிட்ட தகுதிகள் எல்லாம் கொண்டவர் ஒருவர் இருக்கிறார். அவரையே உங்களிடம் அனுப்பி வைக்கிறேன்'' என்று கூறி – ராஜதுரை என்ற கம்பாசிட்டரின் பெருமைகளை நா.பா.விடம் விலாவாரியாகச் சொல்லிக் கொண்டே போனேன்.

மறுநாள் – ஈ.வெ.கி. சம்பத் அவர்களை சந்தித்து ''ராஜ துரையை நா.பா.வுக்கு உதவியாக அனுப்பி விடலாம்'' என்றேன். சம்பத்துக்கு நா.பா.வின். எழுத்துக்கள் மீது ஈடுபாடு உண்டு. நா.பா., கல்கியிலிருந்து வில்க நேர்ந்ததற்கு வேறு எத்தனை காரணங்கள் இருந்தாலும் – தமிழ்ச் செய்தி வெளியிட்ட தலைப்புச் செய்தியும்

ஒரு காரணம் என்பது அவருக்குத் தெரியும் என்பதால் – ராஜதுரையை தீபத்துக்கு அனுப்பி வைக்க உடனடியாக இசைவளித்தார்.

ராஜதுரை நா.பா.வின் மறைவு – தீபத்தின் முடிவு வரையில் நா.பா. வோடும், தீபத்தோடும் கடைசி வரையில் இருந்தவர்களில் ஒருவர்.

தீபம் முதல் இதழ் வெளிவந்த போது, அது பெரும் பரபரப்பையும் வாசகர்கள் மத்தியில் உற்சாகமான வரவேற்பையும் பெற்றது.

தீபம் தொடங்குவதற்கான ஆரம்பக்கால ஏற்பாடுகளிலிருந்தே – நா.பா.வுக்கு உதவியாக – அவரிடம் – அவரது படைப்புகளிடம் மதிப்பும் – நேசமும் கொண்ட ஒரு குழு – தீபத்தின் வளர்ச்சியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு நா.பா.வுக்கு உறுதுணையாக இருந்து அவரது முயற்சியை ஊக்கப்படுத்தியது. அவரது உறவினரான திருமலை (இப்போது குமுதத்தில் பணிபுரிகிறார்) தீபத்தின் அஸ்திவாரம் போல் இருந்து – நிர்வாகத்தைத் திறம்பட நடத்தினார். இன்று நக்கீரனில் பணியாற்றும் எஸ். சம்பத், குங்குமச் சிமிழ் பொறுப்பாசிரியர் கௌதம நீலாம்பரன், தீபம் அலுவலகத்திலேயே தங்கி தமது இலக்கிய உலகப் பயணத்தைத் தொடங்கிய திருப்பூர் கிருஷ்ணன், ஜீவா தொடங்கிய 'தாமரை' யின் வளர்ச்சிக்குக் காரணகர்த்தராக இருந்தவருமான – இன்றும் நல்ல எழுத்துக்களைப் படித்த மாத்திரத்தில் –அவைகளைப் படைத்த எழுத்தாளர்களுக்கும் பிரசுரித்த ஏடுகளுக்கும் பாராட்டுக்கடிதம் எழுதி ஊக்குவித்து வருபவருமான தி.க.சி., வல்லிக்கண்ணன் – நா.பா.வின் மற்றொரு உறவினரான அனுமந்தன் பட்டி ஆர்.கோவிந்தராஜன் அவர்களும் நா.பா. மறைந்த பின்னரும் ஆண்டு தோறும் தனது சொந்தச் செலவில் – நா.பா. நினைவு தினக்கூட்டம் நடத்தி வருபவரும் – தீபம் யுகம் என்ற பெயரில் நா.பா.வின் தீபம் இதழ்த் தொகுப்புகளின் அடிப்படையில் – நா.பா. வையும் தீபத்தையும் நினைவு படுத்தும் வகையில் வல்லிக்கண்ணன் அவர்கள் மூலம் புத்தகம் வெளியிட்டவருமான அ.நா.பாலகிருஷ்ணன், உப்பிலி சீனிவாசன், கே.வி.கிருஷ்ணன், பாலசுப்பிரமணியம், டி.பி.எஸ். தண்டபாணி, ஆரம்பகால தீபம் இதழ்களை அச்சிட்டு உதவிய ஆர். நடராஜ ஐயர் மெட்ரோ பாலிட்டன் பிரஸ் உரிமையாளர் என்று நா.பா.வின் தீபம் அலுவலகத்தில் எப்போதும் இலக்கிய ஆர்வலர்கள் குழு

ஒன்று தீபம் தயாரிப்பில் தங்களது ஒத்துழைப்பையும்–பங்களிப்பையும் நல்கியபடியே இருக்கும்!

பெருந்தலைவர்கள் காமராசரின் நெருங்கிய நண்பரான மவுண்ட் பார்மசி பாலு நா.பா.வின் மீது கொண்ட பேரன்பினால் – 'தீபம்' அலுவலகத்துக்காக – தமது மருந்துகளைப் பொதிந்து வைக்கும் கட்டிடத்தைத் தந்து உதவினார். ஆரம்பக் காலத்தில் அவரது உறவினரான எஸ்.ஆர்.எஸ். என்ற வழக்கறிஞரும் தீபம் இதழ்களை அச்சிட்டுத் தந்து உதவிய தீபத்தைத் தங்களது சொந்தப் பத்திரகையாகவே நினைத்து நா.பா.வுக்கு உதவினார்கள்.

இன்று சிற்றிதழ்கள் ஏராளமான அளவில் வந்து கொண்டிருக்கின்றன. அன்று நா.பா. ஆரம்பித்த தீபம் – கல்கி, விகடன், குமுதத்தைப் போல அட்டை, ஓவியங்கள், துணுக்குகள் தொடர்கதைகளோடு வெளிவந்தது என்பதோடு – இன்றைய சிறுபத்திரிகைகளின் உள்ளடக்கத்திற்கு முன்மாதிரியாக – இன்றைய சிற்றிதழ்களில் இடம் பெறும் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் – நேர்காணல்களையெல்லாம் உள்ளடக்கியதாகவும் வெளியிடப்பட்டது.

தனது கையிருப்பையும் – வருவாயையும் தீபம் இதழை தலைசிறந்த இலக்கிய ஏடாகக் கொண்டு வருவதற்காகவே செலவிட்ட நா.பா., பகல் பொழுதெல்லாம் அலுவலகத்தில் பல்வேறு பணிகளையும் செய்து முடிப்பதிலேயே தீவிரம் காட்டுவார்.

எழுதுவது எப்போது?

அவரது மகன் நாராயணன் ஒரு வார ஏட்டுக்கு அளித்த பேட்டியில் கூறுகிறார் –

''அப்பா தியானம் மேற்கொள்ளும் காலைப் பொழுதை யாரும் அவருடன் பகிர்ந்து கொள்ள முடியாது

காலை நான்கு மணி முதல் ஏழு மணி வரையிலான அந்தக் கால கட்டத்தில் தான் பயின்று கொண்டிருக்கும் தியானத்திற்கு உறுதுணையாக அவரால் நட்புப் பாராட்டப்பட்டவர்கள் இருவர்.

பேனா– பேப்பர்

ஆமாம் எழுதுவதுதான்

அவரைப் பொறுத்தவரை

தியானம் – தவம்

''தியானங்கறது என்ன? மனசை ஒருமுகப் படுத்துகிறது தானே? ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி– மனசை அடக்குகிற அப்படிபட்ட தியானம் எந்தச் செயலிலும் இருக்கக் கூடிய முழு ஈடுபாட்டின் வெளிப்பாடுதானே! எந்த ஒரு வேலையைச் செய்தாலும் அக்கம் பக்கத்து ஈர்ப்புகளால் கவரப் படாமல், மனதைச் சிதறவிடாமல் அந்த வேலையை முழுமையாக, திருப்தியாக முடிக்க முயற்சிக்கிறோமே, அதுதான் தியானம். தியானம் என்பது வெறும் ஆன்மீக உணர்வல்ல, அது எல்லாச் செயல்களிலும் இருக்க வேண்டிய – நிறைவாக அச்செயல்களை முடிக்கவல்ல உந்துதல்தான்'' என்பார் அப்பா. அப்படி ஒரு தியானத்தை ஒவ்வொரு செயலிலும் மேற்கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் தனியாகக் கண்களை மூடிக் கொண்டு அமரும் பயிற்சியாக மேற்கொள்ள வேண்டிய அவசியம் இருக்காது என்பது அப்பாவின் கருத்து'' – என்கிறார் மகன் நாராயணன்.

அப்பா எப்போது எழுதுவார்? எப்படி எழுதுவார் என்பது பற்றி மகன் நாராயணன் கூறியிருக்கிறார். அப்பா நா.பா.வோ. – எப்படி முதன் முதலில் எழுத ஆரம்பித்தேன்? வாழ்நாள் முழுவதிலும் எழுதும் போது கடைப்பிடித்த முக்கியமான நெறிமுறை என்ன என்பதை – இளைய தலைமுறையினருக்கும் வழி காட்டும் வகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

''நான் முதல் கதை, கவிதையை எழுதியதால் எனக்கு ஏற்பட்ட இன்பத்தை, வேதனையை இரண்டையும் நினைத்து மகிழ மட்டுமல்ல, வருந்தவும் நானே உரியவன். முதல் குழந்தையைப் பெற்றபோது ஏற்பட்ட மகிழ்ச்சி, பிள்ளைப் பேற்று வலி, இரண்டையுமே தாய்தான் உணர முடியும். கணவனே உணரமுடியாதென்றால் அதற்கு மேல் என்ன சொல்வது? அனுபவத்தின் கர்த்தாவே அந்த அனுபவத்திற்குத் தாய்.

என் முதல் கதையை, கவிதையை எழுதும்போது என்னுடைய மன நிலை என்ன? உண்மையைச் சொல்லி விடுகிறேன். வீறாப்புப் பேசவோ வெட்கப் படவோ எனக்கு விருப்பமில்லை. பிள்ளைப் பேற்றை எண்ணி இளம் பெண்ணுக்கு ஏற்படுமே பயங்கலந்த மகிழ்ச்சி, அதுதான் அப்பொழுது என் நிலை. பயந்து கொண்டே எழுதினேன். என்னிடம் ஏதாவது திறமை இருக்கிறதென்று தமிழ் வாசகர்கள் கருதுவார்களானால்

அன்றிலிருந்து இன்றுவரை என்னிடமிருக்கும் இந்தப் பயம்தான் அதற்குக் காரணம். என்னுடைய கடைசி எழுத்தின் கடைசி முற்றுப் புள்ளியை நான் வைக்கின்றவரை இந்த பயம் என்னை விட்டுப் போய்விடக்கூடாது என்று வேண்டிக் கொண்டிருக்கிறேன். ஏன்? உலகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களையெல்லாம் உருவாக்கி முன்னுக்கு கொண்டுவந்தது இந்தப் பயமே. எழுத்தாளனின் முதல் வாசகனாய், அவனைக் கண்டிக்கும் மனச்சான்றாய், அவன் வளரச்சியை அறிவுறுத்தும் ஆசானாய் விளங்குவதும் இந்தப் பயம்தான்.

தன்னைத்தானே சோதித்துக் கொள்ளும் இந்தப் பயம் எழுத்தாளனுக்குப் பயன்படுகிற இலாபக் கணக்கைச் சேரும்.

இது ஒரு நிலை. அதாவது முதல்படி. இதற்கு அடுத்த நிலையில் இந்தப் பயமே வேறொரு விதமாக வளரும். குளத்தில் தண்ணீரில் அளவு உயர உயர அதன்மேல் மிதக்கும் தாமரைப் பூவும் மேலே உயர்ந்து கொண்டு போவதுபோல் எழுத்தாளன் நாட்டின் அறிவு வளர்ச்சிக்கேற்ப தன் எண்ணங்களை உயர்த்திக் கொண்டே போக வேண்டும்.

அப்போது பழைய பயம் உயர்ந்த குறிக்கோள்களையும் பண்பையும் நல்ல சூழ்நிலையையும் சமூகத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று புதிய உயர்ந்த நற்பயமா(னா) க மாறும். தண்ணீர் உயரும்போது பூ உயராவிட்டால் உள்ளே சிக்கி அழுகி அழிவது போல் இந்த முன்னேறும் பயமும் கருத்து வளர்ச்சியும் இல்லாத எழுத்து, காலப் பெருக்கில் அழுகி அழிந்து போய்விடுகிறது. இதில் ஒரு பயம் என்னைப் பற்றியது. மற்றொரு பயம் எழுத்தை வெளியிடுகின்ற பத்திரிகைகளைப் பற்றியது. ஊரெல்லாம், 'நல்லவள்' என்று புகழ்ந்தாலும், மாமியார்கள் போன்றவர்களே. தன் நிலையை ஊன்றிக் கொண்ட மருமகளுக்கு மாமியார் பயம் போய்விடும். மாறாக மாமியாருக்கு மருமகள் மேல் பயம் உண்டானாலும் வியப்பதற்கில்லை. தன் நிலையை ஊன்றிக் கொள்கிறவரை மருமகள் பாடு திண்டாட்டம் தான்.

இதே நிலையை இளம் எழுத்தாளர், முதிர்ந்த (!) எழுத்தாளர் பத்திரிகை ஆசிரியர் ஆகியோருக்கு இடையிலும் நீங்களாகவே ஒப்பிட்டுப் வெளிப்படையாகச் சொல்லமாட்டேன். காரணம்? நான் இன்னும் மாமியார் பயம் நீங்காத மருமகள். சென்ற தலை முறையில் அடியார்களாக இருந்து கோவிலிலுள்ள இறை வனுக்குப் பாடியும் பூத்தொடுத்தும் பணி புரிந்தவர்களெல்லாம்

இந்தத் தலைமுறையில் அதே கோவிலின் ஒரு பகுதியில் தெய்வங்களாக வைத்து வணங்கப்படுகிறார்களே! நான் முன்பு நடந்து வந்த வழியில் இப்போது நடந்து வந்துகொண்டிருக்கும் இளம் நண்பர்களுக்கு இந்த இரகசியத்தைச்சொல்லி வைக்கிறேன். 'வாய்'(ப்பு) உள்ள பிள்ளைகளாயிருந்தால் பிழைக்கிறார்கள்.

– என்று இளைய தலைமுறை எழுத்தாளர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார் நா.பா.

நா.பா. சிறுகதைகள், தொடர்கதைகள் – கவிதைகள் – இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் என்று ஏராளமாக எழுதிக் குவித்திருக்கிறார். அவர் எதுபற்றி எழுதினாலும் அதை பல்லாயிரக்கணக்கான வாசகர்கள் விரும்பிப் படித்து மகிழ்ந் தார்கள். அவர் மக்கள் எழுத்தாளராக விளங்கினார் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் சொன்னாலே போதுமானது.

அவரது குறிஞ்சி மலர் – கல்கியில் தொடராக வெளிவந்த போது – அந்தக் கதையின் நாயகன் அரவிந்தன் – நாயகி பூரணி ஆகியோரது பெயரையே தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு வாசகப் பெருமக்கள் சூட்டி மகிழ்ந்தார்கள்! குறிஞ்சி மலர் – மூலம் நா.பா. படைத்த அந்தப் பாத்திரங்களும் வாழ்கிறார்கள்; குறிஞ்சி மலர் படித்து மகிழ்ந்த வாசகர்களின் குடும்பங்களிலும் அரவிந்தன் – பூரணிகள் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நா.பா.வின் இறுதிக்காலம் வரையில் அவரது நெருங்கிய நண்பனாக இருந்திருக்கிறேன். மலேயா சென்று சொற்பொழிவு களாற்ற அவர் பயணப்பட்டபோது நாடினார். ''மூவாயிரம் ரூபாய் கைமாற்றாக யாரிடமாவது வாங்கிக் கொடுங்கள்'' என்று கேட்டார். அப்போது நான் 'அலை ஓசை'யில் பணிபுரிந்து கொண்டிருந்தேன், அலை ஓசை நாளிதழின் நிர்வாக இயக்குநர் முன்னாள் மேயர் வேலூர் நாராயணனை அணுகி அவரிடம்,

''நா.பா.வுக்கு 3ஆயிரம் கொடுங்கள் – அவர் திரும்பி வந்ததும் அவரிடம் ஒரு தொடர்கதை வாங்கி – ஈடு செய்து கொள்ளலாம்'' என்றேன். நாராயணன் தாராள மனம் படைத்தவர். மூவாயிரம் ரூபாய் கொடுத்தார். நா.பா.விடம் அதைக் கொடுத்து – விவரத்தைச் சொன்னபோது, ''திரும்பி வந்ததும் முதல் தொடர் கதை உங்களுக்குத்தான்'' என்று கூறியவர் என்ன நினைத்தாரோ ''இப்போதே தலைப்பைத் தந்து விடுகிறேன்; எழுதிக் கொள்ளுங்கள்'' என்றார்.

அவர் தந்த தலைப்பு 'செல்லும் வழி இருட்டு'.

மலேயா சென்று பல சிறப்புச் சொற்பொழிவுகளை நிகழ்த்திய நா.பா.சென்னை திரும்பியதும், உடல் நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். உடல் நலம் தேறியது; வீடு திரும்பி ஒரு வாரம் முழுமையடைவதற்குள் காலமாகி விட்டார்.

செல்லும் வழி இருட்டு – என்று தலைப்பிலான இன்னொரு குறிஞ்சி மலர் அல்லது இன்னொரு பொன்விலங்கு தமிழ்கூறும் நல்லுலகிற்கு கிடைக்காமல் போய்விட்டது. எனினும் என்ன? இலக்கிய உலகில் நல்ல நூல்களைத் தேடித் தேடிப் படிக்கும் வாசகர்கள் எல்லோரது உள்ளங்களிலும் அணையாத 'தீப'மாக அவரது நினைவுகளும் அவரது படைப்புகளும் நின்று நிலைத்து ஒளி வீசியபடியேதானே இருக்கிறது?

# பிடிவாதக்காரர் நா.பா.!

## கி. ராஜேந்திரன்

நா.பா.ஒரு பிடிவாதக்காரர். அவருடைய பலமும் அதுதான்; பலவீனமும் அதுதான்! அவருடைய கதைகளின் கதாபாத்திரங் களைப் பாருங்கள்; கதாநாயகன் கடைசி வரை பிடிவாதத்துடன் நல்லவனாகவே இருப்பான். வில்லன் பிடிவாதமாக இறுதிவரை வில்லத்தனம் செய்வான். காதலர்களோ என்ன கஷ்டம் வந்தாலும் விடாப்பிடியாக ஒருவிதப் பிடிவாதத்துடன் காதலிப்பார்கள்!

எழுத்தில் மட்டுமின்றி வாழ்க்கையிலும் நா.பா. ஒரு பிடிவாதக்காரர். எழுத்துலகில் அடியெடுத்து வைத்த பிறகு மீண்டும் பள்ளியிலோ கல்லூரியிலோ தமிழ்ப் பண்டிதராகச் சேர்வதில்லை என்றும் எழுத்தாளராகவே கடைசி வரை வாழ்ந்து காட்டுவது என்றும் பிடிவாதமாக இருந்து வெற்றி பெற்றார். கல்கி ஆசிரியர் சதாசிவம் மதுரைக்கு ஒரு முறை சென்றிருந்த போது அவரைச் சந்தித்துப் பேசினார் நா.பா.கல்கியில் புதிய தலைமுறைக் (அந்நாளைய) கதாசிரியர்கள் எழுதுவதில்லை என்ற குறையை எடுத்துக் காட்டினார். நா.பா.வின் பேச்சு சதாசிவத்தைக் கவர்ந்தது. ''நீங்களே அதற்கு ஏற்பாடு செய்யுங் கள்; சென்னைக்கே வந்துவிடுங்கள்'' என்றார். கல்கியில் உதவி ஆசிரியராகச் சேர்ந்தார் நா.பா. குறிஞ்சி மலர் அவருக்குப் பேரும் புகழும் பெற்றுத் தந்தது என்றால் பொன் விலங்கும் பாண்டிமாதேவியும் அவற்றை மேலும் வளர்த்தன.

அவருடைய தொடர்கதைக்கு ஒவ்வோர் இதழிலும் ஆறு பக்கம் ஒதுக்கப்பட்டிருக்கும். ஆறு வரி அதிகமாக எழுதியிருப் பார். அதை அடித்துக் குறைத்து விடுங்கள் என்றால், ஏன், இந்த ஆறுவரிகளை மட்டும் தனியே அச்சடித்துப் பக்கத்தின் விளிம்பில் ஒட்டி உள்ளடங்க மடித்து விட்டு விடலாமே'' என்பார்! தமது எழுத்தில் அவ்வளவு பற்றுதல், அதன் தரத்தில் அவ்வளவு நம்பிக்கை, அதனைச் சிதைக்க அனுமதிக்கக் கூடாது என்பதில் அத்தனை பிடிவாதம்!

ஒரு சமயம் அவர் கதையின் இடையே இருந்த ஒரு வர்ணனையை நீக்கி விட்டேன். அப்போது அவர் ஊரில்

இல்லை. அதனால் நானே பொறுப்பேற்றுச் செய்துவிட்டேன். அது ஆபாச வர்ணனையல்ல; ஆனால் அருவருப்பாக இருந்தது. கல்கியில் இடம் பெறக் கூடாத வர்ணனையாக எனக்குத் தோன்றியது. ஊரிலிருந்து திரும்பிய நா.பா.வுக்கு ஒரே கோபம். விஷயம், ஆசிரியர் சதாசிவத்தின் கவனத்துக்குப் போயிற்று. அவர் என் கருத்தை ஆமோதித்தார். ஆனால் நா.பா. இந்தத் தீர்ப்பை மனமொப்பி ஏற்றுக் கொள்ளவேயில்லை! அடுத்தாற்போல் அவருடைய சிறுகதை ஒன்று கல்கிக்கு ஏற்றதாக இல்லை என்பதாகக் கருதப்பட்ட போது அதனை வேறு ஒரு பத்திரிகையில் பிரசுரிக்க அனுப்பிவிட்டு, கல்கி காரியாலயத்திலிருந்து விலகிக் கொண்டார். பத்திரிகைக்கென்று சில கொள்கைகள் இருக்கும். அதற்கு உட்பட்டுத்தான் அதில் பணியாற்றுவோர் நடந்து கொள்ள வேண்டும் என்ற நிர்ப்பந்தத்துக்கு, அவரால் ஈடுகொடுக்க முடியவில்லை.

'தீபம்' என்ற பெயரில் சொந்தப் பத்திரிகையை ஆரம்பித்துவிட்டார் நா.பா. அதில் கல்கி நிறுவனத்தைச் சாடவும் செய்தார். ஆனால் சீக்கிரமே தாமும் ஒரு பத்திரிகை ஆசிரியர் என்ற முறையில், கல்கி பத்திரிகை ஆசிரியருக்கு இருந்த நிர்ப்பந்தங் களைப் புரிந்து கொள்வது நா.பா.வுக்குச் சாத்தியமாகியிருக்க வேண்டும். அதனால் மீண்டும் வெளியிலிருந்தபடியே கல்கிக்கு எழுத ஆரம்பித்தார். சிறுகதைகள், நாவல்கள் தவிர, 'தீரன்' என்ற பெயரில் தமிழ்நாட்டு அரசியலை அலசினார். சில காலம் அரசியல் வாதியாகவும் இருந்து பார்த்து ஏமாற்றமடைந்து திரும்பினார். இந்திய அரசியலில் தன்மானப் பிடிவாதங்களுக்கு இடமேது?

சாகித்ய அகாதமி பரிசும், சாகித்ய அகாதமி உறுப்பினர் பதவியும், இலக்கியப் பத்திரிகை ஆசிரியரான தீபம் பார்த்தசாரதியை எளிதில் வந்தடைந்தன.

அவருடைய ஆஜானுபாகுவான தோற்றம், நிமிர்ந்த பார்வை, கம்பீர நடை எல்லாமே அவருடைய தன்னம்பிக்கை யையும் அதனுடன் இணைந்திருந்த பிடிவாதத்தையும் உணர்த்தும். தமக்கு இதய நோய் வந்திருக்கிறது என்பதையே அவரால் ஒப்புக் கொள்ள முடியவில்லை. இல்லையென்றால் கருணாநிதி கூப்பிட்டார் என்பதற்காக மலேசியா தமிழ் மாநாட்டுக்குப் போயிருப்பாரா? திரும்பி வந்து நர்ஸிங்

ஹோமில் சேர்ந்தவர், ஓய்வு தேவை என்று டாக்டர் எவ்வளவோ வற்புறுத்தியும், 'எனக்கு உடம்புக்கு ஒன்றுமில்லை' என்று வீடு திரும்பியிருப்பாரா? இந்தப் பிடிவாதமே அவருடைய முடிவைத் துரிதப்படுத்தி விட்டது.

கல்கியில் பிரசுரமான 'வலம்புரிச்சங்கு' என்ற பரிசுக் கதை மூலமாக எழுத்துலகில் அடியெடுத்து வைத்த நா.பா. இலக்கியத் தரத்தில் பிடிவாதம் காட்டிய அபூர்வமான வலம்புரிச்சங்காகவே கடைசி வரை திகழ்ந்தார்.

*(திரு.நா.பா. காலமான சமயம் 'கல்கி' 27.12.1987 இதழில் பிரசுரமான கட்டுரை)*

# தீபம் காட்டிய வழி !

**ஆரணி எஸ் சம்பத்**

பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு - முடித்துவிட்டு என்பதற்கு முடிக்க முடியாமல் விட்டுவிட்டு என்றும் பொருள் கொள்ளலாம் - தாய் வீடு இருக்கும் ஆரணியில் அரைக்கால் சட்டையுடன் சுற்றிக் கொண்டிருந்தவன் மேல், எப்படித்தான் தாக்கத்தை ஏற்படுத்தினார்களோ அரவிந்தனும் பூரணியும் ! ஏற்கனவே எழுத்தாளர் மாயாவி, ஜெயகாந்தன் போன்றோரின் கதைகளில் மனம் லயித்திருந்த இளைஞனை தன் பேனா விரல்களால் சுண்டியிழுத்திருந்தார் 'தீபம்' நா.பார்த்தசாரதி. 'குறிஞ்சி மலர்'த் தோட்டத்தில் உலவியவர்கள் வெறும் கதை மாந்தர்களல்ல; உயிரோட்டமுள்ள இதயங்கள்.

எந்த வேலையும் தெரியாமல் இருக்கிறானே என அக்கம்பக்கத்தாரால் அனுதாபத்தோடு பார்க்கப்பட்டு வந்த இளைஞனை அரவிந்தனும் பூரணியும்தான் சென்னை நோக்கி தள்ளினார்கள். பட்டணத்திற்கு வந்தபோது 'இன்ன வேலை தெரியும்' என்று தைரியமாக அந்த அரைக்கால் சட்டை இளைஞனால் சொல்லிக் கொள்ளமுடியாது. படிப்பும் குறைவு, கையிருப்புமாக இருந்தது தன்னம்பிக்கைதான்.

1965ம் ஆண்டு

'தீபம்' சுடர்விடத் தொடங்கியிருந்தது. தன்னை வசீகரித்த எழுத்தாளரைப் பார்த்துவிட்டு வரலாம் என ஒரு மதியப் பொழுதில் அந்த அலுவலகத்திற்கு சென்றான் இளைஞன். அரைக்கால் சட்டையுடன் அவன் இருந்தபோதும் நா.பா.வின் அன்புக்கரங்கள் நீண்டு வரவேற்றன.

பெயரையும் ஊரையும் கேட்டவர், ''என்ன பண்ணுறீங்க?'' என்றார்.

'வேலை தேடிக்கிட்டிருக்கேன்'– இளைஞன் நம்பிக்கையோடு சொன்னான்.

''என்ன வேலை தேடுறீங்க?''

''பத்திரிகையில்தான் வேலை தேடணும்''.

''எதுக்கு தேடுறீங்க? இங்கேயே வேலை பாருங்க'' என்றவர், மேலாளர் திருமலையின் பக்கம் திரும்பி ''உதவிக்கு

வச்சிக்கப்பா'' என்றார். மதியம் 1 மணிக்கு அந்த அலுவலகத்திற்கு சென்றவனுக்கு 1.05 மணிக்கெல்லாம் வேலை கிடைத்து விட்டது.

'அரவிந்தன்' என்ற நல்ல உள்ளத்தை பிரசவித்த ஆண் தாயாயிற்றே நா.பா. எல்லா மனிதரிடமும் நல்ல அம்சங்களை எடைபோடும் திறன் பெற்றிருந்தார். இளைஞனின் நம்பிக்கை அவரைக் கவர்ந்தது. தீபத்தின் ஒளியில் அவன் வாழ்க்கை மலர்ந்தது.

உருவம் இல்லாத திரவத்தை . பாத்திரத்தின் வடிவத்திற்கேற்ப நிறைத்துக் கொள்ள முடியும். எதுவும் தெரியாமல் வந்த இளைஞனையும் நா.பா. அப்படித்தான் வடிவமைத்தார். பத்திரிகையின் விநியோகப்பிரிவு, உற்பத்திப் பிரிவு, பிழை திருத்தும் பிரிவு, ஒருங்கிணைப்புப் பிரிவு என எந்த பேதமும் பிரிவும் பார்க்காமல் எல்லாப் பிரிவுகளிலும் அவனுக்கு அனுபவம் வாய்க்கச் செய்தார் நா.பா. எல்லா பாத்திரங்களிலும் நிறைந்தது அந்தத் திரவம்.

'அரவிந்தனால்' ஆகர்ஷிக்கப்பட்ட இளைஞன், நா.பா.வின் ஒவ்வொரு 'பிரசவத்தையும்' ஆவலோடு எதிர்பார்த்தான். தீபத்தின் ஒளி அவனுக்குள் புதிய சமூக வெளிச்சத்தை பாய்ச்சிக் கொண்டிருந்தது. அது ஒரு 80 பக்க இலக்கியப் புரட்சி. காந்தியத்தையும் மார்க்சியத்தையும் தேவையான அளவில் கலந்து தந்து, அதிர்ந்து பேசாமல் அமைதியாக புரட்சி நடத்திக் கொண்டிருந்தது. மேல்நாட்டு எழுத்தாளர்களின் மேற்கோள்களை நமது ஊர் எழுத்தாளர்கள் கையாள்வது வழக்கம். அந்த மேற் உறிவூளும் அதற்குரிய எழுத்தாளர்களின் பெயர்களும்தான் வாசகர்களுக்குத் தெரியுமே தவிர, அந்த மேலை எழுத்தாளர்களின் சிறப்பியல்புகளோ படைப்புத்திறனோ வாசகர்களுக்கு எந்த பத்திரிகையும் வழங்கவில்லையே என்ற ஏக்கம் இளைஞனுக்கு இருந்து வந்தது.

ஏக்கத்தை தனது வெளிச்ச விரல்களால் துடைத்தது தீபம். மூத்த எழுத்தாளரும் சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான அசோகமித்திரன் ஒவ்வொரு இதழிலும் மேல்நாட்டு இலக்கிய ஜாம்பவான்கள் பற்றிய வாழ்க்கை குறிப்புகள், அவர்களின் படைப்புகள் பற்றிய எளிமையும், தெளிவும் நிறைந்த விமர்சனங்கள் ஆகியவற்றை எழுதி, இளைஞனின் இலக்கியப்

பசிக்கு விருந்தளித்தார். மூத்த பத்திரிகையாளரும் திராவிட இயக்கத்தின் அறிவுப் பெட்டகமாகவும் விளங்குகிற சின்னக்குத்தூசி தியாகராஜனும் அவரது எழுத்தும் இளைஞனை வசீகரித்தன. சின்னக்குத்தூசி தியாகராஜனின் இயல்பாக பழகும் தன்மையில் அவரும் கவர்ந்திழுக்கப்பட்டதில் ஆச்சரியமில்லை.

தீபம் தந்த பயிற்சியும், சின்னக்குத்தூசி தியாகராஜனுடன் கிடைத்த பரிச்சயமும் அந்த இளைஞனுக்கு இரண்டு கால்களாக மாறி, வாழ்க்கையின் பயணப் பாதையில் நடப்பதற்கு உதவின. பத்திரிகையுலக பீஷ்மர் சாவியிடம் பணியாற்ற தகுதி மட்டுமல்ல, தைரியமும் வேண்டும் இளைஞன் நடுத்தர வயதை அடைந்திருந்த போது, சாவியிடம் பணிக்கு சேர்ந்து, அவரது மதிப்பைப் பெற்றான். இன்று, அவனை முதுமை போர்த்தியிருக்கிறது. தலைமுடி நரை பூசியிருக்கிறது. 57 வயதில் நக்கீரனில் பிழை திருத்துநராக இருக்கும் அவன், இன்றைக்கும் பத்திரிகைத்துறை சார்ந்தே வாழ்வதற்கான வழியைத் திறந்துவிட்டது தீபம்தான்.

அந்த தீபத்தின் பெருமைக்குரிய வாசகர்களில் ஒருவரான அ.நா.பாலகிருஷ்ணன், தீப நினைவொளியை மறக்காமல் விழா எடுப்பதும், புத்தகங்கள் வெளியிடுவதும் ஆச்சரியமான தொண்டாகவே தெரிகிறது. நா.பா.வுக்கு விழா எடுக்கும் அ.நா.பா. எனும் விசுவாச வாசகனின் தயவால், தீபத்தின் நினைவு வெளிச்சம் இன்னும் அணையாமல் காக்கப்படுவதைக் கண்டு நெகிழ்கிறான் வயதாகிவிட்ட அந்த இளைஞன், ஆரணி சம்பத்.

# நா.பா. வளர்த்த இலட்சிய 'தீபம்'

## வல்லிக்கண்ணன்

தீபம் இலக்கிய இதழை நா. பார்த்தசாரதி 1965 ஏப்ரல் மாதம் –சித்திரை வருடப் பிறப்பு அன்று – துவக்கிவைத்தார்.

1987 டிசம்பரில் நா.பா. அமரரானார்.

நா.பா. வின் மறைவுக்குப் பிறகு, 1988 ல் எஸ். திருமலை 'தீபம்' மூன்று இதழ்களை வெளியிட்டார். பிறகு காலத்தின் கட்டாயத்தால் 'தீபம்' நின்று விட நேரிட்டது.

ஆக, 23 வருடங்கள் 'தீபம்' நா.பார்த்தசாரதியால் வளர்க்கப்பட்டது. இலக்கிய உலகத்தில் அது தனியான தொரு இடத்தைப் பெற முடிந்தது. தனது சாதனைகளால், 'தீபம்' தமிழ் இலக்கிய வரலாற்றில் சிறப்பான இடம் பெற்றுள்ளது என்பது வரலாறு.

தன்னம்பிக்கை, இலட்சிய வேகம், செயல் முனைப்பு, புதிதாக சாதனைகள் புரிய வேண்டும் என்ற வேட்கை, நம்மால் அவற்றை செய்ய முடியும் எனும் மன உறுதி, நாம் சாதிப்பதற்காக பல காரியங்கள் காத்திருக்கின்றன என்ற எண்ணம் முதலிய பண்புகளைக் கொண்ட இலக்கியவாதி, போதிய பண பலம் இல்லாது, பத்திரிகை தொடங்கி, பெரும் சிரமங்களுடன் நடத்தி, வைராக்கியத்துடன் அதை வளர்க்க முற்படும் போது, திறமை யாளர்கள் பலரது துணையும் ஒத்துழைப்பும் அவருக்குக் கிடைக்கின்றன. அந்தப் பத்திரிகை வெற்றிகரமாக சாதனைகள் புரிந்து, வரலாற்றில் இடம் பெறுவது சாத்தியமாகிறது.

'தீபம்' விஷயத்திலும் அது தான் நிகழ்ந்தது.

'எந்தப் பத்திரிகையும் இதுவரை சாதிக்காமல், இனிமேல் சாதிப்பதற் கென்றே சில துணிவான இலக்கிய முயற்சிகள் இன்னும் மீதமிருக்கின்றன. ஒரு புதிய பத்திரிகை அத்தகைய காரியங்களைத் தொடங்கி மேற்கொள்ள இடம் இருக்கிறது' என்று நா.பா. நம்பினார். எனவே, 'பரிசுத்தமான எண்ணங்களுடன் தணியாத சத்திய வேட்கையுடனும், எல்லா இடங்களிலும் அறிவின் பிரகாசமும் உண்மையின் ஒளியும் துலங்க வேண்டும் என்ற உயர்ந்த இலட்சிய'த்தோடு அவர் 'தீபம்' இதழைத் தொடங்கினார்.

தீபம் மாத இதழ் அந்தரங்க சுத்தியோடு இலக்கிய சேவை செய்ய ஆசைப்பட்டது. தீபம் மாத இதழ் ஒரு சுதந்திர எழுத்தாளனின் தன்மான முயற்சியாக வளர்ந்தது. தீபம் மாத இதழில் தமிழகத்தின் முன்னணி எழுத்தாளர்கள் யாவரும் சுதந்திரமாகவும் அவரவர் கருத் தோட்டத்திற்குத் தடையின்றியும் எழுதி வந்தனர்.

தமிழ் மொழியின் வளத்துக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் தங்களால் இயன்றதை செய்ய வேண்டும் எனும் ஆர்வம் உள்ள எழுத்தாளர்களின் படைப்புகள் – கதைகள், கட்டுரைகள், கவிதைகள், குறு நாவல்கள் தொடர்கதைகள் என்ற வடிவங்களில் – தீபம் இதழ்களில் இடம் பெற்றன. சிந்தனை ஒளி கனலும் எழுத்துக்களும், புதுமையான பகுதிகளும் தீபம் இதழுக்குத் தரமும் கனமும் சேர்த்தன. தரமான வாசகர்கள், ஆழ்ந்த இலக்கிய முயற்சிகளை விரும்பி வரவேற்கும் ரசிகர்கள், குறைவாக உள்ள தமிழ்ச் சூழலில் தீபம் போன்ற இலக்கியத்தரமான பத்திரிகையை நடத்துவது எதிர் நீச்சல் போடும் சாதனையே யாகும்.

பல பத்திரிகைகள் வாசகர்களைப் பயன் பெறச் செய்வதை விட, கவர்ச்சிப்பாதையே நோக்கமாகக் கொண்டு கீழ்த்தரமாக இறங்கி சினிமா மயமாக மாறும் இந்த நாளிலும், தீபம் தன் இலட்சியங்களை உறுதியோடு கடைப்பிடித்து, நீண்ட காலம் ஒளியோடு விளங்க முடிந்தது. இது பெருமைக்குரிய சாதனைதான்.

நா.பா. தீபம் இதழைத் தனித் தன்மையோடு வளர்ப்பதில் குறையாத ஆர்வம் காட்டி வந்தார். தமிழ் இலக்கிய வளர்ச்சியிலும் அதன் வளத்திலும் அக்கறை கொண்டிருந்த அவர், அனைத்து இந்திய மொழிகளின் வளர்ச்சியையும் தமிழ் வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதிலும் கவனம் செலுத்தினார். தமிழ் நாட்டினர் தமிழ் எழுத்தாளர்களைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள வேண்டும் ; அத்துடன் இதர இந்திய மொழிகளின் புகழ் பெற்ற எழுத்தாளர்கள் பற்றியும் அறிய வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதன் பிரதிபலிப்பு தீபம் இதழ்களில் பளிச்சிட்டது.

தீபம் பத்திரிகையை ஓர் இலக்கிய இயக்கமாக வளர்ப்பதில் நா.பா. கருத்தாக இருந்தார். அவருடைய மனஉறுதியும் அயராத உழைப்பும் , அவரைப் போலவே மன உறுதியும் எழுத்தாற்றலும், அவரிடம் பாசமும் அன்பும் கொண்டிருந்த சகோதர

எழுத்தாளர்களின் ஒத்துழைப்பும் இவ்வகையில் தீபம் இதழுக்கு வெற்றி கிட்டச் செய்தன.

ஆகவே, 'தீபம் என்பது ஒரு நம்பிக்கை. பிறகு பத்திரிகையும் கூட. தீபம் என்பது ஓர் இலக்கு. பிறகு இலக்கியம். தீபம் என்பது ஓர் இலக்கிய இயக்கம். பிறகு தான் பத்திரிக்கை' என்று பெருமிதத்தோடு அறிவித்தார் நா.பா.

இவ்விதம் 23 வருடங்கள் நா. பார்த்தசாரதியால் தீபம் வளர்க்கப்பட்டது.

வெகுஜனப் பத்திரிகைகளுக்கிடையே இலக்கிய தாகம் கொண்டவர்களின் வேட்கையை தணிக்கக் கூடிய ஒற்றை ஊற்றாக இருந்தது தீபம்.

1965 ஏப்ரல் முதல் 1988 மே மாதம் வரை, 239 இதழ்கள் பிரசுரம் பெற்ற தீபம் ஒவ்வொரு மாதமும் அதன் தரத்தைக் காப்பாற்றி வந்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் பல புதிய அம்சங்களை வெளியிடுவதில் சிரத்தை காட்டியது. இலக்கிய விஷயங்களுடன் சமூகப் பிரச்சனைகளிலும் நாட்டின் நலனிலும் அக்கறை கொண்டு, தகுந்த விஷயங்களை வெளியிட்டது. சிறப்பான சிறுகதைகள், அருமையான குறு நாவல்கள் புதுமை செறிந்த தொடர் கதைகள் , மரபுக் கவிதைகள், புதுக் கவிதைகள் என்று இலக்கிய வடிவங்கள் பலவற்றிலும் நயமும் சுவையும் தரமும் நிறைந்த படைப்புகளை தொடர்ந்து வெளியிட்டது. ஆழ்ந்த கனமான சிந்தனைக் கட்டுரைகளையும், இலக்கியப் பிரச்சனைகள் சம்பந்தமான சர்ச்சைகளையும் பிரசுரித்தது. புத்தக மதிப்புரைக்கு கணிசமான பக்கங்களை ஒதுக்கியது. அனைத்தினும் மேலாக, இலக்கிய வரலாற்று ரீதியான பல தொடர் கட்டுரைகளை (மணிக்கொடி காலம், சரஸ்வதி காலம், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை முதலியன) வெளியிட்டு தனிக் கவனிப்பு பெற்றது.

'நேர்காணல்' முறையில் பிரபல இலக்கிய ஆசிரியர்களின் கருத்துக்களையும், தொழிலதிபர்களின் அனுபவங்களையும் எண்ணங்களையும் பிரசுரித்தது. குறிப்பிடத் தகுந்த எழுத்தாளர்களின் அனுபவங்களையும் குறிக்கோள்களையும் 'நானும் என் எழுத்தும்' என்ற தலைப்பில் வெளியிட்டது.

இதர இந்திய மொழிகளின் படைப்புகள் பலவற்றை – நாவல், சிறுகதை, கவிதைகளை – மொழி பெயர்த்து வெளியிட்டு வந்தது. பிறமொழி ஆசிரியர்களைப் பற்றியும் , படைப்புகள் குறித்தும் அறிமுகக் கட்டுரைகள் தீபத்தில் இடம்பெற்றன. சுதந்திரத்துக்குப் பின்னர் வந்த இந்திய மொழிகளின் இலக்கியங்களின் நிலைமை பற்றி தமிழ் வாசகர்கள் தெரிந்து கொள்ள தீபம் பெரிதும் உதவியது.

இலங்கை, மலேசியா எழத்தாளர்கள், அவர்களது எழுத்துக்கள் பற்றியும் தீபம் அக்கறை கொண்டிருந்தது. அவற்றுக்கான சிறப்பிதழ்களை தயாரித்து வெளியிட்டது.

நினைவில் நிற்கும் முன்னுரைகள், காலத்தால் சாகாத சிறுகதைகள், ஊஞ்சல் கடிதங்கள் என்று அபூர்வமான விஷயங்களை தொகுத்துத் தந்தது. 'இரத்தினச் சுருக்கம்' என்று சிந்தனை மணிகளையும், மற்றும் வம்பு மேடை, மறைவாக நமக்குள்ளே என்று சுவையான தகவல்களையும், டில்லி ப்ம்பாய் கல்கத்தா மலேசியா செய்திகளைக் கூறும் கடிதங்களையும் தொடர்ந்து பிரசுரித்தது. இலங்கைக் கடிதம் அவ்வப்போது வெளியிடப்பட்டது.

நா. பார்த்தசாரதியின் படைப்பாற்றலின் பன்முகத் தன்மையை தீபம் ஒவ்வொரு இதழும் வெளிப்படுத்தியது. அவரது சீரிய சிந்தனை வீச்சையும், நகைச் சுவை உணர்வையும், சூடாகவும் சுவையாகவும் கருத்துக்கள் கூறும் திறனையும் 'இலக்கிய் மேடை' எனும் கேள்வி–பதில் பகுதியும் , பிற குறிப்புகளும் புலப்படுத்தின.

நா.பா. எழுதிய தலையங்கங்கள் தனித்தன்மையோடு, சிந்தனை வேகமும் தொலைநோக்குப் பார்வையும், வழிகாட்டும் தன்மையும் கொண்டு ஒளிர்ந்தன.

'தீபம்' பரந்த மனப்பான்மையோடு சகல எழுத்தாளர்களின் எழுத்துக்களையும் வரவேற்று வெளியிட்டது. மறுமலர்ச்சி இலக்கியப் படைப்பாளிகளின் முதல் தலைமுறையினர் முதல், தொடர்ந்து வந்த தலைமுறையினரும், தங்கள் எழுத்துக்களால் தீபத்துக்கு வலிமை சேர்த்தார்கள். சிறிது காலத்துக்கு முன் எழுதத் தொடங்கி, புகழ்ப் பாதையில் முன்னேறிக் கொண்டிருந்த எழுத்தாளர்களும் (அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, ஆதவன் போன்றோர்) தங்கள் படைப்புகளால் தீபத்துக்கு ஒளியூட்டி வந்தார்கள்.

புதிதாக எழுதத் தொடங்கிய திறமைசாலிகளுக்கு (வண்ணதாசன், நாஞ்சில் நாடன், கே. ராமசாமி, மோகனன், பா.அமிழ்தன் போன்றோருக்கு) தீபம் வளர்ச்சிப் பாதை அமைத்துக் கொடுத்தது.

வாசகர்களையும் இலக்கிய முயற்சிகளில் பங்கு பெறும்படி தூண்டிவந்தது தீபம். தரமான கடிதங்களுக்குப் பரிசு அளித்தது. படித்த புத்தகங்கள் பற்றி ரசனைக் கட்டுரை எழுதவும், 'தீபம்' கதைகளை விமர்சிக்கவும், குறிப்பிட்ட சில புத்தகங்கள் குறித்து விரிவான விமர்சனங்கள் எழுதவும் வாசகர்களை ஊக்குவித்து உற்சாகப்படுத்தியது.

தமிழக நாடோடிக்கதைகள், பலநாடுகளின் குட்டிக் கதைகள் தொடர்ந்து பிரசுரிக்கப்பட்டன. திரைப்படம், நாடகம், அரசியல், சமூகப்பிரச்சனைகள், கலாச்சார விஷயங்கள், விவசாயம், பல்வேறு தொழில் முயற்சிகளிலும் தீபம் கவனம் செலுத்தியது. அவை சம்பந்தமான தனிக்கட்டுரைகளையும் தொடர்கட்டுரைகளையும் அவ்வப்போது வெளியிட்டது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற்ற ஆண்டில், தீபம் மிகச் சிறப்பான பணி ஒன்றைச்செய்தது. மாநாட்டு நிகழ்ச்சிகளை விரிவாக வெளியிட்டதுடன், நல்ல ஆய்வுக் கட்டுரைகளின் சாராம்சத்தை தொடர்ந்து வெளியிட்டது.

பத்திரிகை ஒரு புனித இயக்கம் என்று நா.பா. அடிக்கடி வலியுறுத்தி வந்தார். இலக்கியப் பத்திரிகை என்ற தன்மையில் இலக்கிய உலகம் பற்றி தீபம் பல்வேறு கோணங்களிலும் கூரிய பார்வையை செலுத்தி ஆழ்ந்த கருத்துக்களை வெளியிட்டு, இலக்கிய வாதிகளை சிந்திக்கவும் செயல்படவும் தூண்டியது. நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும், சமூக விழிப்பு உணர்வையும் வளர்த்தது தீபம்.

ஆண்டு தோறும் ஆகஸ்டில் சுதந்திர தினம் பற்றியும், செப்டம்பரில் பாரதி விழா குறித்தும், அக்டோபரில் காந்திஜீ பற்றியும் வித்தியாசமான – ஒவ்வொரு வருடமும் புதிய சிந்தனை ஒளியுடன் – தலையங்கம் வரைந்து, ஊன்றி உணர்தற்குரிய உண்மைகளை எடுத்துரைத்தார் நா.பா.

எழுத்தாளர்களுக்கு இலக்கிய உணர்வோடு, சமூகப் பிரக்ஞையும், தமிழ் நாட்டுப் பற்றும் விசால இந்திய உணர்வும்,

உலக நோக்கும் அவசியம் தேவை என்பதை தீபம் நினைவுறுத்தத் தவறவில்லை.

நடு நிலையோடு நோக்குகிற போது ,எவ்வாறு தீபம் தனித் தன்மையோடு, மொழிக்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் இடையறாது தொண்டாற்றி மிளிர்ந்தது என்பது புரியும் .

முடிவுரையாக, நா.பா.வின் மதிப்பீட்டைக் குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும் –

' ஒரு சீராய்–நிதானமாய்–ஒளிபரப்பும் மங்கலமான குத்து விளக்குப் போல், பதறாமல்– பயப்படாமல்– நிதானமாய் தனது இலக்கியப் பணியை செய்துள்ளது தீபம். ஆடம்பரமான மின் விளக்குகள் பல வந்துவிட்டாலும், அகல் விளக்கும் குத்து விளக்கும் எப்படி பண்பாட்டின் மங்கலச் சின்னங்களோ, அப்படியே கவர்ச்சியையே முக்கியமாகக் கொண்ட பல பத்திரிகைகளிடையே தீபம் போன்ற தீவிர இலக்கிய இலட்சியப் பத்திரிகைகள் நமது கலை இலக்கியப் பண்பாட்டின் சின்னங்களாகயிருக்க முடியும்.'

# பேசப்படுகிறார் பேச்சாளர் நா.பா...

## திருப்பூர் கிருஷ்ணன்

எழுத்தாளர் என்ற வகையில் குறிஞ்சி மலர் நா.பா.வைப் பொதுவாகத் தமிழ் வாசகர்கள் எல்லோருக்கும் தெரியும். இப்போதும் விரும்பினால் அப்படித் தெரியாதவர்கள் அவரைத் தெரிந்துகொள்ள முடியும். அவரது பொன்விலங்கு, சத்திய வெள்ளம், நெஞ்சக்கனல், ஆத்மாவின் ராகங்கள், நீல நயனங்கள் போன்ற சமூக நாவல்களும் மணிபல்லவம், ராணி மங்கம்மாள், நித்திலவல்லி, பாண்டிமாதேவி போன்ற சரித்திர நாவல்களும், சமுதாய உணர்வு நிறைந்த மணிமணியான சிறுகதைகளும் நிரந்தரமாய்த் தமிழ் மொழியை அலங்கரித்துக் கொண்டிருக் கின்றன. அவர் தீபத்தில் எழுதிய கேள்வி பதில்கள் கூட கமலம் சங்கர் என்பவரால் தொகுக்கப்பட்டுப் புத்தகமாக வந்துவிட்டன.

எழுத்தாளர் என்ற வகையில் அவரைக் கணிப்பதுபோல் பேச்சாளர் என்ற வகையில் அவரை எப்படிக் கணிப்பது? அவரது பேச்சு இப்போது கேட்கக் கிடைப்பதில்லை. அகில இந்திய வானொலியில் சில ஒலிப்பேழைகள் வைக்கப்பட்டிருக்கலாம். அவரது நண்பர்கள் யாரேனும் தங்கள் இல்லங்களில் சில ஒலிப்பதிவுகளை வைத்துக் கொண்டிருக்கலாம். மற்றபடி கீரன், வாரியார் போன்ற சமயப் பேச்சாளர்களின் ஒலிப்பேழைகள் வாங்கக் கிடைப்பது போல நா.பா. சொற்பொழிவு பதிவு செய்யப்பட்ட ஒலிப்பேழைகளாய்க் கிடைக்க வாய்ப்பில்லை.

தமிழ்மொழியின் அண்மைக்கால உன்னதமான பேச்சாளர்களை வரிசைப் படுத்தினால் முதல் ஐந்து பேரில் ஒருவராக இருப்பார் நா.பா. அவரது சமகாலத்தில் ஜீவா, கி.வா.ஜகந்நாதன், டாக்டர். எஸ்.ராமகிருஷ்ணன், பேராசிரியர் ராதாகிருஷ்ணன் போன்றோர் மிகச் சிறந்த பேச்சாளர்களாகப் புகழ்பெற்றிருந்தார்கள். பொதுவுடமை சார்ந்த பேச்சுகள், சமயம் சார்ந்த பேச்சுகள், பட்டிமன்றப் பேச்சுகள், அரசியல் பேச்சுகள் போன்ற பலவகைப்பட்ட பேச்சுகள் இப்போதிருப்பது போலவே அப்போதும் இருக்கத் தான் செய்தன. ஆனால் பட்டிமன்றப் பேச்சின் தரமும் இன்றுள்ளதைப் போன்று மிக மலினமாக அன்று இருந்ததில்லை.

நா.பா. பேச்சின் முக்கியமான சிறப்பம்சம் அவரது அபாரத் துணிச்சல். அவர் சொல்லும் கருத்தை ஏற்காதவர்கள் கூட அவரது துணிச்சலை வியக்காமல் இருக்க மாட்டார்கள். யாரைப் பற்றியும் லட்சியம் செய்யாது எதிர்விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாது தம் மனச்சாட்சியையே அளவுகோலாகக் கொண்டு அவர் தம் கருத்துகளை வெட்டொன்று துண்டிரண்டாகக் கூறி வந்தார். பாரபட்சம் காட்டுவது, சமரசம் செய்து கொள்வது, ஒன்றைச் சொல்லிவிட்டுப் பின்னர் நான் அப்படிச் சொல்லவே இல்லையே என்று மறுப்பது, சொல்லத் தயங்கி ஓர் அபிப்ராயத்தை மேம்போக்காக மழுப்பிச் சொல்வது போன்றவை அவர் அகராதியிலே கிடையாது.

இலக்கியப் பேச்சுகளில் மட்டுமல்லாமல் அவரது ஸ்தாபன காங்கிரஸ் சார்ந்த அரசியல் பேச்சுகளிலும் இதே பாணியைத் தான் அவர் இறுதிவரை பின்பற்றி வந்தார். கருத்தைச் சொல்லும் போது மற்றவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற கவலை அவரிடம் இருந்ததே இல்லை. தம் கருத்து பொதுக்கருத்துக்கு முற்றிலும் மாறுபட்ட கருத்தாக இருந்தாலும் அதை உரத்துச் சொல்ல அவர் பின் வாங்கியதில்லை.

'அக்கிரகாரத்தில் பிறந்த அதிசயப் பிறவி' என்று வ.ரா.பற்றி அண்ணாதுரை குறிப்பிட்டார். இதை மேற்கோள் காட்டிப் பேசிய நா.பா. அடுக்குமொழி அலங்காரத்தால் மோனை நயத்திற்காக அண்ணாதுரை அப்படிக் குறிப்பிட்டாரே தவிர வ.ரா.வின் எல்லாப் பெருமைகளையும் அண்ணாதுரை உணர்ந்திருந்தார் என்று நான் சொல்ல மாட்டேன். அறிஞர்களை அவர்கள் ஜாதியைச் சார்ந்து அதிசயப்பட வேண்டிய அவசியம் இல்லை. எல்லா ஜாதியிலும் அதிசயமானவர்கள் பிறப்பதுண்டு. எதிலும் ஜாதியைக் காண்பது தேவையற்றது என்று மேடையில் பேசினார். இதைக் குமுதம் இதழில் ஒரு துணுக்காக எழுதியிருந்தார் மகரம். அதில் அண்ணாதுரை என்று வரும் இடங்களில் 'அறிஞர் அண்ணாதுரை' என்று நா.பா. சொன்னது போல் எழுதப்பட்டிருந்தது. அது மகரத்தின் பெரிய தவறு என்றும் சொல்ல இயலாது. வழக்கத்தில் அண்ணாதுரை என்று சொல்லும் போது அறிஞர் அண்ணாதுரை என்று சொல்வது இயல்பாக ஆகியிருந்தது. ஆனால் நா.பா. ஒரு போதும்

அத்தகைய அடைமொழிகளைச் சேர்த்துச் சொல்லவோ எழுதவோ மாட்டார்.

நா.பா. குமுதத்திற்கு ஒரு கடிதம் எழுதினார். 'இப்படி நான் பேசிய வாக்கியம் இப்படி அச்சாகியிருக்கிறது என்பதாக அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது. குமுதம் உடனடியாக நா.பா.வின் கடிதத்தைப் பிரசுரித்தது. மேலோட்டமாகப் பார்க்கிறவர்களுக்கு இரண்டு வாக்கியங்களும் ஒன்றாகத் தானே இருக்கின்றன என்றுதான் தோன்றும். நுணுக்கமாக வாசிப் பவர்கள் வித்தியாசத்தைப் புரிந்துகொள்வார்கள்.

அதையொட்டி குமுதத்தில் பல வாரங்கள் சர்ச்சை நிகழ்ந்தது. பலர் எதிர்வாதங்களை முன்வைத்தார்கள். ஆனால் நா.பா. தன் நிலைப்பாட்டை இறுதிவரை மாற்றிக் கொள்ளவே இல்லை. இலக்கிய அறிவைப் பொறுத்தவரை அண்ணா துரையை விடக் கருணாநிதி கூடுதலாக அறிந்தவர் என்பது நா.பாவின் கருத்தாக இருந்தது. எனினும் திராவிடக் கட்சிகளை எதிர்த்த நா.பா. கருணாநிதியை மேடைகளில் காட்டமாக எதிர்க்கவும் தயங்கியதில்லை. சத்தியவெள்ளம் நாவலே திராவிடக் கட்சிகளை எதிர்த்து காமராஜை ஆதரித்துத் தான் எழுதப்பட்டது. அந்த நாவலில் காமராஜ், ராமராஜ் என்ற பெயரில் ஒரு பாத்திரமாக வருகிறார். தம்மை நா.பா. எதிர்த்த போதும் கருணாநிதி நா.பா.வின் இலக்கிய ஆற்றலை மதிக்க மறந்ததில்லை.

ஆனந்தவிகடன் நடத்திய சரித்திர நாவல் போட்டியில் நா.பா., அகிலன், கருணாநிதி ஆகிய மூவரும் நீதிபதிகளாக இருந்தார்கள். இலக்கிய அளவில் இந்த மூவரும் ஒருமனதாக மு.மேத்தாவின் சோழநிலா நாவலுக்கு முதல் பரிசு வழங்கினார்கள்.

நா.பா.வின் அரசியல் பேச்சு இடி முழங்குவது போல் இருக்கும் என்றால் இலக்கியப் பேச்சு ஜிலுஜிலுவென்று தென்றல் வீசுவதுபோல் இருக்கும். மறைந்த எழத்தாளர் கு.அழகிரிசாமியைப் பற்றி இலக்கியச் சிந்தனைக் கூட்ட மொன்றில் நா.பா. பேசினார். அந்தப் பேச்சைக் கேட்டு வியந்த இலக்கியச் சிந்தனை பாரதி, நா.பா. தம் பேச்சை அப்படியே புத்தகமாக எழுத வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். ஆனால் தம் எந்தப் பேச்சையும் பிறகு எழுத்தில் வடிக்க

நா.பாவுக்கு நேரம் கிட்டியதே இல்லை. எழுத்தில் எழுதாத பல விஷயங்களை அவர் நயம்படப் பேச்சில் தெரிவித்து வந்தார். என்றாலும் அவர் பேச்செல்லாம் எழுத்தாய்ப் பதிவாகாமல் காற்றோடு தான் போயிற்று.

அவரது சொற்பொழிவைக் கேட்பவர்கள் அவர் பேச்சில் ஒரு முழுமையை உணர்வார்கள். தாம் எழுதும் சிறுகதை மாதிரி ஓர் எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என வகுத்துக் கொண்டு ஒரு மணி நேரம், ஒன்றரை மணி நேரம் என அவர் பேசிவந்தார். பேச்சின் இறுதியில் அதுவரை என்னென்ன பேசினோம் என்பதை அவர் தொகுத்துச் சொல்வதும் உண்டு. குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற்பள்ளு, நந்திக் கலம்பகம், பாரதி கவிதை என இடைக்கால, தற்கால இலக்கியங்கள் குறித்து இன்னும் சற்றுப் பேசமாட்டாரா என்று ஆவல் தோன்றும் வகையில் அவர் பேசுவார். தவிர சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் போன்ற பழைய இலக்கியங்கள் குறித்தும் பேசுவது உண்டு. இலக்கணத்தைப் பற்றிக்கூடக் கேட்பார் ரசிக்கும் வகையில் சுவாரஸ்யமாக அவரால் பேச இயலும். ஓரிரு பட்டிமன்றங்களில் எப்போதோ அவர் நடுவராகக் கலந்து கொண்டாலும், பொதுவாக அவர் பட்டிமன்றங்களில் பேசியதில்லை. அவர் காலத்திலேயே பட்டிமன்றங்கள் மிகவும் தரம் தாழ்ந்துவிட்டன என்பது அவர் கருத்தாக இருந்தது. நிறையப் புத்தக வெளியீட்டு விழாக்களிலும் அவர் கலந்துகொண்டு பேசியிருக்கிறார். வெறுமே சம்பிரதாயமாகப் பாராட்டாமலும் அதே நேரத்தில் குற்றங் குறைகளை மட்டுமே கூறித் தாக்காமலும் குணம் நாடிக் குற்றமும் நாடி சமச்சீராக அவர் உரையாற்றுவார்.

அவர் பேச்செங்கும் ஒரு மெல்லிய நகைச்சுவை இழையோடிக் கொண்டே இருக்கும். முகத்தில் ஒரு சின்ன முறுவலாவது வராமல் அவர் பேச்சைக் கேட்க முடியாது. கடினமான புழக்கத்தில் இல்லாத சொற்களை அவர் தம் பேச்சில் உபயோகிப்பதில்லை. அவர் எழுத்தைப் போலவே அவர் பேச்சும் செயற்கைத் தன்மை ஏதுமில்லாமல் இயல்பாக இருக்கும்.

சிறந்த எழுத்தாளராக ஆக வேண்டும் என்பதோடு கூட சிறந்த பேச்சாளராக ஆக வேண்டும் என்பதும் நா.பா.வின்

தொடக்க காலத்திலிருந்தே அவர் கனவாக இருந்திருக்க வேண்டும். அதனால் தான் அவரது ஆரம்பகாலப் பாத்திரமான குறிஞ்சி மலர் பூரணியை அவர் ஈடிணையில்லாத பேச்சாளராகப் படைத்திருக்கிறார் என்று தோன்றுகிறது. மெல்ல மெல்ல உயர்தரப் பேச்சாளராக உருவான நா.பா. பேசுகிறார் என்று அழைப்பிதழில் அச்சிட்டால் அவர் பேச்சைக் கேட்கவென்றே பெருங்கூட்டம் கூடத் தொடங்கியது. பிரமுகர்கள் பலரும் நா.பா. பேச்சின் ரசிகர்களாக இருந்தார்கள். முக்கியமாக பெருந்தலைவர் காமராஜ் நா.பா. பேச்சை விரும்பி ரசித்தார். தமக்கு ஆதரவாக முன்வைக்கும் தர்க்கரீதியான நா.பா.வின் வாதங்களை காமராஜ் கேட்டு வியந்து மகிழ்வதுண்டு.

நா.பா.வின் குரலில் ஒரு தனி இனிமையும் கம்பீரமும் இருந்தன. ஆலய மணிக்குரல் அது. கண்ணதாசனுக்கும் அத்தகைய குரலினிமை இருந்தது. கண்ணதாசன் தம் இனிய குரலால் மேடையில் பாடவும் பாடுவார். நா.பா. பாட மாட்டார். ஆனாலும் அவர் பேச்சே ஒரு சங்கீதம் போல் தான் இருக்கும். கருத்தாக மட்டுமல்லாமல் வெறும் குரலுக்காகவே கூட அவர் பேச்சைக் கேட்டுக் கொண்டிருக்கலாம் போல் தோன்றும். உச்சரிப்பைப் பொறுத்தவரை கி.வா.ஜகந்நாதன், அ.ச.ஞானசம்பந்தன் போன்றோரைப் போல பிசிரற்ற திருத்தமான உச்சரிப்புடைய மிகச் சிலரில் ஒருவர் அவர். ஒரு சொல்லை எப்படி உச்சரிக்க வேண்டும் என்பதற்கு அவரிடம் தான் பாடம் கேட்க வேண்டும்.

எழுத்து, பேச்சு இரண்டையுமே அவர் தமது இரு கண்களாகக் கொண்டிருந்தார் என்று தான் சொல்ல வேண்டும். சிறப்பாக எழுதும் பல எழுத்தாளர்களுக்குப் பேச வருவதில்லை. சில எழுத்தாளர்கள் அதிகம் புகழடையாததற்கு அவர்களுக்குப் பேச்சாற்றல் இல்லாதிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம். பேசும்போது தான் வாசகர்களை நேரடியாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டுகிறது. இதனால் ஓர் எழுத்தாளரின் வாசக தளம் மிகச் சுலபமாக விரிவடைகிறது. எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் இடையேயான நட்புறவு மேலும் நெருக்கமாகிறது.

நா.பா. மிக நல்ல மேடைப் பேச்சாளர் மட்டுமல்ல, மிகச் சிறப்பாக உரையாடக் கூடியவரும் கூட. பல கூட்டங்களில்

அவர் பேசி முடித்த பிறகு நேருக்கு நேர் நிகழ்ச்சியும் சேர்த்தே ஏற்பாடு செய்யப்படும். இலக்கிய அன்பர்கள் அவரைக் கேள்வி கேட்பார்கள். அவர் அந்தக் கேள்விகளுக்கெல்லாம் கேட்டவர் ஏற்கும் வகையில் பதில் சொல்வார்.

இன்று நயம்படப் பேசும் எழுத்தாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அரசியல் போலவும் திரைத்துறை போலவும் இலக்கியவாதிகளும் தனிமனிதத் தாக்குதலில் இறங்கத் தொடங்கிவிட்டார்கள். வீண் அகம்பாவம் கொண்ட அறிக்கை களையும், தன்னை முன்னிலைப் படுத்திக்கொள்ளச் சாதனை யாளர்களை அவதூறு செய்யும் அநியாயத்தையும் எழுத்தாளர்கள் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். இன்றைய சூழலில் நா.பா.வின் கண்ணியமும் நாகரிகமும் நிறைந்த பண்பட்ட பேச்சு நினைக்கும்போதெல்லாம் அதைக் கேட்டவர் மனத்தில் இனிக்கிறது.

# நா. பா. என்கிற நல்ல மனிதர்

**சுப்ர. பாலன்**

''சுப்ர பாலன் !'' என்று கீழேயிருந்தே குரல் கேட்கும். அடுத்த விநாடியே என்கிற மாதிரி என் மாடிக்குடியிருப்பின் இரண்டாவது தளத்தில் வந்து சிரித்துக் கொண்டே நிற்பார். இரண்டிரண்டு படிகளாய்த் தாவி ஏறிவருகிற வேகம்...!

''புறப்படுங்கள் ! பால்யூவைப் பார்க்கணும். சீக்கிரம்..'' என்பார். என் தாயோ, மனைவியோ இவருடைய குரல் கேட்டதுமே அரை தம்ளர் டீயோ, காபியோ கலந்து எடுத்து வந்து தருவார்கள். அதுதான் அவருடைய அளவு என்பது அவர்களுக்குத் தெரியும். கூடவே ஒரு தம்ளர் தண்ணீரும் வேண்டும். காபியோ, தேநீரோ பருகினால் உடனே வாய் கொப்பளித்தாக வேண்டும். பற்களைப் பாதுகாப்பதில் அத்தனை சிரத்தை.

எல்லாவற்றிலும் வேகம், வேகம். வேகம் தான் அவருடைய வாழ்க்கை முறையாக இருந்தது. நா.பா. வந்து அழைக்கிற நேரம் காலை ஏழு மணி அளவில் இருக்கும். சில நாட்களில் குளித்துக் கூட இருக்க மாட்டேன். உடனே அவருடன் புறப்பட்டாக வேண்டும்.

பால்யூவோ, சௌரியோ, ஜெயகாந்தனோ - நான் குடியிருந்த கலைஞர் கருணாநிதி நகர் வட்டாரத்தில் இருந்த நண்பர்களைப் போய்ச் சந்திக்கிற போது தான் இப்படி. இல்லாவிட்டால் வேறு இடங்களுக்குப் போவதாயிருந்தால் முதல் நாளே சொல்லி விடுவார். ''சுப்ர. பாலன்! சாயங்காலம் மைலாப்பூர் வர்ரிங்களா?''

எனக்கு அப்போது கல்லூரிச் சாலை அலுவலகத்தில் வேலை. திருவல்லிக்கேணியில், நல்ல தம்பிச் செட்டித் தெருவில் 'தீபம்' அலுவலகம் இருந்தது. சமயங்களில் என் அலுவலகம் முடிகிற நேரத்தில் முன் கூட்டியே சொல்லிவிட்டு, சாலையோரத்தில் காரை நிறுத்தி விட்டுக் காத்திருப்பார். நேரம் பிசகாமல் நான் போய் விடுவேன்.

காரை அவரேதான் ஓட்டுவார். 'தினமணி'யில் வேலை பார்த்த காலங்களில் கூட ஓட்டுநர் வைத்துக் கொண்டதில்லை.

வெகு வேகமாகக் காரை ஓட்டுவதில் நிபுணர் நா.பா. சாலையில் பார்வையை ஓடவிட்ட வாறே நம்மிடம் பேசிக் கொண்டும் வருவார்.

அவருக்கு சைக்கிள்காரர்கள் மீது தான் எச்சரிக்கை அதிகம். எந்த நேரத்தில், எங்கே அவர்கள் திரும்புவார்கள் என்பது தெரியாது. நான் எப்போதும் எத்தனை தொலைவானாலும் சைக்கிளிலேயே சென்னையை அளந்தவன். எனவே, காரின் குறுக்கே சைக்கிள் ஏதாவது வந்துவிட்டால், பிரேக் பிடித்துச் சமாளித்து விடுவார். அவனைத் திட்டமாட்டார். சிரித்துக் கொண்டே என்னைப் பார்த்து ''பாத்திங்களா? 'உங்க' ஆளுங்கதான் பிரச்சனையே'' என்பார். 'உங்க' என்பது என்னையும் சேர்த்துச் சைக்கிள் வாலாக்களைத்தான்.

எனக்கும் கொஞ்சம் வருத்தமாகவும் இருக்கும். ஒன்றி ரண்டு முறை வண்டியை 'கராஜில்' விட்டிருந்த நேரங்களில் அவசரம் கருதி என் சைக்கிளிலும் கேரியரில் அமர்ந்து சிறு தொலைவு அவர் பயணம் சென்றதுண்டு. ''இந்த எம்ஜியார் பண்ணின புண்ணிய காரியத்தை நாம் அனுபவிப்போம்'' என்று சொல்லிக் கொண்டே சைக்கிளில் அமர்ந்து கொள்வார்.

முதலமைச்சராக எம்.ஜி.ஆர். இருந்த போது தான் சைக்கிள்களில் இருவர் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. காவல் துறையினர் இந்த 'டபிள்ஸ்' வழக்குகள் போட்டுப் போட்டுச் சோர்ந்து போயிருப்பார்கள்.

அனேகமாக தினமுமே மாலை நேரங்களிலோ, காலையிலோ நான் அவரைச் சந்திப்பது உண்டு. அலுவலகத்தில் நேரமாகி விட்டால் தான் முடியாமல் போகும். சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில் மாலை ஐந்து மணிக்கே என் வருகைக்குக் காத்திருப்பார். நிகழ்ச்சிகள் இருந்தால் அதற்குப் போய் விடுவோம். இல்லாவிட்டால் துணைக்கு செல்ல நாய் ஸீஸரையும் அழைத்துக் கொண்டு நாங்கள் செல்கிற இடம் நந்தனம் ஒய்.எம்.ஸி.ஏ. வளாகப் புல்வெளிக்குத்தான். அங்கே பல மாலை நேரங்களைக் கழித்திருக்கிறோம். இரவு ஏழுமணி வாக்கில் திரும்புவோம்.

மாலை ஐந்து மணி என்றால் – எங்கேயிருந்தாலும் 'மாலை முரசு' வாங்கிப் பார்த்தாக வேண்டும் அவருக்கு. உஸ்மான்

சாலை – நந்தனம் சந்திப்பில் வழக்கமான வெற்றிலை பாக்குக் கடையில் நா.பா.வுக்கான செய்தித்தாள்கள் காத்திருக்கும். 'ஐந்து மணி ஆகிவிட்டால் பேப்பர் கிடைக்காது. வந்த சூட்டில் பறந்து விடும்' என்பார். ஒரு மூன்று நிமிடம் கூட அதில் நேரம் போகாது. மேலோட்டமாகவே பார்த்து மடக்கி வைத்துக் கொள்வார்.

''சுப்ர. பாலன்! இது முக்கியமா வீட்டிலே இருக்கறவங்க பார்க்கணும்னே வாங்கறேன். அங்கே கொள்ளை, இங்கே ஏமாற்று வேலை, திருட்டு எல்லாம் வரதே. படிச்சுட்டு வீட்டிலே இருக்கிறவங்க எச்சரிக்கையா இருக்கணும்'' என்பார். ஆனால் அவர்கள் விரும்பிப்படிப்பதென்னவோ சினிமாச் செய்தி களாய்த்தானிருக்கும் என்றும் சொல்லி வருத்தப்படுவார்.

நா.பா. ஏன்கிற கவர்ச்சியான பிரமுகரோடு எனக்கு முதன் முதலாக அறிமுகம் ஏற்பட்டது 1958ம் ஆண்டில். எனக்கு அப்போது பத்தொன்பது வயது நிறையவில்லை. அரசாங்க அலுவலகத்தில் வேலை கிடைத்தது. மதுரை– அருப்புக் கோட்டை வழியில் ஜோகில்பட்டி என்கிற சிறிய கிராமத்திலிருந்த அரசாங்கப் பள்ளிக் கூடம் அது. சொந்த ஊர் புதுக்கோட்டையிலிருந்து மதுரை வழியே தான் ஜோகில் பட்டிக்குப் போக வேண்டும்.

அப்போது கல்கியில் '' பாண்டிமாதேவி' தொடராக வந்த காலம். அதற்கு முன்பே, கல்கி நடத்திய மாதச்சிறுகதைப் போட்டி யொன்றில், நா.பா.எழுதிய 'வலம்புரிச் சங்கு' என்கிற அற்புதமான சிறுகதை 'நூறு ரூபாய்ப்' பரிசுப் பெற்றதாய் வெளியாகியிருந்தது. அதை விடச் சிறப்பான மனிதாபிமானச் சிறுகதையை இன்று வரை கூட யாரும் எழுதி விடவில்லை என்பது என் கணிப்பு.

பத்தொன்பது வயது இளைஞனாய் நான் நா.பா. என்கிற கம்பீரத்தைச் சந்தித்த போது அவர் மதுரை பழங்காநத்தத்தில் திருப்பரங்குன்றம் சாலையில் ஒரு வீட்டில் குடியிருந்தார். சிறுவனாக அங்கே அப்போது இருந்தவர்தான் பின்னால் தீபம் இதழை நிர்வகித்த 'தீபம் திருமலை'.

அந்த முதல் சந்திப்பின் போது எனக்கு அன்பளிப்பாகக் கையெழுத்திட்டுத் தந்த நூல் 'வலம்புரிச் சங்கு' கதைத் தொகுதி. அதன் பிறகு அடிக்கடி கடிதம் எழுதுவேன். ஒவ்வொரு

கடிதத்துக்கும் தவறாமல் பதில் எழுதுவார் நா.பா. அந்த பதில் கடிதங்களைப் பெறுவதற்கே எத்தனையோ பாக்கியம் செய்திருக்க வேண்டும்.

நண்பர்களுடன் கலந்துரையாடுவதில் அவருக்கு விருப்பம் அதிகம். இதற்காகவே தீபம் அலுவலகத்திலேயே 'பவர்' என்ற அமைப்பை உருவாக்கிக் கூட்டங்கள் நடத்தியது நா.பா. அன்பர்களுக்கு நினைவிருக்கும். பிற்காலத்தில் அதே சிந்தனையோடு 'திண்ணை' என்கிற அமைப்பைத் தொடங்கி வைத்தார். அதன் முதல் கூட்டம் கலைஞர் கருணாநிதி நகரில் இருந்த, என்னுடைய இல்லத்தில் தான் நடைபெற்றது. பெரியவர் சுனந்தா, சிட்டி, சோ. சிவபாத சுந்தரம், டாக்டர் விக்கிரமன், சி.சு. செல்லப்பா, வல்லிக்கண்ணன், தி.க.சி., பீஷ்மன், பால்யூ, இரா.சுராஜ், தொ.மு.சி. ரகுநாதன், – என்று அந்தக் கூட்டங்களில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை விரிவானது. திருப்பூர் கிருஷ்ணன், ஹிந்து நடராஜன் இல்லங்களிலும் நா.பா.வின் இல்லத்திலும் இந்தக் கூட்டங்கள் நடந்தன. "அதிகம் பேர் வேண்டாம் சுப்ர-பாலன் ஐந்தாறு பேர் இருந்தால் போதும். அப்படி அழைத்தால் போதும்" என்பார். மனம்விட்டு உரையாடுவதற்கு ஏற்ற அமைப்பல்லாத அமைப்பாக அது விளங்கியது.

அவரிடம் ஒரு முக்கியமான பழக்கம் இருந்தது. அவ்வப் போது வெளிநாட்டுப் பயணம் மேற்கொள்கிறபோது, விமான நிலையத்துக்கு வழியனுப்பி வைக்கப் போவோம். அப்படிப் போய் வழியனுப்பியவர்கள் யாராயிருந்தாலும் அந்த வெளி நாட்டிலிருந்து ஒரு அஞ்சலட்டையாவது எழுதிவிடுவார். அதற்கு அவர் சொன்ன காரணம் சிந்தனைக்குரியது. 'சுப்ர.பாலன்! எத்தனையோ வேலை இருக்கும். விட்டுவிட்டு நம்மை வழியனுப்ப வருகிறார்கள். அதற்காக நன்றி தெரிவிக்கிற மாதிரி இருக்கட்டுமே' என்பார்.

நா.பா.வின் கடைசி ஆண்டுகளில், அவர் எழுதிய நாவல்களையும், வேறு சில கதைகளையும், நா.பா.வின் மணிக் கையெழுத்து வடிவிலேயே படித்துப் பார்க்கும்பேறு பெற்றவர் களுள் நானும் ஒருவன். எனக்கு முன்பே நா.பா.வின் துணைவி யார் அதைப் படித்திருப்பார்கள். எங்களைப் படித்துப் பார்க்கச் சொல்வாரே தவிர, அபிப்ராயம் எதையும் கேட்கமாட்டார்.

தப்பித்தவறி எதையாவது 'இப்படி இருக்கலாம்' என்கிற மாதிரி சொன்னாலும் அதை அவர் விரும்பமாட்டார். ''பாருங்க! எழுதியாச்சு, அது அவ்வளவு தான் '' என்று அழுத்திச் சொல்லி விடுவார்.

அவருடைய கணிப்பின் படி, ஒரு எழுத்தாளன் என்பவன் எழுதிக்கொண்டே இருக்க வேண்டும். 'சற்றுத் தொய்வு ஏற்பட்டாலும் மறந்து போய் விடுவார்கள்' என்பார்.

ஸீஸர்–என்கிற நாயைப் பற்றி முன்னால் குறிப்பிட்டேன். அதை 'நாய்' என்று சொன்னால் கூட நா.பா.விரும்பமாட்டார். சொந்தப் பிள்ளையைப் போல் அதன் மீது உயிரையே வைத்திருந் தார். ஸீஸருடன் நா.பா. நடந்து வருகிறமாதிரி ஒரு முழுப் பக்கப் படத்தைக் குமுதத்தில் வெளியிட்டார்கள். அதற்கு 'பால்யூ' தந்திருந்த குறும்புத் தலைப்பு 'நா.பா.வின் நடை'.

ஒரு நாள் மாலை நேரத்தில் நா.பா.வின் இல்லம் சென்ற போது அங்கே இருள் மண்டிய மாதிரி ஒரு பிரமை. வழக்கமாய்க் காது செவிடுபடும்படி கேட்கிற ஸீஸரின் குரல் வரவேற்க வில்லை. ஸோபாவில் அமர்ந்து கன்னத்தில் கையை ஊன்றி எங்கோ வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். 'வாங்க..' என்று உற்சாமின்றியே வரவேற்றார். வழக்கமாய் ஸீஸர் படுத்திருக்கும் இடத்தில் ஓர் அகல் விளக்கு எரிந்து கொண்டி ருந்ததைப் பார்த்து மனம் துணுக்குற்றது. நிமிர்ந்து பார்த்தேன்.

''சுப்ர.பாலன் ! என் ஸீஸரை இலங்கைத் தமிழர்களின் போராட்டத்துக்குப் பலி கொடுத்து விட்டேன்'' என்றார்.

அன்றைக்கு மாநில அளவில் நடைபெற்ற பந்த்! இலங்கைத் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்றது. மருத்துவமனைகள் கூட இயங்கவில்லை. காலையில் உடல் நலம் குன்றியிருந்த ஸீஸரை அழைத்துக் கொண்டு, நந்தனம் கால்நடை மருத்துவ மனைக்குப் போயிருக் கிறார் நா.பா. உள்ளே மருத்துவரோ, உதவியாளரோ யாருமே இல்லை. காவலாள் மட்டும் தான் இருந்திருக்கிறார்.

என்ன செய்வது என்று தெரியாமல் காருக்குத் திரும்பி னால், ஸீஸர் அவரை நிமிர்ந்து பார்த்து விட்டு அப்படியே கண்களை மூடிக் கொண்டதாம். அந்த நேரத்தில் அவர் மனம் என்னபாடு பட்டிருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்ப்பது கூடச் சிரமம் தான்!

இருந்தாலும் நிதானம் தவறாமல் அங்கேயே, காவலாளியிடம் ஒரு மண் வெட்டியை வாங்கி, இடம் செய்து, ஸீஸரைத் தூக்கிக் கொண்டு போய் அடக்கம் பண்ணிவிட்டு மௌனமாகவே காரில் வீடு வந்து சேர்ந்திருக்கிறார்.

"ஒரு டாக்டர் இருந்து ஏதாவது ஊசி போட்டிருந்தால் என் ஸீசர் இப்படி ஆகியிருப்பானா? என்று சொல்லிச் சொல்லி அங்கலாய்த்தார்.

அத்துடன் முடியவில்லை ஸீஸர் மறைந்து ஒரு மாதத்துக்குள்ளாகவே, பெங்களூர் நண்பர் ஒருவர் மூலம், அதே தோற்றமுடைய நாய்க்குட்டியொன்றை வாங்கி வந்தார். அதுவும் ஸீஸரின் 'குளோனிங்' மாதிரி அச்சாக வளர்ந்தது. தோற்றம் மட்டும் தான் ஸீஸர்! "அவனுடைய அறிவு இவனுக்கு வராது." என்பார்.

அந்த ஸீஸர் இருந்த போது அவனுடைய குணாதிசயங்களைக் கவனித்துத் 'தோழன்' என்கிற தலைப்பில் ஒரு சிறுவர் பாடல் எழுதினேன். அதைப் படித்துப் பார்த்த நா.பா. சொன்னது. "எல்லாம் சரி சுப்ர.பாலன்! கடைசி வரி மட்டும் தப்பு." என்றார்.

'திண்ணை தூங்கும் நேரம் கூடத்
தெருவில் ஒரு கண் வைக்கின்றான்!
தண்ணீர்க் குளியல் என்றால் மட்டும்
தப்பி ஓடிப் போகின்றான்!.

ஸீஸருக்குக் குளிப்பது என்றால் மிகவும் சந்தோஷமான விஷயமாம். "தப்பியெல்லாம் ஓடிப் போக மாட்டான்" என்றார் நா.பா.

# நாபாவின் கதை

## தீபம் எஸ். திருமலை

சிறுகதை, நாவல் என எழுத்துலகில் நிறைய நூல்கள் எழுதி சாதனை புரிந்தவர் நா.பா. அவரே தன் கதையை எழுத ஆரம்பித்து முதல் அத்தியாயமே கடைசி அத்தியாயமாக முடிந்து விட்டது.

1956 முதல் 1987 மறைவு வரை அவருடன் இருந்தவன் – என்பதே அவரைப்பற்றி எழுத எனக்கு உள்ள ஒரே தகுதி.

நா.பா என் மாமன் மகன் என்றாலும், அவர் ஊர் நதிக்குடி என்பதாலும் என் ஊர் வடக்காண் மறைநாடு என்பதாலும் 1956 வரைஅதிகம் சந்தித்துப் பழகிய நினைவு இல்லை. மதுரையில் 1953 1954ல் மூன்றாவதோ நான்காவதோ படித்த போது என் மாமாவைப் பார்க்க வீரராகவப் பெருமாள் கோயில் சென்ற நேரங்களில் நாபாவை குடுமியுடன் கோயில் நந்தவனத்தில் பூப்பறித்துக் கொண்டு சாமிக்கு அபிஷேகம் செய்து கொண்டிருக்கும் நிலையில் பார்த்துள்ளேன். அவரும் என்னிடம் பேசவில்லை, நானும் பேசவில்லை. பின்னர் ஒரு முறை கூடலழகர் பெருமாள் கோவில்தெருவில் ஒரு ராமானுஜ கூடத்தில் தங்கிப் படித்த போது சாப்பாடு கொண்டு போய் கொடுத்த நினைவு மட்டும் இருக்கிறது.

படிக்கும் நாளிலேயே நடத்திய கல்கத்தா தமிழ் சங்கம் பாரதியார் பற்றிய கட்டுரைப் போட்டியில் கலந்து கொண்டு முதல் பரிசாக தங்கப் பதக்கம் பெற்றார். அந்த பதக்கத்தை அவர் பெற்றோர் எவ்வளவு பெறும் என கணக்கு போட்டுக் கொண்டிருந்தை பார்த்தேன். அவர்கள் குடும்ப வறுமையில் அந்த தங்கப் பதக்கம் விலைபோய்விட்டது.

1955ல் என் சகோதரி திருமணத்திற்கு என் மாமி வந்திருந்தார். நான் அப்போது E.S.L.C.(8ம் வகுப்பு) படித்து வந்தேன். மேற்கொண்டு அங்கு படிக்க பள்ளி வசதில்லை என்ற தகவலை என் தாய் என் மாமியிடம் சொல்லி யிருப்பார்கள்போலும். என் தாய்க்கு நாபாவிடமிருந்து ஒரு கார்டு வந்தது. பென்சிலால் எழுதப்பட்டிருந்தது. திருமலையை நான் படிக்க வைக்கிறேன். இத்தனாம் தேதி பள்ளி திறக்கிறார்கள் என்று கடிதம் வந்தது. நான் படித்த பள்ளியில் என் ஆசிரியர்களிடம் நாபா என் உறவினர் என்று

சொல்லி கல்கியில் வந்த வலம்புரிச்சங்கு கதையைக் காட்டியிருக்கிறேன். எனவே நாபா கார்டை பள்ளி ஆசிரியரிடமும் காட்டினேன். பெரிய எழுத்தாளர் என்கிறாய் பென்சிலில் கடிதம் எழுதியிருக்கிறாரே என்று கேட்டது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது.

அப்போது பென்சிலில் எழுதுவது என்பது சாதாரணம். பேனா என்பது சற்று காஸ்ட்லியாக கருதப்பட்டது. நாங்கள் பள்ளியில் எட்டாவது வரை பென்சில் உபயோகித்ததாகத்தான் நினைவு.

உடன் என் அம்மாவுடன் ஒரு பெட்டியில் மாற்று உடையாக இன்னொரு டிராயர் சட்டையுடன் புறப்பட்டு விட்டேன். முதலில் நாபாவின் ஊரான நதிக்குடி சென்று எனது இன்னொரு மாமாவான (நாபாவின் சித்தப்பா) ராஜா அய்யங்காரிடம் ஆசிபெற்று பள்ளியில் சேர்க்க விரும்பினார் என் தாயார். இவன் படித்து என்ன செய்ய போகிறான்? கலெக்டர் வேலைக்கா போகப்போகிறான்? எதற்கு வீண் செலவு என்றுதான் அவர் ஆசி வழங்கினார். அவர் காலம் அப்படி. அவரே படிக்காதவர் தான். விவசாயம்தான் தொழில். என் மூன்று மாமாக்களுமே பள்ளி சென்று படிக்காதவர்கள் தான். ஆனால் எழுதப்படிக்கத் தெரியும். ஸ்ரீரங்கம், அழகர் கோவில்களில் கோவில் மடைப் பள்ளியில் பணிபுரிந்திருக்கிறார்கள். மூன்று மாமாக்களும் காரைக்குடி தேவகோட்டையில் ஹோட்டலும் நடத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் குடும்பத்திற்கு மாட பூசிலான் என்ற பெயர் உண்டு. அது பற்றி நாபாவின் அண்ணன் ஸ்ரீநிவாசன் அவர்களிடம் (ஓய்வு பெற்ற தமிழாசிரியர்) கேட்ட போது மாடபூசி என்பது காஞ்சிபுரம் அருகில் உள்ள கிராமம். அங்கிருந்து ஒரு காலத்தில் பாண்டிய நாட்டிற்கு ராணி மங்கம்மாள் காலத்தில் நதிக்குடிக்கு குடிபெயர்ந்தாகக் கூறுகிறார்.

ஓவியர் மதன் கூட தன்னை மாடபூசி பரம்பரை என்று எழுதியுள்ளதாக நினைவு. அதனால்தான் நாபாவின் தந்தை தன் பெயரை M.S. நாராயண அய்யங்கார் என்று தான் கையெழுத்திடுவார். எம் என்பது மாடபூசி என்ற குடும்பப் பெயரின் இன்ஷியல். ஆனால் நாபா வோ அந்த எம் சேர்த்துக் கொள்ளவில்லை. அப்படி ஒரு வேளை சேர்த்துக் கொண்டிருந்தால் M.N.பார்த்தசாரதியாக இருந்திருப்பார்.

முதலில் N. பார்த்தசாரதி என்று தான் கையெழுத்திடுவார். Na என்றும் சில காலம் எழுதிவந்தார். பின்னர் எண் சோதிடப்படி (அதில் அதிக நம்பிக்கை கொண்டவர்) Naa என்று பின்னர் மாற்றிக் கொண்டார். அதனால் தீபம் என்ற பெயரையும் அலுவலக டெலிபோன் நம்பர் வீட்டு டெலிபோன் நம்பர் கார் நம்பர் எல்லாவற்றிலும் அவருக்கு உகந்த Naa வரும்படி பார்த்துக் கொண்டார்.

பின்னர் கடைசியில் தற்செயலாக வீட்டு நம்பர், போன் நம்பர், கார் நம்பர் எதுவும் அவருக்கு பொருத்தமில்லைாமல் அமைந்து விட்ட போது அவர் கதையும் முடிந்து விட்டது. நாபாவின் சித்தப்பா முத்து அய்யங்காருக்கு M.S.உடன்பாடு இல்லாததால் N.S. முத்து அய்யங்கார் என்று தான் கையெழுத் திடுவார்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் சென்று அங்கிருந்து பஸ் ஏறி வத்திராயிருப்பு சென்றோம். கிராமத்து பெரிய வீடு. ஆனால் மின் விளக்கு இல்லை. வீட்டில் இரண்டு மூன்று லாந்தர் விளக்குதான். அதில் தான் அவர் படைப்புகள் அப்போது உருவாயின. தினமும் லாந்தர் கிளாஸ்களுக்கு கோலப்பொடி போட்டு தேய்த்து பளிச்சிடச் செய்ய வேண்டியது என் வேலை.

பிரபல விஞ்ஞானி KS. கிருஷ்ணன் வீட்டிற்கு அடுத்த வீட்டில் தான் நாபா குடியிருந்தார். அதனால் பலரும் (அப்போது வீட்டு எண் கிடையாது) நாபா வீட்டை கே.எ. கிருஷ்ணன் வீட்டிற்கு அடுத்த வீடுதானே என்று கேட்டார்கள். அதில் நா.பா.வுக்கு உடன்பாடு கிடையாது. என் வீட்டிற்க்கு அடுத்த வீடுதான் கே.எ. கிருஷ்ணன் வீடு என்பார்.

அவர் வீட்டில் என்னைப் பெரிதும் கவர்ந்தது ஏராளமான நூல்கள்தான். அப்பொழுதே அவர் மிகவும் பிஸியான எழுத்தாளர். இலங்கை வீரகேசரியில் வாராவாரம் தொடர் கட்டுரை எழுதி வந்தார். அதில் அவர் புனைபெயரில்தான் எழுதிவந்தார். அவர் பெயர் இராமபூரணன். சுதேசமித்திரன் ஞாயிறு மலரில் புறநானூற்றுக் காட்சிகள் எழுதி வந்தார். அப்போது இந்தியா இலங்கை ஒன்றாயிருந்த காலம். ஒரே நாணயம், ஒரே தபால். இலங்கைக்கு கட்டுரைகளை புக்போஸ்டில் அனுப்புவார். அங்கிருந்து பத்திரிகைகள் மணியார்டர் வரும். ஒரு முறை வந்திராயிருப்பில் இருந்த போது இலங்கைக்கு ரயிலில் டிக்கெட்

வாங்கி சென்று வந்திருக்கிறார். அப்போது பல இடங்களில் சொற்பொழிவாற்றித் திரும்பினார். அடுத்த இருமுறை இலங்கை சென்றது பாஸ்போர்ட் விசாவில். விமானப் பயணத்தில்தான். முதல் முறை நாபா சென்ற போது உடன் சென்றவர் மாயூரத்தைச் சேர்ந்த கா. சிங்காரவேலன். அவருடன் கதிர் காமத்தை தரிசிக்க வேண்டும் என்று அவர் தாயாரும் சென்றிருந்தார். அப்போது புகைப்படத்தைக் காண்பித்து அவர் சொன்ன தகவல் இது.

எப்போதும் கதராடைதான். ஆனால் பஞ்சகச்ச வேஷ்டி. தோளில் துண்டு. ரோட்டில் நடந்து சென்றால் எல்லோரையும் ஒரு நிமிடம் நின்று பார்க்கத் தூண்டும் உருவம். வீட்டின் பின்புறம் தான் பள்ளி. ஆனால் ஒரு நாளும் பின்புற வழியாகச் செல்ல மாட்டார். ஆனால் நான் தினமும் பள்ளிக்கு பின்பக்க வழியாகத்தான் செல்வேன். அது ஆண் பெண் சேர்ந்து பழகிடும் பள்ளி. அவரது மாணவ மாணவியரோ அவரது எழுத்தின் ரசிகர்களாகவும் விளங்கினார்கள். ஆனால் சக ஆசிரியர்கள் அவர் எழுத்தைக் கண்டு கொள்ளவே மாட்டார்கள். அவர்கள் பார்வையில் தமிழாசிரியர்கள் என்றால் சற்று மட்டம் தான். ஹரிஹர சுப்பிரமணியம் என்ற ஆசிரியர் மட்டும் நாபாவின் ரசிகராக விளங்கினார். பட்டாபி நாராயணன் என்ற ஆசிரியர் கதை எழுதுவது பெரிய விஷயமா நான் கூட எழுதுவேன் என்று சொல்லி விட்டு ஒரு கதை எழுதி கல்கியில் பரிசும் வாங்கி பின் எழுதுவதை நிறுத்திவிட்டார். அப்போது அவரது சம்பளமே ரூ.56 தான். அப்போது ஆசிரியர்களின் சம்பளம் மிகமிக குறைவாகத்தான் இருந்தது. ஏற்கனவே அவர் குடும்பத்தில் அவர் உட்பட நான்கு பேர்கள். நானும் ஐந்தாவது நபராகச் சேர்ந்து கொண்டேன். வீட்டு வாடகை 5 ரூபாய்தான். எழுத்தின் மூலம் வரும் வரும்படிதான் குடும்பத்தை கஷ்டமில்லாமல் நடத்த உதவியது என்பது உண்மை. வீரகேசரியில் வாரம் பத்து ரூபாய் என்றாலும் நான்கு வாரங்களுக்கு ரூ.40/– மணியார்டர் வந்து விடும். வீடு இருக்கும் அதே தெருவில்தான் அஞ்சலகம். போஸ்ட்மேன் வீட்டுக்கு வரும் வரை பொறுக்க மாட்டார். அதற்கு முன்பு என்னை தபால் நிலையத்திற்கு லெட்டர் வாங்கி வர அனுப்பி விடுவார். என் தலையைக் கண்டதும் போஸ்ட்மேன் தயாராக எடுத்து வைத்திருக்கும் பத்திரிக்கை கடிதங்களை எடுத்துக் கொடுத்து விடுவார். அப்போது கதை தேர்வானதும் கடிதம் எழுதுவார்கள். தங்கள் கதை பிரசுரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது, இந்த இதழில் வெளியாகும் என்பதை

மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கடிதம் வரும். பத்திரிகைக்கு அனுப்பி பிரசுரத்திற்கு ஏற்கப்படாத கதைகளும் திரும்பி விடும். ஒரு சில பத்திரிகைகளில் வெளியான கதைக்கு சன்மானம் செக்காக அனுப்புவதும் உண்டு. வங்கிக் கணக்கு மதுரையில் தான் வைத்திருந்தார். நண்பர்கள், வாசகர்களிடமிருந்து நிறைய கடிதம் வரும்.

எந்த கடிதமாயிருந்தாலும் உடன் மறுமொழி எழுதிவிடுவார். பள்ளியில் லீஷர் பீரியட் உண்டு. அந்தநேரத்தில் நோட்ஸ் ஆப் லெஸன் எழுதுவார். அது போக மீதமுள்ள நேரத்தில் நேரத்தை வீணாக்காமல் கதை எழுதுவார். அதனால்தான் அவர் நோட்ஸ் ஆப் லெஸன் எழுதும் அளவான நோட்டையே கதை எழுதவும் பயன்படுத்தினார்.

ஒரு கதையை எழுதி முடித்துவிட்டு அடுத்த கதை எழுதுவது என்ற பழக்கம் இல்லை. ஒரே சமயத்தில் இரண்டு மூன்று நாவல்கள் எழுத ஆரம்பித்து, தினமும் ஒவ்வொரு நாவலிலும் ஒரு அத்தியாயம் எழுதிவிடுவார். அப்போது பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்ட எல்லா போட்டிகளிலும் ஆவலுடன் கலந்து கொண்டார். ஆனந்த விகடன் அறிவித்த சிறுகதைப் போட்டிக்கு 3 சிறுகதைகள் அனுப்பினார் .அவைகள் பிரசுரத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு பிரசுரமாயின.

கிராமத்து கறந்த பாலில் நல்ல காபி –இரண்டு மூன்று முறை அருந்துவார். எனக்கு கிராமத்தில் காபி பழக்கம் கிடையாது. நாபா வீடு வந்துதான் எனக்கு காபி பழக்கம் ஏற்பட்டது. கிணற்றில் தண்ணீருக்கு பஞ்சமில்லை. அதனால் வாளி வாளியாகத் தண்ணீர் இறைத்துக் குளிப்பார். மைசூர் சாண்டல் சோப்தான் உபயோகிப்பார். ஒரு வாரத்திற்கு ஒரு சோப் காலியாகி விடும். கிணற்றடியே மைசூர் சாண்டல் மயமாகிவிடும். அவர் மீது மைசூர் சாண்டல் பவுடர் மணக்கும். அதுவும் சாண்டல் பவுடர் தான். குளிக்கும் முன் தினமும் தலையில் கொழும்புத் தேங்கா யெண்ணெய் தடவிக் கொண்டு குளிப்பார். தினமும் ஷேவ் செய்து கொள்ளவார். அவர் தினமும் தவறாமல் வெண் பொங்கல், தக்காளி–தயிர் பச்சடி, பொங்கலில் முதலில் நெய் ஊற்றி–பின்னர் தயிர் ஊற்றி சாப்பிடுவார். பகலில் சாம்பார் ரசம், கூட்டு பொரியல், ரசம் அப்பளம் என்று ஒன்றும் குறைவில்லாமல் இருக்க வேண்டும். இரவும் சுடு சோறும், மிளகு ரசம், சுட்ட அப்பளம். ஒரு

நாள் வேப்பம் பூ ரசம் என்று என் மாமி வகை வகையாக பார்த்து பார்த்து சமைப்பார். என் மாமி செய்து போட்ட வாழைக்காய், உருளைக் கிழங்கு பொடிமாஸ், எண்ணை வாழைக்காய், எண்ணைக் கத்திரிக்காய், மோர்க் கீரை போல் வேறு யாரும் செய்ததே கிடையாது.

புதன், சனி கிழமைகளில் எண்ணைக் குளியல் தவறாது. அதற்கு சீகைக்காய் பொடியை உபயோகிக்க மாட்டார். சீகைக் காயை ஊற வைத்து, வெந்தயம் சேர்த்து அரைத்த தூள் தான் பயன்படுத்துவார். எண்ணைக்குளியல் அன்று மட்டும் வெந்நீர். தினமும் இரண்டு வேளை குளியல். துணிகளை வீட்டில் துவைப்பது இல்லை. சலவைக்குத்தான் போடுவார். மடிப்புக் கலையாமல் அணிவதில் கவனம் செலுத்துவார். இரவில் தினமும் சந்தனக் கல்லில் சந்தனக்கட்டையை அரைத்துத் தர வேண்டும் அதை இரவில் முகத்தில் பூசிக்கொள்வார். மொத்தத்தில் அழகின் உபாசகர், சாப்பாட்டுப்பிரியர். அதனால் தான் அந்த மாபெரும் ருசி எழுத்திலும் படிந்து விட்டதோ!

கையெழுத்து மணிமணியாக இருக்கும். ஒரு அடித்தல் திருத்தல் இருக்காது. முதலில் எழுதுவதுடன் சரி. திருப்பி எழுதுவதோ-திருத்தி எழுதுவதோ கிடையாது.

கலைமகள் நாராயணசாமி அய்யர் நாவல் போட்டிக்கு பிறந்த மண் நாவல் அனுப்பினார். ஆனந்த விகடன் நாவல் போட்டிக்கு கோபுர தீபம் என்ற நாவலை அனுப்பினார். நாவல்களை பதிவுத்தபாலில் **With Ack Due** வுடன் அனுப்புவார். எவ்வளவு முன் ஜாக்கிரதை உணர்வு: அப்படி எச்சரிக்கை இருந்த காரனத்தால் தான் கல்கிக்கு அனுப்பிய பாண்டிமாதேவி பிழைத்தது. அந்தக் கதை அனுப்பி முடிவு தெரியாத நிலையில் கடிதம் எழுதி விசாரித்த போது அப்படி ஒரு நாவல் தங்களுக்கு வரவே இல்லை என பதில் வந்தது. இவர் பதிவு தபாலில் அனுப்பி Ack வந்திருந்தது.

எனவே கல்கிக்கு இத்தனாம் தேதி அனுப்பி இவர் பற்றிருக்கிறார் என்று பதில் எழுதாமல் தபால் இலாகாவுக்கு புகார் செய்து விட்டார். தபால் இலாகா அவர்களிடம் சென்று இன்று டெலிவரி செய்து இருக்கிறோம். இவர் கையெழுத்திட்டு வாங்கி இருக்கிறார் என்பதை உறுதி செய்தபின். அந்த நாவல் கண்டெடுக்கப்பட்டு பிரசுரமானது. அவ்வளவு எச்சரிக்கையாக இருந்தும் தினமணி கதிருக்கு அனுப்பிய குருவி மலை கோட்டை

என்ற சரித்திர நாவல் தினமணி சித்தூருக்கு மாற்றியதில் வெளிவராமல் தொலைந்து போய்விட்டது. அந்த கதையை படித்த ஒரே வாசகன் நான் தான். இன்னும் அந்தக்கதை என் நினைவில் உள்ளது. சரித்திர ஆதாரமில்லாத சரித்திரக் காலக் கதை. இரண்டு அரச குமார்கள் சிறுவயதிலேயே சதிகாரர்களின் சதியால் பிரிந்துவிடுவார்கள். பின்னர் வயதுவந்த நிலையில் சந்திப்பார்கள். நாட்டையும் மீட்பார்கள். நாவல் தொலைந்து போன வருத்தம் இருந்திருக்கும். ஆனால் மற்றக் கதைகளின் பிரகரத்தில் அந்தக் கவலையை மறந்திருக்கலாம். அப்போது அதற்கு வேறு பிரதியும் எழுதி வைத்துக் கொள்ள வசதி இல்லை. நான் அவரிடம் சென்ற பிறகு எல்லாக்கதையையும் பிரதிஎடுத்துக் கொண்டுதான் பத்திரிகைக்கு அனுப்புவோம். மணி பல்லவம் நூல் காபி செய்த பிரதியை பல நாள் வைத்திருந்தோம். நூல் அச்சில் வந்த பின்பு தான் அதை எடைக்குப் போட்டோம்.

மதுரையில் அவருக்குப் பழக்கமான ஒரு பிரசில் தான் அவர் கதைகள் வெளிவந்த இதழ்களை – முழு இதழ்களையுமே பைண்ட் செய்து வைத்துக் கொள்வார். அப்படி அவர் வீட்டில் காவேரி பைண்டிங், உமா பைண்டிங், கலாவல்லி, பம்பாயிலிருந்து வெளிவந்த விந்தியா பைண்டிங் என நிறைய பைண்டிங்குகள் இருந்தன. பின்னர் அவைகளை நூலாக வெளியிடும் போது அந்த பைண்டிங்குகளை பிரித்து அவர்கதைப் பகுதியை மட்டும் எடுத்துக் கொன்டோம்.

அவர் தினமும் டைரி எழுதும் பழக்க முடையவர். அவருக்கு அப்போது டைரி இலவசமாக கிடைக்காது. அதனால் ஹோ அன்ட்-கோ டைரியை விலைக்கு வாங்கிவிடுவார். அப்படி அவரிடத்தில் பல வருட டைரிகளைப் பார்த்துள்ளேன். அவைகள் பாதுக்காக்க பட்டிருந்தால் நாபாவின் டைரிக்கென்றே ஒரு நூல் வெளியிட்டிருக்கலாம். சொற்பொழிவுக்கு அழைப்புக் கடிதம் வந்து அந்த நிகழ்ச்சி உறுதியானால். அந்த தேதியில் மாயவரத்தில் சொற்பொழிவு என்று குறித்து வைத்துக் கொள்வார். சொற்பொழிவுக்கு பெரும் பாலும் ஏற்பாட்டாளர்களே தலைப்புக் கொடுத்து விடுவார்கள். சில இடங்களில் அவரையே தலைப்பைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள சொல்லிவிடுவார்கள். அப்போது பெரும்பாலும் அவைகள் – பாரதியைப் பற்றியதாகவே இருக்கும்.

கதைக் கரு என்றே ஒரு நோட்டில் எழுதி வைத்திருந்தார். நூற்றுக்கணக்கான கதைக் கருக்கள் அந்த நோட்டில் எழுதி வைத்திருக்கிறார். அதில் ஒரு கதையை எழுதிவிட்டால் அதில் ✓ போட்டு விடுவார். அதாவது அந்தக்கரு எழுதப்பட்டு விட்டது என்று அர்த்தம்.

அதே போல் முகவரி நோட்டு ஒன்றும் வைத்திருப்பார். அதில் அவர் தொடர்புடைய எல்லா எழுத்தாளர்கள் முகவரிகளும் – அகர வரிசைப் படி எழுதிவைத்திருப்பார். அந்த நோட்டே 120 நோட் புத்தக அளவில் இருந்தது. கடிதங்களை பைல் விலைக்கு வாங்கி அழகாக பைல் செய்து வைப்பார். கடிதம் வந்த தேதி Received Date என்று தேதியும் மறுமொழி எழுதி விட்டால் Replied என்றும் எழுதிவிடுவார். நட்பு வட்டாரத்தைக் கூட அலுவலக ஒழுங்குடன் நடத்தி வந்தார். அதனால் தான் தீபம் ஆரம்பிக்க நினைத்த போது அவர் டைரியில் இருந்த 1500 முகவரிகளுக்கு சந்தா கேட்டுக் கடிதம் எழுதி – ஆயிரம் சந்தா வந்தது என்பது நிஜம்.

நா.பா. கதை எழுதுவதுடன் நன்கு படமும் வரைவார். அவருடைய சரித்திரக்கதைகளுக்கு கதாபாத்திரங்களின் தலையலங் கார அணிமணிகள் கிரீடம் எப்படி இருக்க வேண்டும் என்று ஓவியர்களுக்கு –வரைந்து காட்டுவார்.

தமிழாசிரியராக இருந்த போது பாடம் நடத்தும் போது அந்தப்பாடக் காட்சியையே ஓவியமாக வரைந்து காட்டுவார். கம்பராமாயணத்தில் தண்டலை மயில்கள் ஆட என்ற பாடலை விளக்க தாமரை மயில் – மேகத்தை வரைந்து காட்டியது இன்னும் நன்கு நினைவில் இருக்கிறது. அதனால் தான் அவரால் கதைகளை சொல்லில் ஒரு சித்திரமாக வழங்க முடிந்ததோ?

வந்திராயிருப்பில் ஒரு மாணவருக்கு – வித்வான் அல்லது பண்டிட் படித்து வந்தார் என்று நினைவு. அவருக்கு, பாடம் கற்றுக் கொடுப்பதற்கு டியூஷன் பீஸ் வாங்க மறுத்து விட்டார். ஆனால் அவரோ இலவசமாகக் கற்றுக் கொள்ள விரும்பவில்லை. நாபா வின் தாயாரிடம் உங்களுக்கு என்ன தேவை என்று கேட்க அவரோ ஒரு கரிமூட்டை இருந்தால் சமைக்க உதவும் என்று கூற, மாதா மாதம் படித்து வந்த காலங்களில் ஒரு கரிமூட்டையை அனுப்பியது இன்னும் நினைவில் பசுமையாக உள்ளது.

–இது நா.பா.வின் கதையின் ஒரு பகுதி முழுப்பகுதி நூலாக வெளிவரும் போது படித்துக் கொள்ளுங்கள்.

# வாழ வைத்த தீப ஒளி

**கௌதம நீலாம்பரன்**

ஒரு பத்திரிகையாளனாகவோ, எழுத்தாளனாகவோ நான் ஆவேன் என்று சிறிதும் எண்ணியதில்லை.

'தீபம்' தந்த வெளிச்சம்தான் என் வாழ்வில் இந்த மாய மாற்றத்தை நிகழ்த்தியது.

அதுவும் இருண்டு கிடந்த கவலைக் கடலில் நான் தத்தளித்துக் கிடந்த போது, கலங்கரை விளக்கத்தின் நம்பிக்கை ஒளியாய், தீப வெளிச்சம் என் மீது பட்டு, என்னைக் கரை சேர்த்தது.

1967, 68 களில் நான் சென்னை நகரின் தெருக்களில், குறிக்கோளின்றி சுற்றிக் கொண்டிருந்தேன். சென்னைக்கு வந்தது சினிமா ஆசையால்தான். அதற்கு வழி ஒன்றும் புலப்படாது போனதால், அந்த ஆசை நிராசையான்து. ஊருக்குத் திரும்பவோ மனமில்லை. வீதிகளில் தஞ்சமடைந்தேன். என் வாழ்வு தறிகெட்டு, சிதைந்து, சின்னா பின்னமாகியிருக்கும். அதிர்ஷ்ட வசமாகச் சில நண்பர்கள் கிடைத்தனர்.

நண்பர்கள் சிலர் ஓய்வு நேரங்களில் கதைப் புத்தகங்கள் படிக்கும் பழக்கம் கொண்டிருந்தனர். நானும் அவற்றை இரவல் வாங்கிப் படிப்பேன்.

மண்ணடி பவழக்காரத் தெருவில் உள்ள கிருஷ்ணன் கோவிலருகில் இருந்தது நண்பர்கள் தங்கியிருந்த அறை. சில போதுகளில் நான் அங்கு சென்று தங்குவதுண்டு. அதன் அருகில் ஒரு பெரியவர் வாடகை நூலகம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு ரூபாய் கொடுத்து மெம்பர்ஷிப் கார்டு வாங்கினேன். ஒரு புத்தகம் படிக்க நாலணா தர வேண்டும். நிரந்தர வேலையற்ற அந்த நாட்களில், நாலணா சம்பாதிக்கப் படாதபாடு பட வேண்டும். ராஜா அண்ணாமலை மன்றத்தின் பின்னால் உள்ள வெளியூர் பஸ் நிலையத்தில் மங்களா கேப் என்று ஒரு உணவு விடுதி உண்டு. அதில் ஒரு மணி நேரம் சப்ளையர் வேலை பார்த்தால் நாலணா சம்பளம். எப்போதுமே அங்கு கூட்டம் நிரம்பி வழியும். காலையில் இரண்டு மணி நேரம் அங்கு சென்று

பணிபுரிவேன். டிபனும் சாப்பிடலாம். எட்டணா காசை வாங்கிக் கொண்டு வெளியே வந்து விடலாம். அங்குநிரந்தரப் பணியாளர்களை விட, இப்படி பகுதி நேரம் வந்து செல்பவர்களுக்கே வாய்ப்பு அதிகம்.

கையில் காசு கிடைத்தவுடன் நேரே மண்ணடி சென்று, நா.பா. நூல் ஒன்றை எடுத்துக் கொண்டு லோன்ஸ்குயர் பார்க்கில் வந்து உட்கார்ந்து விடுவேன். ஒரே மூச்சில் கதை முழுக்கப் படித்து விட்டுதான் வேறு வேலைப் பார்ப்பேன்.

'கல்கி'யில் நா.பா. வின் கதைகள் வெளிவந்த போது, சில அற்புதமான வர்ணனைகளைப் பொன் மொழிகள் மாதிரி கட்டம் கட்டி, கதை நடுவே வெளியிட்டிருப்பர். அவற்றை நான் மிகவும் ரசித்து, கையில் கிடைக்கிற தாள்களில் எழுதி வைப்பேன். நண்பர்கள் வட்டத்தில் சில மலையாளிகள் இருந்தனர். அவர்கள் நல்ல படிப்பாளிகள். கையில் எப்போதும் மலையாளப் புத்தகங்கள் அல்லது ஆங்கில நூல்கள் மட்டுமே வைத்திருப்பர். பல நூல்களை, எழுத்தாளர்களைப் பற்றி மிகவும் சிலாகித்த படி இருப்பர். தமிழ்க் கதைகள் படிக்கிற ஆசாமிகளை அவர்கள் சற்று இளப்பமாகவே பார்ப்பது வழக்கம். நான் அவர்களிடம் நா.பா.வின் கதை நடுவே இடம்பெற்ற பொன்மொழி போன்ற வாசகங்களைக் குறித்து வைத்திருப்பதை மேற்கோள் காட்டிப் பேசுவேன். அதைக் கேட்டு அவர்கள் வியந்து போனதுண்டு.

நா.பா. 'தீபம்' இதழை நடத்தும் விவரம் அப்போது எனக்குத் தெரியாது. நா.பா.தான் மணிவண்ணன் என்கிற பெயரில் எழுதுபவர் என்பதும் தெரியாது. சோமு என்கிற ஒரு நண்பன் 'தீபம்' இதழைக் கொண்டு வந்து காட்டினான். உடனே அதில் கண்ட 6, நல்ல தம்பி செட்டித் தெரு என்கிற முகவரிக்கு ஒரு தபால் எழுதினேன். உடனே நா.பா. ஒரு தபால் கார்டில், மணி மணியான எழுத்துகளில், முத்துச் சரம் கோர்த்தாற்போல் பதில் எழுதியிருந்தார். வந்து சந்திக்குமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

உடனே அதை எடுத்துக் கொண்டு நடந்தே மவுண்ட் ரோடு வந்து, அந்த முகவரியைத் தேடினேன். ரொம்பவே அலைந்து திரிந்த பின்னர் தான் கண்டுபிடிக்க முடிந்தது. இத்தனைக்கும்

மவுண்ட் ரோடிலிருந்து திருவல்லிக்கேணி செல்லும் வாலாஜா சாலை அருகிலேயே உள்ள சிறிய சந்து தான் நல்லதம்பி செட்டித் தெரு.

நா.பா. அலுவலகத்திற்கு இன்னும் வந்திருக்கவில்லை. ஒரு பெரியவர் இருந்தார். அவர் நா.பா.வின் சிறிய மாமனாரா் என்பதைப் பிறகு அறிந்து கொண்டேன். ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அவர், ராயபுரம் பகுதியிலிருந்து வருவார். கணக்கு எழுதுவது, நா.பா.வுக்காகவும் 'தீபம்' இதழுக்காகவுமான ஆங்கிலக் கடிதங்களை 'டிக்டேட்' செய்து மேனேஜர் டைப் செய்ததும் சரிபார்ப்பது போன்ற பணிகளை இவர் செய்வார். நாராயண அய்யங்கார் என்று பெயர். அவரிடமும் தீபம் மேனேஜர் எஸ்.திருமலையிடமும் நான் வந்த விவரம் கூறினேன். சிறிது நேரம் கழித்து வரச் சொன்னார்கள்.

அவ்வாறே சிறிது நேரம் கழித்து மறுபடியும் அங்கு சென்றேன். நா.பா. இருந்தார். அவருடைய அறையில் ஒரு பெரியவர் இருந்தார். நா.பா. அந்தப் பெரியவரை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர் – வல்லிக்கண்ணன்!

அன்று எனக்கு நா.பா. முதல் தரிசனமும. வல்லிக்கண்ணன் தரிசனமும் கிடைத்தது.

நான் நா.பா.வின் நாவல்களை ரசித்த விவரங்களை மூச்சுவிடாமல் விவரித்துக் கொண்டிருந்தேன். அவர் என்னையே அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அது ஒரு நயன தீட்சை போலிருந்தது.

நீங்கள் நா.பா.வின் 'மணிபல்லவம்' நாவலைப் படித்திருக்க வேண்டும். அதில் வரும் மகான் – நாங்கூர் அடிகள் பாத்திரம் என் மனத்தில் ஆழப் பதிந்திருந்தது. அந்த நாங்கூர் அடிகளாகவே நான் அப்போது நா.பா.வைப் பார்த்தேன்.

அவர் என்ன வேலை பார்க்கிறாய்...? என்று கேட்டார்.

பதினாறு அல்லது பதினேழு வயதுப் பையன் நான். பசி, பட்டினியால் காய்ந்து போய்க் கிடந்தேன். அலைந்து திரிந்து களைத்துப் போயிருந்தேன். பார்த்த மாத்திரத்தில் என் மீது இரக்கம் சுரந்திருக்க வேண்டும் அந்தப் பெருந்தகைக்கு. சொல்லிக் கொள்ளும் படியான ஒரு வேலையுமில்லை நான் பார்த்தது.

நா.பா.வின் கேள்விக்கு ஏதோ பதில் சொன்னேன். அவர், 'நீ இங்கு வந்து 'தீபம்' அச்சகத்தில் வேலை செய்கிறாயா?' என்று கேட்டார்.

உடனே சம்மதித்தேன்.

நா.பா. திருமலையை அழைத்து, என்னை வேலைக்கு சேர்த்துக் கொள்ளச் சொன்னார்.

'தீபம்' ஆபிஸில் அதிக ஊழியர்கள் யாருமில்லை. நா.பா.வின் அத்தை மகனான எஸ். திருமலைதான் அங்கு நிர்வாகி. அவர் தான் சகலமும், பேப்பர், அச்சுமை வாங்குவதில் துவங்கி, 'தீபம்' இதழை முழுவதும் உருவாக்கி முடிப்பது வரை எல்லாமே திருமலைதான் கவனித்துக் கொண்டார். அச்சுக் கோர்க்கும் இடம் அங்கேயே இருந்தது. ராஜ துரை என்கிற அன்பர் ஆலந்தூரிலிருந்து வருவார். பெரும்பாலும் அச்சுக் கோர்க்கும் வேலைகள் முழுவதும் அவரே தான் செய்வார். சில சமயங்களில் ஒத்தாசைக்கு ஒரு பையனோ, அல்லது ஒரு பெண்ணோ இருப்பதுண்டு. ஆனால், அடிக்கடி அவர்கள் காணாமல் போய்விடுவர். ராஜதுரை மட்டுமே அந்த அறையில், கருமமே கண்ணாக நின்று பணிபுரிவார்.

'தீபம் அச்சகம் நாலுதெரு தள்ளி, ஒரு தனிக்கட்டிடத்தில் இருந்தது. அங்கு மோகன் என்று ஒரு மிஷின் மேன் இருந்தார். பாரங்கள் அச்சடிக்கும் டபுள்கிரவுன் சிலிண்டர் மிஷின் ஒன்றும், அட்டைப்படம் அச்சடிக்கும் டிரெடில் மிஷின் ஒன்றும் இருந்தன. மோகனுக்கு உதவியாக இரண்டொரு பையன்கள் மாறி மாறி இருந்து, வேலையை விட்டுப் போய் விட்டனர். அவருக்கு உதவியாக மேனேஜர் திருமலையே அடிக்கடி சென்று, தீபத்தின் பக்கங்கள் அச்சாகும் மிஷின் பின்னால் ஏறி அமர்ந்து, அச்சாகி வரும் தாள்களைச் சிதறாமல் அடுக்கும் வேலையைச் செய்வார். நான் போய்ச் சேர்ந்ததும் பெரும்பாலும் இந்த வேலையை நானே செய்தேன். இதன் விளைவாக நான் அந்த மிஷினை இயக்கும் வித்தையும் கற்றேன். பல சமயங்களில் மோகன் இந்த மிஷினைத் தயார் செய்து, என்னை இயக்கச் சொல்லிவிட்டு, தெருவில் போய் நின்று சிகரெட் பிடித்தபடி யாருடனாவது பேசிக் கொண்டிருப்பார்.

டிரெடில் மிஷினில் தீபம் அட்டைப் படங்கள் ஒவ்வொரு கலராக அச்சாகும். கட் கலர் மெத்தேடில் தான் அட்டைகள்

உருவாயின. அந்த மிஷினையும் மோகன் தயார் செய்த பிறகு நானே இயக்கப் பழகினேன். அச்சகத்தில் வேலையில்லாத நேரத்தில் நான் தீபம் அலுவலகம் வந்துவிடுவேன். தினமும் மூன்று முறைமவுண்ட் ரோடு போஸ்ட் ஆபிஸ் சென்று, தனி போஸ்ட் பாக்ஸிலிருந்து தபால்களை எடுத்து வர வேண்டும். டவுனுக்குச் சென்று திருமலை சொல்கிற கடைகளிலிருந்து பேப்பர், அச்சுமை வாங்கி வர வேண்டும். சில போதுகளில் திருவல்லிக் கேணியில் உள்ள கடைகளிலேயே வாங்கிவிடுவோம். நிறைய விளம்பர நிறுவனங்களுக்குச் சென்று, தீபம் டேரீ ப் கொடுத்து, விளம்பரம் சேகரித்து வர வேண்டும்.

தீபம் உருவாக அதிகம் உழைப்பவர்கள் என்று, திருமலை, நான், ராஜதுரை, மோகன் ஆகிய நால்வரையும் தான் சொல்ல வேண்டும். ஒரு குடும்பம் போல் நாங்கள் பாசத்தோடு பழகினோம். திருமலை நா.பா.வின் உறவினர். மற்ற மூவரும் நா.பா.வின் தீவிர ரசிகர்கள். இது போகப் போகத்தான் எனக்கு புரிந்தது. ராஜதுரை வெறும் கம்பாஸிடர் மட்டுமல்ல. நல்ல இலக்கிய ரசிகர். ஜெயகாந்தன் மீதும் நா.பா.மீதும் அவர் கொண்டிருந்த பற்று அசாதாரணமானது.

எனக்கு முன்னால் 'தீபத்தில்' எஸ்.சம்பத் என்பவர் வேலை பார்த்தார். இவர் மீது ராஜதுரைக்கு அதீத பாசம் உண்டு. 'வாழ்வில் மிகப்பெரிய அளவு முன்னுக்கு வர வேண்டியவன். என்ன துரதிர்ஷ்டமோ அவன் அப்படி வரவில்லை' என அடிக்கடி ஆதங்கப்படுவார். இந்த சம்பத் ஷோபாலலித் என்கிற பெயரில் நிறைய சிறுகதைகள் எழுதியிருக்கிறார். இவர் அப்போது 'அலை ஓசை' நாளிதழில் புரூப்ரீடராகப் பணிப்புரிந்தார். அடிக்கடி 'தீபம்' அலுவலகம் வந்து செல்வார்.

தீபத்தில் ஆரம்பத்தில் நான் பெற்ற சம்பளம் ஒரு நாளைக்கு இரண்டு ரூபாய் தான். இதில் பெரிய ஓட்டல்களில் போய் சாப்பிட முடியாது. டீக்கடையில் குறைந்த விலைச் சாப்பாடு கிடைக்கும். இதைத்தான் சாப்பிடுவேன். நான் சைவ சாப்பாட்டுக்காரன். ஆனால், அதை அசைவ சாப்பாடுக் கடையில் சாப்பிடுகிற மாதிரி சூழ்நிலை. ஒரு முறை தீபம் அச்சகத்துக்கு வந்த நா.பா., பக்கத்து டீக்கடையில் நான் சாப்பிடுவதை அறிந்து, அங்கேயே திடுமென்று வந்து

நின்றுவிட்டார். பிறகு, என்னப்பா இதெல்லாம்... நல்ல ஓட்டலில் சாப்பிடக் கூடாதா? என்று கேட்டார். நான் என் நிலையை விளக்கினேன். உடனே நா.பா.என்னை, 'இனிமேல் நீ என் வீட்டிலேயே வந்து தங்கிவிடு' என்று கூறிவிட்டார்.

மாம்பலம் சி.ஐ.டி நகரிலிருந்த நா.பா.வீட்டுக்கு நான் அடிக்கடி செல்வதுண்டு தான். கதைகள் எழுதி வைத்திருப்பார். தொடர்கதை அத்தியாயங்களை நான் அவருடைய வீட்டுக்குச் சென்று வாங்கிப் போய், விகடன், கல்கி போன்ற இதழ் அலுவலகங்களில் கொடுத்து வருவேன்.

என்ன காரணத்தாலோ நான் நா.பா.வீட்டில் தங்க முடியாமல் போய்விட்டது. இருந்தாலும் நா.பா.வின் குழந்தைகளை நான் அடிக்கடி, கண்ணதாசன் வீட்டுக்கு எதிரே இருக்கும் பூங்காவுக்கு தூக்கிச் செல்வேன்.

நா.பா. குழந்தைகளை அழைத்துக் கொண்டு சில மாலை வேளைகளில் பீச்சுக்கு வருவார். நானும் உடன் செல்வேன். யாராவது இலக்கியப் பிரமுகர்கள் சந்தித்து விட்டால் நா.பா.வோடு மணிக்கணக்கில் பேச ஆரம்பித்து விடுவார்கள். நான் குழந்தைகளை அலையோரம் அழைத்துச் சென்று விளையாட்டு காட்டி, அழைத்து வருவேன். பிறகு அவர்களை நா.பா.வுடன் பஸ் ஏற்றி அனுப்பிவிட்டு, தீபம் அலுவலகத்துக்கு வந்துவிடுவேன். குளியல், படுக்கை எல்லாம் அங்கேயே தான் ஒரேயொரு டிரங்குப் பெட்டி தவிர என்னிடம் வேறு பொருள்கள் ஏதுமில்லை. மாற்று உடுப்பு ஒரு செட் இருக்கும். இரவில் திருமலை 'தீபம்' அலுவலகத்தையும் பூட்டிச் சென்ற பின், அந்த அறையின் வாசலிலேயே படுத்திருப்பேன்.

அது பெரிய கட்டிடம். நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், மெட்ரோ பாலிடன் பிரஸ், மவுண்ட் பார்மஸின் ஸ்டாக் ரூம், கோவாப் டெக்ஸின் குடோன், 'சம்யுக்த கர்நாடகா' எனும் கன்னடப் பத்திரிகையின் சென்னை அலுவலகம் என பல்வேறு நிறுவனங்கள் அதில் செயல்பட்டன. மொட்டை மாடியில், பத்திரிகைகளுக்குத் தேவையான படங்களை 'பிளாக்' செய்து தரும் மேரிபிராஸஸ் ஒன்றும் இருந்தது. இதை நடத்தும் அந்தோணி, இரவில் வெகுநேரம் இருப்பார். இதனால் தனிமையோ, பயமோ இல்லாமல் அங்கு படுத்துக் கிடப்பேன். அந்தோணி கிளம்பி விட்டாலும் மெட்ரோ பாலிடன் பிரஸ்ஸில்

வேலைபார்க்கும் சீனுவாசன், வாட்ச்மேன் போல அந்தக் கட்டிட வாசலில் படுத்திருப்பார். பிறகு இது நா.பா.வுக்குத் தெரிந்தது, அலுவலக சாவியையே என்னிடம் தந்து, உள்ளே படுக்கச் சொல்லிவிட்டார்.

'தீபம்' மேனேஜர் திருமலையும் பெரும்பாலும் அலுவலகத்திலேயே தங்க ஆரம்பித்தார். பிரஸ்சில் வெளி வேலைகள் வாங்கி, பாரங்களை மட்டும் அச்சிட்டோம். இதனால் பிரஸ்பிம் இரவில் இயங்கத்துவங்கியது எனக்கு வசதியாகப் போயிற்று.

தீபம் காரியாலயம் கிட்டத்தட்ட ஒரு சத்திரம் போல (இலக்கிய சத்திரம்) இருந்தது எனலாம். மலேசியா, இலங்கை போன்ற இடங்களிலிருந்து தமிழ் எழுத்தாளர்கள், கவிஞர்கள் தமிழகம் வந்தால், சென்னையில், தீபம் அலுவலகத்திற்கு உரிமையுடன் வந்து தங்குவர். இதே போல், பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலிருந்தும் பல எழுத்தாள அன்பர்கள் வந்து தங்குவர். சிலர் வாரக் கணக்கில் தங்கி, தங்கள் கதைத் தொகுதிகளை அல்லது கவிதைத் தொகுதிகளை அச்சிட்டு, நூல் வடிவிலாக்கி எடுத்துச் செல்வர். சில தமிழ்ச் சங்க மலர்களும் இப்படி இங்கு அச்சாகும். பம்பாய் தமிழ்ச் சங்கத்திற்காக 'ஏடு' என்றொரு இலக்கிய இதழ் 'தீபம்' காரியலயத்தில் தயாரிக்கப் பட்டு, மாதம் தோறும் அனுப்பப்படும். திருமலையும் நானும் இதன் பொறுப்புகளைக் கவனிப்போம். நானும் 'ஏடு' இதழில் கதை, கவிதை எழுதியிருக்கிறேன்.

'தீபம்' அலுவலகத்தில் நான் சற்றேறக் குறைய பத்தாண்டுக் காலம் பணிபுரிந்தேன். ஆயினும் என் கதை ஒன்று கூட 'தீபம்' இதழில் இடம்பெற்றதில்லை. ஆரம்பத்தில் ஒரு சிறு கதை எழுதி, நா.பா.வின் மேஜை மீது வைத்தேன். அவர் மறுநாளே என்னைக் கூப்பிட்டு, இது போல் இனிக்கதை எதுவும் எழுதி இங்கு வைக்காதே, என்று கூறிவிட்டார். முதலில் என் மனம் மிகவும் வேதனைப்பட்டது. நாளடைவில் நான் மனச் சமாதானம் அடைந்ததுடன், நா.பா. நான் எதுவுமே எழுதக் கூடாது என்று கூறிவிடவில்லை என்பதைப் புரிந்து கொண்டேன்.

என் கதைகள் தீபத்தில் இடம் பெறாவிட்டாலும், ஒவ்வொரு மாதமும் தமிழ்ப் பத்திரிகைகள் அனைத்திலும்

வெளிவருகிற சிறுகதைகள் அனைத்தையும் வாசித்து, ஒரு மதிப்பீட்டுக் கட்டுரை தீபத்தில் வெளியாகும். அப்படிச் சில மாதங்களில் நான் மதிப்பீடு செய்து எழுதிய கட்டுரைகளை நா.பா. வெளியிட்டார். இதே போல் தீபாவளி மலர்களில் வெளியான கதைகள் பற்றியும் நான் விமர்சனக் கட்டுரை எழுதியிருக்கிறேன்.

அஞ்சறைப் பெட்டி, ஆறங்கம் எனச் சில பகுதிகள் 'தீபம்' இதழில் உண்டு. இதில் 'மினி' பேட்டி மாதிரி சிலரைச் சந்தித்துப் பேசி, அவர்கள் படத்துடன் இலக்கியச் செய்திகளை வெளியிடுவதுண்டு. இப்பகுதிகளுக்காக நான் பலரைச் சந்தித்து 'பேட்டி' எடுத்து எழுதினேன். சினிமாவுக்கு தீபத்தில் இடமில்லை. ஆனால், திரைப்பிரபலங்கள் சிலரின் இலக்கிய உணர்வு பற்றிய செய்திகளை இப்பகுதிகளில் இடம் பெறச் செய்வார் நா.பா.

நா.பா.வின் எழுத்தில் மயங்கியவர்களும் உண்டு. அவருடைய தோற்றப் பொலிவில் மயங்கியவர்களும் உண்டு. கம்பீரமான தோற்றம். அவர் நடந்துச் சென்றால், 'யாரோ நடிகர் மாதிரி இருக்கே... இவர் யாராக இருக்கும்' என்று பலரும் காதுபடவே பேசுவர். இப்படிச் சிலர் என்னை அழைத்தும் விசாரித்ததுண்டு. நிமிர்ந்த நடை, யார்க்கும் அஞ்சாத தோற்றம். இத்தனைக்கும் ஒப்பனைகள் ஏதுமின்றி, எளிய கதராடை களிலேயே அவர் வலம் வருவார்.

கட்சி மேடைகளாயினும் சரி, இலக்கிய மேடைகளா யினும் சரி, அவர் தங்களோடு வீற்றிருப்பதை அனைவரும் பெருமையாகவே எண்ணினர்.

ஜெமினி அதிபர் வாசன் ஒரு முறை நா.பா.வை 'நீங்கள் என் படங்களில் நடிக்க விரும்புகிறீர்களா?' என்று கேட்டதாக ஒரு செய்தி நான் கேள்விப் பட்டதுண்டு.

நா.பா. ரஷ்யா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகளுக்கு ஒரு இலக்கியச் சுற்றுப்பயணம் சென்று திரும்பிய சமயம், அவருக்கொரு பாராட்டு விழா சென்னை, அண்ணா சாலையிலுள்ள தேவநேயப் பாவணர் நூலக அரங்கில் நடைப் பெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய நடிகர் திலகம் சிவாஜி கணேசன், 'எனக்கு நா.பா. வைப் பார்க்கும் பொழுது பொறாமை யாக இருக்கிறது. இவர் மட்டும் நடிக்க வந்திருந்தால் எனக்கு

ஒரு போட்டியாக இருந்திருப்பார். இவரளவு நான் அழகாக இருந்திருந்தால் இன்னும் எத்தனையோ வெற்றிச் சிகரங்களை எட்டியிருப்பேன். அப்பா... என்னவொரு கம்பீரம்!' என மனம் விட்டுப் பாராட்டினார்.

இன்னும் எத்தனையோ பேர், 'எம்.ஜி.ஆர். மாதிரி இருக்கிறார் நா.பா.' என்று புகழ்ந்ததைக் கேட்டிருக்கிறேன். 'தீபம்' அலுவலகத்திலும் பல எழுத்தாளர்களும் நா.பா.வின் ரசிகர்களும் வந்து அமர்ந்து நெடுநேரம் பேசிக்கொண்டிருப்பர். நா.பா. முகம் சுளிக்காமல் அத்தனை பேருடனும் இனிமையாகப் பேசுவார். அப்படி வருகிற பலரும் பெரிய பெரிய உத்தியோகம் பார்ப்பவர்களாகவும் இருக்கும். ஆனால், தீபத்தில் நா.பா. இட்ட வேலைகளை ஆர்வமுடன் செய்து கொண்டிருப்பர். தீபம் இதழ்களைக் கடையில் போடுவதை விட, சந்தாதாரர் எண்ணிக்கையே அதிகம். ஆயிரக் கணக்கான பிரதிகளுக்கு சந்தாதாரர் விலாசம் ஒட்டிய உறைகளைச் சுற்ற வேண்டும். இது போன்ற பணிகளை மிகப் பெரிய உத்தியோகம் பார்க்கும் பலர் அங்கு வந்து, ஒரு தொண்டு போலச் செய்வர்.

நா.பா. 'பவர்' என்று ஓர் இலக்கிய அமைப்பை ஆரம்பித்து நடத்தினார். மாதத்தில் ஒரு நாள் நிகழும் இந்த 'பவர்' அமைப்பின் கூட்டத்திற்கு அத்தனை எழுத்தாளர்களும் வருவர். பழைமைச் சிந்தனைகள் மாறாத முதுபெரும் தமிழறிஞர் கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜ., முற்போக்குச் சிந்தனையுள்ள பிரபல எழுத்தாளர் ஜெயகாந்தன் சா.கந்தசாமி அனல் பறக்கும் அரசியல் விமரிசனக் கட்டுரைகளை எழுதும் சின்னக் குத்தூசி, மொழி பெயர்ப்பு இலக்கிய வித்தகர்கள் என்று பலதரப்பட்ட எழுத்தாளர்களும் அங்கு ஒன்று கூடுவர். மாடியில், தரையில் ஜமக்காளம் விரித்து அமர்ந்து விவாதங்கள் நிகழும். எத்தனை மாறுபட்ட கருத்துகள் எத்தனை உரத்த குரலில் பேசப்பட்டாலும், இறுதியில் அன்பும் மரியாதையும் மாறாமல் ஒருவரோடொருவர் கைகுலுக்கி, மகிழ்வுடன் கலைந்து செல்வர்.

உலகப்பார்வை, சமூகச் சிந்தனை, படைப்புகளின் உன்னதம் என்று ஏராளமான விஷயங்களை இந்தக் கூட்டங்களில் என்னைப் போன்றவர்கள் பெறமுடிந்தது என்றால் அது மிகையில்லை. ஒரு நல்ல கதையை எங்கே படித்திருந்தாலும் அதைப்பற்றி அங்கே சிலாகித்துப் பேசுவார்கள். எழுதும்

கனவுகளோடு உள்ள ஒரு புதிய இளைஞனுக்கு இது ஒரு பயிற்சிப் பட்டறை போலவே இருந்தது எனலாம்.

உப்பிலி சீனிவாசன், அ.நா. பாலகிருஷ்ணன், சங்கரி புத்திரன், ஆவடி சீனிவாசன், பாலசுப்பிரமணியன், எம்.எஸ். தியாகராஜன், க்ண்ணன், மகேஷ் போன்ற பலர் 'தீபம்' அலுவலகத்திற்கு அடிக்கடி வருவார்கள். எல்லோருமே நல்ல உத்தியோகத்தில் இருந்தனர். எழுத்துக் கனவு சிலரிடம் இருந்தது, சிலர் நல்ல ரசனையோடு மட்டும் இருந்தனர்.

மு.மேத்தா, நா.காமராசன் போன்ற அருமையான கவிஞர்களின் ஆரம்பகாலப் புகழ்மிக்க படைப்புகள் தீபத்தில் தான் வெளியாயின. மொழி பெயர்ப்புக்கென சாகித்ய அகாடமி விருது பெற்ற குறிஞ்சி வேலனின் அற்புதமான பல படைப்புகள் தீபத்தில் இடம் பெற்றன.

தெருவில் கிடந்த என்னை எடுத்துத் தூசு தட்டி, ஒரு நல்ல மனிதனாக – எழுதும் ஆற்றலுடையவனாக ஆக்கியவர் நா.பா. 'காணும் உலகம் ' மட்டுமே அறிந்திருந்த எனக்கு 'அறியும் உலகம்' ஒன்றிருக்கிறது என உணர்த்தியவர் நா.பா. அவருடைய தொடர்பு மட்டும் ஏற்படாது போயிருந்தால், நான் சிதைந்து – சின்னா பின்னமாகியிருப்பேன்.

தீபத்தின் மாய ஒளிதான் என்னையும் ஓர் எழுத்தாளன் என்று பெயர் சொல்லி, வாழ வைத்திருக்கிறது. நா.பா.வையும் மறக்க மாட்டேன்; இராமகிருஷ்ணனுக்கு ஒரு விவேகானந்தர் அமைந்தது போல, பெறாத பிள்ளையாய் – சீடனாய் நண்பனாய் இருந்து நா.பா.வின் புகழ்பரப்ப என்றென்றும் பாடுபடுகின்ற அ.நா.பாலகிருஷ்ணனையும் என்னால் என்றும் மறக்கமுடியாது.

# மணிவண்ணனின் மாபெரும் சாதனை

லெனின் கோவிந்தராசன்

தீபம், நா.பார்த்தசாரதி அவர்கள் சிறந்த தேசபக்தர். இலக்கிய உலகின் தலைசிறந்த படைப்பாளி. ஏராளமான சிறுகதைகள், கட்டுரைகள், நாவல்கள், வரலாற்றுக் கதைகள் எழுதி, வாசகர்களிடையே பேரும்–புகழும் பெற்றவர்.

பொன்விலங்கு, துளசிமாடம், மணிபல்லவம் என்று பலவற்றைப் படைத்து உள்ளார்.

ஆயினும் 1960களில் கல்கி இதழில் 'மணிவண்ணன்' என்ற பெயரில் வாரந்தோறும் எழுதி வெளிவந்த 'குறிஞ்சிமலர்' நாவல் என்னை மட்டுமின்றி, தமிழ் கூறும் நல்லுலகத்தில் உள்ள பல்லாயிரம் கணக்கான வாசகர்களை வசீகரித்த வரித்துக் கொண்ட தலை சிறந்த நாவல் என்றால், அது மிகையாகாது.

டாக்டர் மு.வ. அவர்களின் நாவலைப் படித்த வாசகர்கள் அவரது கதாபாத்திரங்களின் பெயர்களையே தங்களுடைய பிள்ளைகளுக்கு சூட்டியது போன்று குறிஞ்சிமலர் நாவலில் நா.பா. அவர்கள் படைத்திட்ட நாயகன்– நாயகியான அரவிந்தன் – பூரணி பெயர்களை தன் பிள்ளைகளுக்கு சூட்டி மகிழ்ந்தார்கள்.

அரவிந்தன் – பூரணி ஒரு இலட்சியபூர்வமான கற்பனைக் கதை என்றாலும் நா.பா. அவர்கள் அதனை லாவகமாகக் கையாண்டு வாராவாரம் வேகமும்– விறுவிறுப்புமாகக் கொண்டு சென்றதும் இனிய தமிழ் நடையில் இலக்கியச்சான்றுகள், பாரதி, பாரதிதாசன் கவிதைகள், பொன்மொழிகள் இவற்றை எல்லாம் கையாண்டு எழுதியதும் நாவலுக்கு மகுடம் சூட்டினாற்போல் இருந்தது. வாராவாரம் வரும் அத்தியாயத்தின் தலைப்பில், ஏதாவது ஒரு கவிதை அல்லது பொன்மொழிகள் இருக்கும். அது அத்தியாயத்தில் வர இருக்கின்ற பாத்திரங்களின் குணநலன் களைப் பிரதிபலிப்பதாக இருக்கும். எடுத்துக்காட்டாக,

மண்ணில் உழைப்பாரெல்லாம் வறியராம் உரிமை கேட்டால்

புண்மீது அம்புபாய்ச்சும் புலையர் செல்வராம் இதனைதன்
கண்மீது பகலில் எல்லாம் கண் கொண்டு அந்திக்குப்பின்
விண்மீனாய்க் கொப்பளித்த விரிவானம் பாராய்தம்பி

என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தொழிலாளர் படும் துயரத்தைக் கண்டு அந்த வெம்மையால் ஏற்பட்ட கொப்பளங்கள் தான் நட்சத்திரங்கள் என்ற கவிதை வரிகளை நா.பா. அவர்கள் கையாண்டு, தொழிலாளர்களின் வேதனையை நாவலின் கதாபாத்திரங்களின் துன்ப துயரங்களோடு ஒப்பிட்டு, நயம்பட எழுதியது வியந்து பாராட்டுதற்குரியது.

குறிஞ்சிமலர் நாவல் வெளிவந்த கால கட்டத்தில், நண்பர் இரா. தியாகராசன் அவர்களை (சின்னக்குத்தூசி) ஆசிரியராகக் கொண்டு திருவாரூரிலிருந்து வெளி வந்த 'மாதவி' வார இதழில், திரு. தியாகராசன் அவர்கள் குறிஞ்சிமலர் நாவல் பற்றி எழுதிய விமர்சனத்தில் மணிக்கொடி காலத்துக்குப் பிறகு, மணி வண்ணன் அவர்கள் தன் மணிவண்ணக் கொடியை ஏற்றி வைத்துவிட்டார் என்று பாராட்டி எழுதியது மறக்க முடியாதது.

1965– 66 ல் சென்னையில் சொல்லின் செல்வர் ஈ.வெ. கி. சம்பத் அவர்களது தமிழ்ச் செய்தி நாளிதழை பொறுப்பேற்று நண்பர் தியாகராசன் அவர்கள் நடத்திய போது அந்த பத்திரிக்கை அலுவலகத்தில் நானும் பணியாற்றுகின்ற வாய்ப்பு கிடைத்தது.

மாலை நேரங்களில் நண்பர் தியாகராசன் அவர்கள் பல எழுத்தாள நண்பர்களைச் சந்திக்கச் செல்வார்.

அவர் செல்லும் போது ஒரு நாள் நானும் அவருடன் சென்றேன். குறிஞ்சி மலர் நாவலில் ஓவியர் வரைந்த கதாநாயகன் அரவிந்தனைப் போன்றே கதர்வேட்டி, கதர்ஜிப்பா அணிந்து, கம்பீரமான தோற்றத்தில், ஒரு மாடியின் சிறிய அறையில் அமர்ந்திருந்தவரிடம் நண்பர் இரா.தி. என்னை அறிமுகம் செய்தார்.

பின்னர், நீங்கள் ரசித்துப்படித்த குறிஞ்சிமலர் நாவலை எழுதிய நா.பார்த்தசாரதி அவர்கள் தான் இவர் என்றார்.

அன்று முதல் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் தீபம். அலுவலகத்துக்கு இரா.தியுடன் போய் விடுவேன்.

அரசியல் – சமுதாயம் – இலக்கியம் பற்றி நா.பா. அவர்கள் நண்பர்களுடன் பேசுவார்.

''பாதகம் செய்வோரைக் கண்டால்....

மோதி மிதித்து விடுபாப்பா'' என்ற

பாரதியின் ஆக்ரோஷமான உணர்வு சிலநேரங்களில் நா.பா. அவர்களின் பேச்சில் தொனிக்கும்.

அந்த அளவுக்கு தீமை செய்பவர்களைக் கண்டு வெறுப்புடன் பேசுவார்.

தீபம் அலுவலக மேல் மாடியில் எழுத்தாளர்கள் அகிலன், க.நா.சுப்ரமண்யம் தி.க.சிவசங்கரன், நண்பர் ஜெயகாந்தன் போன்ற பல எழுத்தாளர்களோடு நா.பா. அவர்களும் அமர்ந்து கொண்டு இலக்கிய சர்ச்சை செய்வார்கள்.

அப்போது வெளி வந்த நாவல்கள், சிறுகதைகள் இவை கள் எவ்வாறு சமூகத்தை பிரதிபலிக்கின்றன என்பது பற்றி அவரவர் கருத்தைச் சொல்லி விவாதிப்பார்கள்.

நண்பர் இரா.தி. அவர்களோடு நானும் ஒரு பார்வையாளனாக இருப்பேன்.

அவர்கள் விவாதிக்கும் போது எனக்குத் தெரியாத பல செய்திகளைக் தெரிந்து கொள்கின்ற ஆய்வுக்கூட மாகவே அமையும்.

1976ல் தீபம் நா.பார்த்தசாரதி அவர்கள் 'தேசிய சிந்தனையாளர் மன்றம்' என்ற அமைப்பை உருவாக்கி, பாரத தேசப் பண்பாடு, மொழி, கலை, நாகரீகம் ஆகியவற்றைக் காப்பாற்ற எண்ணி பல ஊர்களுக்கு பயணம் செய்து அமைப்பை பலப்படுத்துகிறார்.

அந்தப் பயணத்தில் திருவாரூருக்கும் வந்தார்.

திருவாரூரில் அ.மீ. இராமமூர்த்தி என்ற நண்பர்தான் தேசிய சிந்தனையாளர் மன்ற கிளையை ஏற்படுத்தினார்.

அதன் தொடக்க விழாவிற்கு நா.பா. அவர்கள் காலையி லேயே வந்துவிட்டார்.

திருவாரூர் லெனின் புத்தக நிலையத்துக்கு வந்து நீண்ட நேரம் பேசிக் கொண்டு இருந்தார். புத்தக நிலையத்தில் நா.பா. அவர்களது நாவல்கள் தீபம் மாத இதழ் ஆகியவை விற்பனை செய்வதைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தார்.

பின்னர், தேசிய சிந்தனையாளர் மன்ற துவக்க விழா நடைபெற்றது.

நா.பா. அவர்கள் சிறப்புரையாற்றும் போது இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இளைஞர்களுக்கு தேசத்தைப் பற்றிய சிந்தனையும், தேசத்தை காப்பாற்றுவதற்கான வழி வகைளில் எவ்வாறு ஈடுபாடு கொண்டு பாடுபட வேண்டும் என்ற கருத்தினை மையமாக வைத்து சிறந்தொரு சொற் பொழிவு ஆற்றினார்.

எழுத்து, பேச்சு என்று நாட்டுக்காகவும், தமிழுக்காவும் தொண்டாற்றிய நா.பா. அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. அவர்கள் இன்று நம்மிடையே இல்லை என்றாலும், அவர் எழுதிய புத்தகங்களும் அவரது தமிழ்த் தொண்டும் என்றும் நம் நெஞ்சை விட்டு நீங்காது நிலைத்து நிற்கும்.

வாழ்க ! நா.பா.வின் புகழ்.

# நண்பர் நா.பா.வின் நினைவில்

எஸ். இராமசுப்ரமணியம்.. சீனியர் அட்வகேட், சென்னை.

திரு. நா.பா அவர்களை முதலில் நான் சந்தித்தது 1957 என்று ஞாபகம். மதுரையில் வக்கீல் தொழில் அப்பொழுது தான் ஆரம்பித்தேன். பொதுவான நண்பர் திரு.கே.பி. நாராயணன் வழியாக ஏற்பட்ட பழக்கம் வலுவான நட்பாக வளர்ந்தது. அடிக்கடி சந்தித்து உரையாடியும், வெளியூர்கள் சென்று மகிழ்ந்தும் பழகினோம்.

தொழிலில் வளர்ச்சி காரணமாக நான் 1958ல் சென்னை வந்தடைய நேர்ந்தது. திரு.நா.பா.அவர்களும் ''கல்கி'' பத்திரிகையுடன் மேற்கண்ட தொடர்பு காரணமாக சென்னைக்கு வந்து சேர முடிந்தது. இவ்வாறு நடுவில் விட்டுப்போன தொடர்பு மீண்டும் 1960லிருந்தே வளரலாயிற்று. அதிலிருந்து கிட்டத்தட்ட ஒரு கால் நூற்றாண்டுக்கு எங்களுடைய நட்பு உறவு நீடித்தது.

நா.பா.வின் பழகும் முறை யாரும் விலகிச் செல்ல முடியாதபடி இருக்கும். ''கல்கி'' பத்திரிகையில் முதலில் வெளியிலிருந்து எழுதிக் கொண்டிருந்தார். பிறகு, துணை ஆசிரியராகப் பணியாற்றினார். கடும் உழைப்பு என்றால் நா.பா.வைத் தான் குறிக்கும். பலதுறைகளிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு பெருமை சேர்த்துக் கொண்டார். புதிதாக வந்திருந்த ஒளிபரப்பு (டிவி) துறையிலும் ஏற்கனவே இருந்து வந்த ஒலிபரப்பு (ரேடியோ) துறையிலும் பத்திரிகைத்துறையிலும் தன் எழுத்துவன்மையையும் திறமையையும் வெளிப் படுத்திக் கொண்டே இருந்தார். அதே காலகட்டத்தில் சென்னைக்கு புதியவனாக வந்த எனது தொழிலும் முன்னேற்றம் காட்டியது. நேரம் கிடைக்கும் போது எல்லாம் சந்தித்து பேசி மகிழ்வோம். வெளியூர் செல்வதிலும், மதுரை கொடைக்கானல் போன்ற இடங்களுக்கு சென்றும் பொழுது போக்குவோம்.

தான் எழுதுவது அது எந்தத் துறையைப் பற்றி இருந்தாலும் சரியானதாக இருக்க வேண்டும் என்ற நா.பா.வுடைய உறுதி மிக குறிப்பிடவேண்டிய விஷயம். சட்டம், சங்கீதம், மருத்துவத் துறை போன்ற எதிலும் தான் எழுதுவது சரியானதா என்று

கேட்டுத் தெளிவுப்படுத்திக் கொள்வதற்கு அவர் தயங்கியது இல்லை. இது அவருடைய "Professional integrity" க்கு ஒரு சான்று என்று எண்ணுகிறேன்.

''கல்கி'' நிறுவனத்தை விட்டு விலகிய நிலைமையிலும், ''தீபம்'' பத்திரிகை தொடங்கி நடத்தி வந்த காலத்திலும் எண்ணற்ற நாட்களில் நாங்கள் சந்தித்திருக்கின்றோம். அவரது தனி வாழ்க்கையில் அவர் உதவி நாடி சென்றது கிடையாது. அவரது தன்னம்பிக்கை (Self Confidence) அளவற்றது.

வேறு எழுத்தாளர்களைப் போல இல்லாமல் அவர் முதலில் இருந்தே, முறைப்படுத்திய விதத்தில் நடந்து கொண்டார். (Systematic) தனக்கு வருகிற ஒவ்வொரு கடிதத்தையும் சீராக பார்த்து பதில் அளிப்பதுடன், அதை எழுதியவரது விவரங்களை குறித்து வைத்துக் கொள்வார். காலப்போக்கில் நா.பா. வாசகர் வட்டம் என்பது அவரது விரல் நுனிகளில் இருந்தது. ''தீபம்'' பத்திரிகை ஆரம்பிக்க இருந்த நேரத்தில் எத்தனை வாசகர்கள் கண்டிப்பாக ஆதரிப்பார்கள் என்று அவருக்கு நிதர்சனமாக இருந்தது. உள்நாட்டிலும் சரி, வெளிநாட்டிலும் சரி, அவருக்கு வாசக ஆதரவாளர்கள் இருந்தனர். தங்கள் நா.பா.வுக்காக இவர்கள் எந்த உதவியும் செய்யத் தயாராகவே இருந்தார்கள்.

அவருடைய வெளிநாட்டுப் பயணங்கள் எல்லாம், ''தீபம்'' பத்திரிகை வளர்ச்சிக்காகவே ஏற்கப்பட்டன எனச் சொல்லலாம்.

''தீபம்'' பத்திரிகை அச்சிடுவதற்கு என் மனைவியின் உறவினர் திரு. நடராஜன் உதவியாக இருந்தார். அந்த அச்சகம் இருந்த கட்டிடத்திலேயே அவசர காலங்களில் நா.பா. தங்கி பத்திரிகை வெளியீட்டு விஷயங்களை கவனிப்பதற்கு என் உறவினர் தங்கி இருந்த அறை வசதியாக இருந்தது. இரவு, பகல் பார்க்காமல் நா.பா. உழைப்பதை பற்றி என்னிடம் பலமுறை என் உறவினர் கூறி இருக்கிறார்.

தொடக்க காலத்தில் மாபெரும் எழுத்தாளர்களான கு.அழகிரிசாமி, திரு.ஜானகிராமன் போன்றவர்களை சந்திக்கப் போகும் போது சில நேரங்களில் நானும் உடன் செல்வேன். ''தீபம்'' பத்திரிகை நடத்துவதை ஒரு வேள்வியாக தொடங்கி

னார் நா.பா. ஆனால் அந்த கால கட்டத்தில் அத்தகைய பெருமை மிக்க இலக்கிய ஏடு எந்த அளவுக்கு எடுபடவேண்டுமோ, அந்த அளவு இல்லாமல் போனது வருந்தத் தக்கது. அது நா.பா.வுக்கு மிகுந்த வருத்தத்தை அளித்தது. இருப்பினும் நாம் நல்ல முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற உறுதியான நம்பிக்கையிலேயே, தனது அனைத்தையும் (நேரம், பணம், உழைப்பு அத்தனையும்) ''தீபத்'' திற்கே அர்ப்பணித்தார் நா.பா.

கடுமையான சர்க்கரை வியாதி (Diabetes) இருந்தாலும் மிகக்கட்டுப்பாட்டுடனேயே இருந்தார். இருப்பினும் காலன் அவரை இளம்வயதிலேயே எடுத்துச் சென்றான். ''தீபம்'' பத்திரிகை பற்றிய தன் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமல் இருந்த ஏக்கமே நா.பா.வை நலியச் செய்தது என்று தான் எண்ணுகிறேன். இன்று திரும்பிப் பார்த்தாலும் நா.பாவுடைய உன்னதத் தோற்றம் கண் முன்பே நிற்கிறது.

நண்பர் பாலகிருஷ்ணன் வெளிப்படுத்தி இருக்கும் ''தீபம்யுகம்'' படிக்கும்போது பெருமையும், வருத்தமும் கலந்தே வருகிறது. இத்தனை மாண்புமிக்க பெருமை மிக்க படைப்பாளியுடன் இத்துணை காலம் நண்பராக இருந்து முடிந்த அளவு உதவி செய்தோம் என்ற பெருமை.நா.பாவுடைய ஆயுட்காலத்திலும், இப்பொழுதும், தமிழுக்கு அவர் செய்த சேவையை இந்த தமிழகம் உரிய அளவிற்கு நினைத்துக் கூட பார்க்கவில்லையே, என்ற வருத்தமும் மிகவாகிறது.

நஷ்டம் தமிழுக்குத்தான், நா.பா.வுக்கு அல்ல.

# உயர் பண்புகளின் உருவகம் நா.பா.

சுப.கோ. நாராயணசாமி

'குறிஞ்சி மலர்' போல ஓர் அபூர்வமான மனிதர் திரு.நா.பார்த்தசாரதி அவர்கள், அன்பின் ஊற்றாகவும், ஆற்றலின் சின்னமாகவும், பண்பாட்டின் பாதுகாவலராகவும், நண்பர்களுக்கு உற்றுழி உதவும் உத்தமராகவும் வாழ்ந்து காட்டிய மாமனிதர் அவர்.

இலக்கிய 'தீபம்' ஏந்தி தமிழ் மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு மகத்தான தொண்டு புரிந்த தூயவர். பல இளம் எழுத்தாளர்களுக்கு 'வேடந்தாங்கலாக', நிழல் தந்த வித்தகர்.

தன்மானத்துடன் சிறுமை கண்டு பொங்கி பெருமையைப் போற்றிப் பத்திரிகையுலகில் ஓர் சாதனை புரிந்த உழைப்பாளி. உண்மை, நேர்மை, ஒழுக்கம் இம்மூன்றுமே அவரை வழி நடத்திச் சென்றன.

பாரதி கூறிய 'திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு எண்ணியதை நிறைவேற்ற இறுதிவரை போராடுதல்' என்ற வரிகளுக்கு இவரே இலக்கணம்.

இளம் வயது முதல் பல எழுத்தாளர்களின் படைப்புக் களைப் படித்து வந்தாலும் நான் முதலில் நேரில் சந்தித்த எழுத்தாளர் திரு.நா.பா.அவர்கள்தான். அடுத்து திருவல்லிக் கண்ணன் 1962இல் நேரில் பார்த்த இரண்டாவது எழுத்தாளர்.

'கல்கி' மாதச் சிறுகதைப் பரிசினைக் கொடுத்த 1956 ஆம் ஆண்டு கால கட்டம்.. நா.பாவின் 'வலம்புரிச் சங்கு' என்ற சிறுகதை பரிசு பெற்றது. இக்கதையைப் பாராட்டி முதல் கடிதம் எழுதினேன். பதில் எழுதினார். தொடர்ந்து கடிதப் பரிமாற்றங் கள் நிகழ்ந்தன. அவர் படைப்புக்கள் பற்றி விமர்சனம் செய்து எழுதுவேன். பதிலும் வரும் ஓராண்டு இவ்வாறு 1956 முதல் 1957 செப்டம்பர் வரை கடிதம் மூலமே தொடர்பு. இந்த ஓராண்டு காலம் நான் ஈரோட்டில் ஆசிரியப் பயிற்சி பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன்.

நான் ஆசிரியப் பயிற்சி முடித்து எனது சொந்த ஊரான நாச்சியார் பட்டியில் உள்ள பள்ளியில் பணியில் சேர்ந்தேன்.

எனது ஊரின் தென் கிழக்கே சுமார் 6கி.மீ. தூரத்தில் தான் அவர் பிறந்த ஊரான நதிக்குடி உள்ளது. அவர் எங்கள் ஊருக்கு வடமேற்கே சுமார் 25கி.மீ. தூரத்தில் இயற்கை எழில் குலுங்கும் வற்றாயிருப்பு என்ற ஊரில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

1957 செப்டம்பர் மாதம் நேரில் காண வற்றாயிருப்பு சென்றேன். தெற்குத் தெருவில் குடியிருந்தார். நான் சென்று அவரைப் பார்த்து அறிமுகம் செய்து கொண்டு பேச ஆரம்பித்தோம். அவர் லா.ச.ராவின் 'ஜனனி'யைக் கையில் வைத்திருந்தார். லா.ச.ரா. 'தபஸ்' என்ற தலைப்பில் முன்னுரை எழுதியுள்ளார். 'நண்ப' எனத் தொடங்கும் அந்தத் தொடரை வாசித்துக் காட்டி', என்ன சக்தி மிகுந்த வார்த்தைகள்' என்று பாராட்டினார். நானும் 'ஜனனியைப் பலமுறைப் படித்துச் சுவைத்தவன் என்ற வகையில் அந்நூலில் உள்ள அனைத்துச் சிறுகதைகளையும் விமர்சித்தேன். அதில் சில வாக்கியங்கள் மனதில் உறைந்ததையும்' எடுத்துக் கூறினேன். நான் இவ்வளவு ஆழமாக லா.ச.ராவைப்படித்திருப்பேன் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. "சுப.சோ.நீங்கள் ஓர் நல்ல ரசிகர் என்று கடிதங்கள் மூலம் அறிந்தேன். இன்று நேரிலும் புரிந்து கொண்டேன்' என்று மனமாறப் பாராட்டினார்.

1958 இல் வற்றாயிருப்பில்அவருக்குத் திருமணம் நடைபெற்றது. உடன் அவர் சகோதரியின் மணமும் நடந்தது. இந்தத் திருமணச் செலவிற்கு "பாண்டிமா தேவி" எழுதக் கிடைத்த சன்மானம் ஓரளவிற்கு உதவியதாகச் சொன்னார். நான் 'பேருந்து' கிடைக்காமல் திருமணத்திற்கு, ஸ்ரீவில்லி புத்தூரிலிருந்து லாரியில் சென்ற அனுபவம் என்னால் மறக்க இயலாது. மதுரை நகரிலிருந்து பல எழுத்தாளர்கள் வந்து கலந்து கொண்டார்கள்.

வற்றாயிருப்பில் பணியாற்றும் போதே சில இலக்கிய நண்பர்களுடன் சேர்ந்து 'மதுரையில் எழுத்தாளர் சங்கம் ஒன்றை ஆரம்பித்து, அச்சங்கத்தின் செயலாளராகவும் திறம்பட பணியாற்றினார் நா.பா.. மாதம் ஓர் ஞாயிற்றுக்கிழமை, மதுரையில் ஓரிடத்தில் கூட்டம் நடைபெறும். 'தேனி செல்லும் சாலையில் உள்ள அச்சம் பத்து என்ற இடத்தில் 'தென்னந் தோப்பு' மத்தியில் கூட ஓர் கூட்டம் நடைபெற்றது. வடக்கு மாசி வீதியில் அமைந்திருந்த 'கல்கி' கிளை அலுவலகக் கட்டிடத்தில் சில கூட்டங்கள் நடந்தன. இரவு 'கல்கி'

அலுவலகத்தில் படுத்து விட்டு, காலை 5 மணி முதல்பேருந்தில் இருவரும் கிளம்புவோம். அவர் கிருஷ்ணன் கோவிலில், வற்றாயிருப்பு செல்ல இறங்குவார். நான் ஸ்ரீவில்லிபுத்தூர் வந்து ஊர் வருவேன்.

1958 இல் மதுரையில் 'எழுத்தாளர்' சங்க மாநாடு மிகச்சிறப்பாக நடத்தினார். திரு.கி.வா.ஜ. அவர்கள் தலைமை தாங்கினார். எழுத்தாளர்கள் அகிலன், பகீரதன், ஏ.எஸ். ராகவன், சுகி.சுப்பிரமணியம், ஏ.ஜி.வெங்கடாச்சாரி, திருலோக சீத்தாராம், காரைக்குடி சா.கணேசன், ரகு நாதன், வ.விஜயபாஸ்கரன் ஆகிய எழுத்தாளர்கள் கலந்து கொண்டு சிறப்பு செய்தார்கள். எழுத்தாளர் மாநாட்டை யொட்டி 'மலர்' ஒன்றும் வெளியிட்டனர்.

1958 இன் இறுதியில் பள்ளியில் பணியாற்றிய 'நா.பா' வை நீக்கிவிட்டனர். இதை எதிர்த்து வற்றாயிருப்பில் கண்டன ஊர்வலமும், கூட்டமும் நடந்தது. இக்கூட்டத்தில் "வளமான வற்றாயிருப்பில், மனவளமற்ற குறுகிய எண்ணம் கொண்ட மனிதர்கள் வாழ்கின்றனர் என்று பேசினார். உண்மையில் இவரது புகழைத்தாங்க முடியாத சிறுமதி படைத்தோர் செய்த கூட்டுச் சதியின் விளைவுதான் இவரது பணி நீக்கம்' என்று கூறுவது பொருத்தமாகும்.

1959 ஆரம்பத்தில் நா.பா. மதுரை சென்று விட்டார். பசுமலையில் 'அருள் நிலையம்' என்ற வீட்டில் வசித்தார். 'குறிஞ்சிமலர்' நாவல் எழுதும் பொழுதுதான் தமிழ்நாடு மட்டு மல்லாமல், கடல் கடந்த நாடுகளான இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் எல்லாம் அவருக்கு ஏராளமான ரசிகர்கள் உருவானார்கள். நாவல் வெளிவந்த பொழுது நித்தமும் பாராட்டுக்கடிதங்கள் குவியும். அப்போதைய பெண் அமைச்சர் லூர்தம்மாள் சைமன், குமுதம் ஆசிரியர் எஸ்.ஏ.பி.போன்றோர் மிகவும் பாராட்டி எழுதியிருந்தனர்.

மாலையில் குளித்துவிட்டு, ஊதுபத்தி கொளுத்தி வைத்து, அறையில் ஓர் உன்னதமான தூய சூழ்நிலையில் தான் அவர் பெரும்பாலும் இந்நாவலை எழுதுவார். உயர்ந்த கம்பீரமான நடை, புதுமையான உவமைகள், காட்சிகளையும், கதாபாத்திரங் களையும் உயிரோட்டத்துடன் சித்தரிக்கும் பாங்கு, இன்ன பிறவற்றால் அந்நாவல் ஓர் உன்னத இடத்தை பிடித்தது.

ஒருமுறை மாலை நேரம் வீட்டில் பேசிக் கொண்டிருந்தோம். பக்கத்து வீட்டு வானொலியில் 'தோ ஆங்கே பாராஹாத்' படப் பாடலான 'ஹே மாலிக்' என்ற பாடல் ஒலிபரப்பானது. இதைக் கேட்ட நா.பா. சொன்னார். 'சுப.கோ. இந்தப் பாடல் எப்பொழுதும் என் மனதை உருக்கிவிடும். இப்பாடலைக் கேட்கும் பொழுதெல்லாம், ஓராயிரம் கவிதைகள் எழுதலாம் என்று தோன்றுகிறது'' என்றார்.

1958இல் வற்றாயிருப்பில் இருக்கும் பொழுதே இலங்கையில் இலக்கியப் பயணம் சென்று வந்தார். நா.பா. அப்பயணம் பற்றி 'தினமணி கதிர்' வார இதழில் ''தென்னை மரத்தீவினிலே'' என்ற பயணக் கட்டுரையும் எழுதினார்.

ஒரு முறை மதுரை சென்று வழக்கம்போல வீட்டிற்குச் சென்றேன். மாலை இருவரும் நகர் சென்றோம். மதுரை சிடி திரையரங்கில் 'தி கேட் வே ஆப் இந்தியா' என்ற மதுபாலா நடித்த படம் ஓடிக் கொண்டிருந்தது'. நா.பா. அவர்கள் இந்தப் படத்தைப் பார்க்க வேண்டும் என்றார். சரி என்று படம் பார்த்தோம். நா.பா. அவர்களுடன் நான் பார்த்த ஒரே படம் இதுதான். படம் முடிந்து வெளிவந்து, சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு மத்திய பேருந்து நிலையம் வந்தோம். அப்பொழுது மணி 10க்கு மேலாகி விட்டது. நகருந்துகள் தனியாரின் கீழ் இயங்கிய காலம் 10 மணிக்கு மேல் நகருந்துகள் நகரா.

ஒரு சைக்கிள் ரிக்ஷா ஓட்டுநரிடம் திருப்பரங்குன்றம் செல்ல கூலி கேட்டோம். தொகை சற்று அதிகமாகக் கேட்க, 'நடந்தே போய்விடுவோம்' என்று கூறினார் நா.பா. நல்ல நிலவுக் காலம் இப்பொழுது போல வாகனத் தொல்லைகள் இல்லை. பேசிக் கொண்டே நடந்தோம். 'பசுமலை'யில் அவர் வீடு வந்தோம். நானோ திருப்பரங்குன்றம் பொறியியற் கல்லூரிக்குச் செல்ல வேண்டும். வீட்டில் தகவல் கூறிவிட்டு, அருகே குடி யிருந்த எழுத்தாளர் 'திலகம் ரகுநாதன்' வீடு சென்று எழுப்பினார். அவரும் உடன் வந்தார். மூவரும் பல்வேறு தலைப்புகளில் விவாதித்த படி நடை பயணம் தொடர்ந்தோம். 12 மணிக்கு நாங்கள் கல்லூரி விடுதி அடைந்தோம். மாடி ஏறி நண்பர் அறையைத் தட்டி, திறக்கச் செய்தேன். பின்னர் கையை அசைத்து கீழே இருந்தவர்களிடம் போகச் சொன்னேன்.

ஓர் இலக்கிய வாசகர்களுக்காக இரவு நேரத்தில் 6 மைல் தூரம் நடந்தேவந்து விட்டுச் சென்ற இந்தப் பண்பு வெகுவாக போற்றப்பட வேண்டியதாகும்.

'குறிஞ்சி மலர்' நாவல் கதாநாயகன் ஓர் லட்சியப் பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது யாவரும் அறிவர். கதாநாயகன் ஓர் இரவு குளிரில் நடுங்கிய நடைபாதை ஏழைக்குப் போர்வை கொடுப்பதாக எழுதியிருப்பார். 'இந்த மாதிரி மனிதர்கள் இப்பொழுதும் உண்டா?' என்று நா.பா.விடம் கேட்டேன். அவர் 'ஏன் நானே இந்த மாதிரி ஏழைக்கு எனது துண்டு கொடுத்து உதவியிருக்கிறேன். எனவே இது மிகையல்ல' என்றார்.

மற்றொரு ஞாயிறு எழுத்தாளர் கர்ணனும் நானும் காலை 9 மணி அளவில் வசந்தா நகர் வீட்டிற்குச் சென்றோம். என்னைத் தேய்த்துக் கொண்டிருந்தார். அறையில் உட்காருங்கள். குளித்து விட்டு வந்து விடுகிறேன் என்றார். குளித்து, சாப்பிட்டு வந்தவர்! 'இன்று உங்களை ஓரிடத்திற்கு அழைத்துச் செல்லப் போகிறேன்' என்றார். எங்கே, என்றோம். 'திருவேடகம்' என்றார்.

நகருந்து ஏறி 11 மணி அளவில் திருவேடகம் சென்றோம். இங்கு பாடல் பெற்ற சிவன் கோவில் உண்டு. கோவிலைச் சுற்றி வந்து, வணங்கினோம். கோவில் வரலாறு பற்றி அங்கிருந்த வழிபாடு செய்பவரிடம் விசாரித்தார். பின் சாலையோரக் கடையில் கிடைத்த சிற்றுண்டி காபி சாப்பிட்டு விட்டு, ஆற்றின் அக்கரையில் இருந்த தென்னந்தோப்பிற்குச் சென்றோம். சுமார் 2 மணி நேரம் இலக்கிய ரசனை மிக்க உரையாடல்கள் தொடர்ந்தன. திரு. கர்ணனும் சிறுகதைகள் எழுதிவந்த நேரம் . மாலை 4 மணி அளவில் புறப்பட்டு மதுரை வந்தோம். அவர் வசந்தா நகர் சென்றார். நான் ஊர் வந்தேன். இரு வாரங்களுக்குப் பின் 'குறிஞ்சி' மலர் தொடரில் இந்தத் திருவேடகம் சிவன் கோவில் பற்றியும், ஊரின் பெருமை பற்றியும் எழுதியிருந்தார். நா.பா. எழுதும் எந்த நாவல், சிறு கதையாயினும் தகுந்த ஆதாரங்களை முன் வைத்துத்தான் எழுதுவார்.

நா.பா. அவர்கள் 'வளவன் ' என்ற புனை பெயரில் 'கல்கி'யில் சிறு கட்டுரைகள் எழுதிவந்தார்.

மதுரையில் வசித்த சிறந்த விமர்சகரான திருவாளர் எஸ். ஆர். கே. அவர்களும் 'வளவன்' என்ற பெயரிலே தினமணி

ஞாயிறு மலரில் கட்டுரை எழுதி வந்தார். அதைப்பற்றிக் கூற நா.பா. என்னையும் அழைத்துச் சென்றார். 'சரி, இனி அப்பெயரில் எழுதவில்லை' என்றார் திரு. இராமகிருஷ்ணன். அப்பொழுது அவர் சொன்னார். 'நா.பா' வரலாற்று ஆதாரங்களின் அடிப்படை யில் வ்ரலாற்று நாவல் எழுதுவதை விட சிலப்பதிகாரச் சூழலில் 'பூம்புகார்' நகரை அடிப்படையாக வைத்துக் கற்பனையாக ஒரு நாவல் எழுதுங்கள்' என்றார். நா.பா.வும் 'சரி' என்று சொன்னார்.

'மணிபல்லவம்' சரித்திர நாவல் படித்த பொழுதுதான், அவருக்கும் இந்தச் சிந்தனை உண்டு என்பதை அறிந்தேன். தமிழ் வரலாற்று புதினங்களில் ஓர் தனித்வம் பெற்ற நூல் இது.

சிலப்பதிகாரம், மணிமேகலை, நீலகேசி, குண்டலகேசி, இன்னும் பல தர்க்க நூல்களைப் படித்து இந்நாவலில் அவர் கதாநாயகன் மூலமாகவும், பிற மாந்தர்கள் வழியாகவும் பல் வேறு சமயக் கருத்துக்களை வெளியிட்ட பாங்கு மிகச்சிறப்பான முயற்சியாகும். இது புதுமைத் தடம் பதித்த நுட்பமான புதினம்.

'குறிஞ்சி மலர்' நாவலில் ஒவ்வொரு அத்தியாயத்தின் முன்பும் ஓர் ஆழ்ந்த கருத்துள்ள பாடலை முன் வைப்பார். சங்க இலக்கியம் திருமூலர் பாடல், பாரதி பாடல், கவிஞர் எஸ்.டி.எஸ். யோகி பாடல் போன்றவை இடம் பெற்றன.

இப் பாடல்களையும், மணி பல்லவ நாவலில் கூறப்பட்ட தத்துவக் கருத்துக்களையும் கண்டு, இவரை வயதில் மூத்தவர் என்றே பலர் மனதில் எண்ணினர். பம்பாய் நகருக்கு இலக்கியச் சொற்பொழிவுகளுக்குச் சென்ற பொழுது, இவரது உருவம் கண்டு வியந்தனராம். சிலர் நம்ப முடியவில்லையே' என்றனர். இதை நா.பா. பேசிக் கொண்டிருந்த பொழுது குறிப்பிட்டார்.

1960 ஜுலை மாதம் வற்றாயிருப்பில் இலக்கிய நண்பர்கள் சேர்ந்து 'புதுமைப்பித்தன் விழாவை நாள் முழுவதும் சிறப்பாக நடத்தினோம். விழா, அவர் பணியாற்றிய பள்ளியில் நடை பெற்றது. தொ.மு.சி.ரகுநாதன், தா.பாண்டியன், சிவகாம சுந்தரி ஆகியோர் கலந்து கொண்டனர். நான் நா.பா. அவர்களுக்கு நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்படிக் கடிதம் எழுதினேன். அவர் ''எனது சொந்த செலவில் வருகிறேன் நிச்சயமாக'' என்று எழுதினார். அதுபோல ஞாயிறு விழாவிற்கு, சனி மாலையே வந்து விட்டார். நடைபெற்ற பட்டிமன்ற நிகழ்ச்சியிலும் கலந்து

கொண்டார். புதுமைப்பித்தன் எழுத்து மேல் அவர் போல் ஆழ்ந்த காதல் கொண்ட எழுத்தாளர்களைக் கண்டதில்லை. அவரது அத்தனை கதைகளும் அவர் மன ஆழத்தில் பதிந்திருந்தன. இதை உரையாடும் போது நாம் உணரலாம்.

இரவு சென்னை செல்லும்போது கூறினார். "நான் இந்த விழாவிற்கு வந்ததே, புதுமைப்பித்தனின் கையெழுத்துப் பிரதிகள், கடிதங்களை நேரில் பார்க்கும் ஆசைதான் காரணம்" என்றார்.

பள்ளி மைதானத்தில் புதுமைப்பித்தன் படைப்புக்கள், அவரைப்பற்றி விமர்சன நூல்கள், அவரது கையெழுத்துப் பிரதிகள், கடிதங்களை பொருட்காட்சியாக வைத்திருந்தோம். இவை எல்லாம் ரகுநாதன் வீடு சென்று வாங்கி வரப்பட்டவை ஆகும்.

புதுமைப்பித்தன் மட்டுமல்ல, மணிக்கொடி எழுத்தாளர் கள் அனைவருடைய படைப்புக்களையும் ஆழ்ந்து படித்தவர் நா.பா. ந.பிச்சமூர்த்தி, கு.ப.ரா., ந. சிதம்பரசுப்பிரமணியன், சி.சு. செல்லப்பா, எம்.வி.வெங்கட்ராம், க.நா.சு. ஆகியோர் நூல்கள் அனைத்தும் படித்தவர் அவர்.

நா.பா. அவர்களுக்கு கு.அழகிரி சாமியின் எழுத்துக்களில் அலாதியான ஈடுபாடு உண்டு. சென்னையில் கு. அழகிரி சாமியை சந்தித்து உரையாடுவதை மிகவும் விரும்புவார்.

குற்றால அருவிகளில் இவர் போல அனுபவித்துக் குளித்த வேறு மனிதரை நான் பார்த்ததில்லை. நான் தொடர்ந்து 30 ஆண்டுகாலம் குற்றலாம் சென்று வந்தவன்.

குளிப்பதற்கு முன் நன்கு எண்ணெய் தேய்ப்பார். தாராளமாகத் தேய்க்க வேண்டும். சுமார் 15 நிமிடங்களுக்குப் பின், குளிக்க ஆரம்பிப்பார். குறைந்தது அரைமணி முதல் முக்கால் மணி நேரம் வரை அனுபவித்து குளிப்பார். 'சிற்றருவி' 'பெரிய அருவி' 'ஐந்தருவி' என்று எல்லா அருவிகளிலும் சென்று நீராடியுள்ளோம்.

ஒரு முறை காலை நேரம் நகருந்து வசதி இல்லாத நேரம். வாருங்கள் நடந்தே போவோம் என்று 'ஐந்தருவி' க்கு நடந்தே அழைத்துச் சென்றார். மீண்டும் குளித்துவிட்டு நடைதான்.

நா.பா. அவர்கள் சாப்பிடும் பொழுது விரைவாகச் சாப்பிடுவார். அவர் அருகில் அமர்ந்து உண்ணும் போது கவனித்துள்ளேன். ஒரு முறை ரசிகமணி டி.கே.சி. வீட்டில் மதியம் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். வழக்கம் போல விரைவுதான். நான் தயங்கியபடி ''சார், கொஞ்சம் மெதுவாகவே சாப்பிடுங்கள்'' என்றேன். அப்படியா, சரி பழக்கமாகி விட்டது இப்படி சாப்பிட்டு என்றார்.

நா.பா. பார்ப்பதற்கு ஒரு நடிகர் போல, கம்பீரமாக அழகாக இருப்பார். ஒரு முறை குற்றாலத்தில் டி.கே.சி. விழா முடிந்து, குளிப்பதற்குப் போய்க்கொண்டிருந்தோம். எண்ணெய் வாங்க கடைக்குச் சென்றேன். அங்கிருந்தவர்கள் ''என்ன சார், ஏதாவது இந்தி சினிமா சூட்டிங் நடைபெறுகிறதா? இவர் வட இந்திய நடிகர் போல இருக்கிறாரே?'' என்று கேட்டனர். அவ்வளவு கவர்ச்சியான தோற்றம்.

அவர் தோற்றம் பார்ப்பவர்களைக் களிப்புறச் செய்யும். அவர் இருக்கும் இடத்தில் மகிழ்ச்சிதான் ஒளிவீசும். நம்மிடம் எத்தனை பிரச்சனைகள் இருந்தாலும் அவரிடம் பேசினால் மறைந்துவிடும். சிலேடையாகவும் சில நேரங்களில் பேசி மகிழ்விப்பார், தமிழில் தொல்காப்பியம் முதல் நவீன மேத்தா வரை படித்தவர். எளிமையாகப் பேசுவார்.

சபையில் அவர் இருந்தாலே ஓர் தனி அழகுதான். ஒரு சமயம் கி.ராஜ நாராயணன் எனக்கு எழுதிய கடிதத்தில்''பேஷ்! நா.பா. வருகிறாரா! சபையே தனி கம்பீரமாக இருக்கும்'' என்று எழுதினார். இக் கடிதம் பிரசுரமாகி வந்த அவரது கடிதத் தொகுப்பில் உள்ளது.

நா.பா.விடம் ஒரு நல்ல பழக்கம், யார் கடிதம் எழுதினாலும் உடன் பதில் எழுதிவிடுவார். எழுத்துக்கள் 'முத்து முத்தாக' அழகாக இருக்கும். எனக்கு அவர் எழுதிய 82 அஞ்சலட்டைக் கடிதங்களும் நீண்ட கடிதங்களும் உள்ளன. அவர் நினைவாகப் பொக்கிஷமாகப் போற்றிப் பாதுகாத்து வருகின்றேன்.

என்றும் அவர் இலக்கியத் தொண்டுகள் தீபமாகப் பிரகாசித்து, நம்மை வழிநடத்திச் செல்லும்.

# எனது வேலை நீக்கம்

## நா. பார்த்தசாரதி

'தாமரை' ஆசிரியர் குழுவினர் என் மேலும் முற்போக்கு இலக்கிய ஆசிரியர்கள் மேலுமுள்ள நியாயமான அபிமானத்தினாலே என்னை இப்படி ஒரு கட்டுரை எழுதச் சொல்லிக் கேட்கிறார்கள். ஒரு கட்டுரையினுள் – அல்லது ஒரு சில குறிப்பிட்ட கோணங்களில் நின்று கூறி முடித்து விடக்கூடிய விஷயமில்லை இது. வழக்கமாகச் சொல்லிக் கொள்வது போல் இது ஓர் இராமாயணம். இந்த இராமாயணத்தில் எப்படிப் பார்த்தாலும் நான் தான் நிச்சயமாய் இராமனாக இருக்க முடியும் என்பது உறுதி. இராவணன் மட்டும் ஒருவனில்லை. நான் சந்தித்த வரை பல இராவணர்கள். இன்னொருவனுடைய நியாயத்தையும் சுதந்திரத்தையும் பறித்துக் கொண்டுபோய்ச் சிறை வைப்பது கூட இராவணத் தன்மைதான். தர்மத்தையும், சங்கராச்சாரியாரையும் போற்றிக் கொண்டே அதர்மத்தையும் அடக்குமுறையையும் அமுல் நடத்துகிறவர்களைத் தமிழ் கூறும் நல்லுலகமும், தயவுக்குக் காத்து நிற்கும் சராசரி எழுத்தாளர்களும் மன்னிக்கத் தயாராக இருக்கலாம். ஆனால் நான் மன்னிக்க மாட்டேன். நீங்கள் மன்னிப்பதையும் விரும்ப மாட்டேன்.

தங்களுக்கு முன் வந்து கைகட்டி நிற்கவேண்டுமென்றும் தங்களைக் குறிப்பிட்டுப் பேசும்போது ''பெரியவர் இருக்கிறாரா? பெரியவர் என்ன சொல்கிறார்?'' என்றெல்லாம் விசாரித்துப் பெரியவர் பட்டம் கொடுக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிற அநியாயத்தை எழுதப் புகுந்தால் நான் எரிமலையாகி விடுவேன். நேர்மையும், பெருமையும் உள்ள சில பெரிய அரசியல் தலைவர்கள் கூட இப்படிப்பட்ட ஒழுக்கங்கெட்ட முதலாளிகளுக்குத் துணை நின்று நாட்டு மக்கள் தங்களால் துணை பெறுகிற வரை நம்பும் படி மருட்டி விடுகிறார்களே என்று நினைக்கும் போதுதான் தமிழக நிலை பரிதாபமாயிருக்கிறது. விபூதிப்பூச்சு, பஞ்சகச்சம், தீட்சிதர்களின் கதா காலட்சேபங்களில் போய் மாலை நேரங்களில் உட்காருதல் – ஆகிய புறச்செயல்களாலேயே பட்டினத்தில் ஒரு ஒழுக்கங்கெட்டவன் தன்னை யோக்கியனாகக் காண்பித்துக் கொள்ள முடியும் என்பதை நேருக்கு நேர் பார்த்து உணர்ந்தேன். இந்தப் போலிப் பக்தியை மதித்துப் புகழாவிட்டால் கெட்ட

பெயர் சுமத்தி ஆளைத் தெருவில் நிறுத்த முயல்வார்கள் என்பதையும் உணர்ந்தேன். ''பேஷாப் போச்சு''–என்று தனக்குத் தெரிந்ததோ –தெரியாததோ – எதையும் புகழ வேண்டும். ஒரு வேளை அதைப் புகழ்கிற தகுதி தனக்கு இல்லையானால் தலையாட்ட வேண்டும்– சமஸ்கிருதத்திலும் – இங்கிலீஷிலும் இருக்கிற சங்கராச்சாரியார் கதையைக் குழப்பமான தமிழில் மொழிபெயர்த்துப் போட்டுச் சொந்தப் படைப்பு போல் வேஷமிட வேண்டும்.

தமிழகத்திலுள்ள ஜனரஞ்சக தமிழ்ப் பத்திரிகைகளை எந்தப் புத்தியின் சக்தியும் இப்போது இயக்கவில்லை. 'சர்க்குலேஷன் மானேஜர்கள்' தான் பத்திரிகைகளின் சர்வாதி காரிகளாக இருந்து அவற்றை இயக்குகிறார்கள். முதலாளி களைச் சொக்குப்பொடி போட்டு இவர்கள் மயக்க – இவர்கள் 'காதலி'ல் முதலாளிகளும் எல்லாம் செய்கிறார்கள். ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் நீடித்திருக்க நியாயமும் நேர்மையும், புத்தியும், திறமையும் மட்டும் போதாதென்று தெரிகிறது. நியாயத்தை ஆதரிப்பது தவிர–அல்லது நியாயத்தைப் பற்றிக் கவலைப்படாமல் –அங்குள்ள சக்தி மிக்க மனிதர்களின் ஆபாசங்களை ஆதரித்தாலே பதவி உயர்வு, பணச் செழிப்பு எல்லாம் கிடைத்து விடும்.

நியாயத்தை ஆதரித்தால் நாம் அலட்சியப்படுத்தப் பெறலாம் அல்லது அவமானப்படுத்தப்பெறலாம். பத்திரிகையை நடத்துகிற வரை மட்டுமே எல்லாமாகப் பேசி நம்பித் திரிந்து நாத்தழுத்தழுக்கப் புகழ்ந்து நமது சொந்தத் தன்னம்பிக்கைகளை விட்டு விட வேண்டும். நீங்கள் அவர்களுக்கு உழைப்பையும் கொடுத்து அதற்கு மேல் விலைமதிப்பற்ற விசுவாசத்தையும் கொடுக்க வேண்டும். அவர்கள் விசுவாசம் உங்களுக்குக் கிடைக்காது. அதாவது நீங்கள் அவர்களது காரியம் சாதிக்கும் திறமைகளைக் கண்டு வியந்து புகழ்ந்து மலைக்க வேண்டும். அவர்களோ உங்கள் புத்தியையும், திறமையையும் வியக்கவும் மாட்டார்கள் விசுவாசிக்கவும் மாட்டார்கள். ஒவ்வொரு பத்திரிகை முதலாளியும் தன் வைப்பாட்டிமார்கள் தனக்குச் சிசுருஷை செய்வது போல் அறிவின் பிரதிநிதியாகிய ஆசிரியனும் தொண்டு செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறான். ஆனால் மதிப்பதில்லை. இப்படி ஒப்பிடுவது கொஞ்சம் பச்சையாயிருக்கலாம். ஆனால் இது தான் உண்மை.

தமிழ்நாட்டுப் பத்திரிகைகளில் தன்மானமுள்ள தீரர்கள் நீடிப்பது அருமை என்பது என் அனுபவம். மாட்டுக் கொட்டத்தினுள் சிங்கங்களைக் கட்டிப் போட முடியாது. இதனால் சிங்கங்கள் கொடுமைப்படுத்தும் என்பது பொருளல்ல. மாட்டுக் கொட்டம் சிங்க வாசத்துக்கு தகுந்த இடமல்ல என்பதே பொருள். இதுவரை முன்னுரை. இனிமேல் தான் தமிழ்ப் பத்திரிகைத் தொழிலில் ஓர் தன்மானமுள்ள எழுத்தாளன் படநேரும் துன்பங்களைச் சொல்ல வேண்டும்.

சுதந்திரமான போக்குள்ள தரமான எழத்தாளர்களின் நியாயமான சிந்தனை ஒளியைத் தமிழ் மக்களுக்கு அளிப்பதற்காக நான் தீபம் - ஏற்றும் இந்தச் சமயத்தில் தமிழ்ப் பத்திரிகைத் தொழிலில் அறிவு பலத்திற்கும் - பண பலத்திற்குமுள்ள - பகை - போட்டிகள் பற்றிக் கொஞ்சம் சுவாரஸ்யமாகவும் - விரிவாகவும் ஆராய ஆசைப்படுகிறேன். - தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் இருந்து உத்தியோகம் பார்ப்பதிலுள்ள கஷ்டங்கள் பற்றி முன்பு ஒரு முறை தோழர் ஜெயகாந்தன் என்னிடம் கூறியதை இப்போது நினைவு கூர்கிறேன். நான் அதை நினைவு கூரும் போது என் சிந்தனை இன்னும் வளர்கிறது. சம்பளத்திற்கு விலை உழைப்பு -உழைப்பிற்கு மேல் விசுவாசத்தையும் சேர்த்து உங்களிடம் எதிர்பார்ப்பவர்கள்-விசுவாசத்தைப் பெற யோக்கியதை இல்லாத முதலாளிகள். சுதந்திர நோக்கும் தன்மானம் காரணமான பகைமையும் முதலில் இங்கே தான் ஆரம்பமாவது வழக்கம். விசுவாசத்தை - விசுவாசத்தினால் தான் பதிலாகப் பெற முடிய்ும் என்பதை மறந்து - உழைப்பையும் விசுவாசத்தையும் - வெறும் சம்பளம் என்ற ஒரே விலைக்கு - அளவிற்குன்றிய விலைக்கு வாங்கிவிடப் பார்க்கிறார்கள். சிலர் பிழைப்புக் காரணமாகச் சகலத்தையும் குறைந்த விலைக்கே விற்று விடலாம். எல்லாரும் அப்படிச் செய்துவிட முடியுமா... பணமும் அதிகாரமும், ஆணவமும், ஆஷாடபூதித்தனுமுமே பெருமைக்குரிய பொருள்களாக நினைக்கப் படுமானால் நிஜமான புத்தியும் திறமையும் தன்மானம் கொண்டாடுவதில் என்ன தவறு இருக்க முடியும்..... எழுத்தாளர்களின் பத்திரிகைச் சுதந்திரம், பத்திரிகை தர்மம்; என்றெல்லாம் தங்களுக்கு வேண்டிய தலைவர்களைக் கொண்டு மேடைகளிலும், தலையங்கங்களிலும் முழக்கி வரும் பத்திரிக்கை முதலாளிகள் - பத்திரிகைகளில் பணிபுரியும் எழுத்தாளர்களின் எழுத்து

சுதந்திரத்தையோ, அபிப்ராய சுதந்திரத்தையோ, அப்படிக் குறிப்பிடுவதாக நினைத்தால் அது தவறு. தங்களுக்கு வேண்டிய தொழில் சுதந்திரத்தினையோ, அல்லது தாங்கள் நினைத்தபடி தங்கள் பத்திரிகைகளில் தங்களுக்கு தலையாட்டுகிறவர்களை வைத்துக் கொள்வதையும், மற்றவர்களை வெளியேற்றி விடுவதையும் தங்கள் அதிகார எல்லைக்குள் வைத்துக் கொள் வதையோதான் அவர்கள் பத்திரிகைச்சுதந்திரம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதிகம் செலவாகும் எந்தப் பத்திரிகைக்கும் / எந்த எழுத்தாளனும் ஆசிரியனில்லை. அந்தந்தப் பத்திரிகையின் முதலாளியோ அல்லது முதலாளியின் மகனோ, மாப்பிள்ளையோ தான் ஆசிரியனாக இருக்க முடியும். கிராம முன்சீப், கர்ணம் உத்தியோகம் மாதிரி இதுவும் ஒரு பாரம்பரியப் பதவியாகி விட்டது. அதனால் புத்தியின் பலமும் நவ நவமான இலக்கியச் சோதனைகளை நடத்த வேண்டுமென்ற ஆர்வமுமுள்ள எந்தப் புதிய தலைமுறை எழுத்தாளனும் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவாகிய அம்மாதிரி கூட்டத்தில் போய்ச் சிக்கிக் கொள்ளவே கூடாது என்று தோன்றுகிறது. பணம் ஒன்றைத் தவிர வேறு யோக்கியதை எதுவுமில்லாத பத்திரிகை முதலாளிகள் – அந்தந்தப் பத்திரிகைக்கு முதலாளியாயிருப்பதோடு – ஆசிரிய னென்று பேர் போட்டுக் கொள்வதற்கும் ஆசைப்படுவதில் வியப்பில்லை. எழுத்தைப் பற்றி எடை போடும் திறனும் நாட்டின் இலக்கியச் சூழ்நிலையை அறிந்து செயல்படும் சீரும் உள்ள ஓர் இலக்கிய ஆசிரியனுடைய பொறுப்பில் பத்திரிகை இருக்குமானால் அவன் எத்தனை எத்தனையோ மகத்தான இலக்கிய சாதனைகளைச் சாதிக்க முடியும். ஆனால் தமிழ் நாட்டில் இன்று அப்படி இல்லை. விளம்பர மானேஜராகவும் சர்க்குலேஷன் மானேஜராகவும் உள்ள வியாபாரப் பேர் வழிகள் பத்திரிகைகளை ஆளுவதால், பத்திரிகைகளில் பெரும் பெரும் பணத் திமிங்கலங்களின் அட்டைப் படங்களும், சினிமா ராணிகள் மேலாக்குப் போடுகிற அல்லது போடாத நாகரிக மோஸ்தர்களைப் பற்றிய வர்ணனை விவரங்களுமே வெளிவருகின்றன.

எனக்குத் தெரிந்த மட்டும் தமிழ்ப் பத்திரிகைகள் நடைபெறும் 'சீரைப்' பற்றி நினைத்தால் மானக்கேடாகவே

இருக்கிறது. ஐந்துக்கு மேற்பட்ட உதவியாசிரியர்களும் - ஓர் இணையாசிரியரும் உள்ள தமிழ் வாரப் பத்திரிகை ஒன்றில் - அந்த பத்திரிகைக்கு வேண்டிய கதைகள் - தொடர்கதைகள் - சித்திரவதைகள் (அதாவது சித்திர தொடர் கதைகள்) எல்லா வற்றையும் தீர்மானம் பண்ணுகிற பொறுப்பு - அந்தக் காரியாலய முதலாளியின் 'காதலுக்குப்' பாத்திரரான இளம் சர்க்குலேஷன் மானேஜரிடம் இருக்கிறது. அனுபவமும் முதுமையும் நிறைந்த அந்தக் காரியாலய உதவியாசிரியர்களெல்லாம் முளைத்து மூன்று இலை போடாத இந்த சர்க்குலேஷன் மானேஜருக்கு 'சலாம்' போட்டுப் பிழைப்பை நடத்த வேண்டியிருக்கிறது. இந்த சர்க்குலேஷன் மானேஜரைத் தட்டிக் கொடுத்து, " இவன் தான் என் உயிர். நான் வெறும் உடம்பு " என்பது போல் எல்லார் முன்னிலையிலும் அந்த முதலாளி பாராட்டுவதால், எல்லாரும் அந்த சர்க்குலேஷன் மானேஜருக்கு அடிமைகளாகி விடுகிறார் கள். இலட்சம் இலட்சமாகத் தமிழ் வாரப் பத்திரிகைகளை வாங்கும் தமிழ் வாசகர்களுக்கு இன்னும் சில உண்மைகளை இங்கே நான் சொல்லியாக வேண்டும். கோபுரத்தின் மேலேறி நின்று அஷ்டாங்க மந்திரத்தைச் சொன்ன போது அந்த வரம்பை மீறியதற்காக எத்தனை பெருமிதத்தை ராமானுஜர் அடைந்திருப் பாரோ அத்தனை பெருமிதத்தை இந்த அபவாதத்தை வெளியிடுகிற நானும் அடைய முடியுமென்றே எனக்குத் தோன்றுகிறது.

ஓர் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன் நான்கு புறமும் கோபுரங்கள் நிமிர்ந்து நிற்கின்ற எங்கள் அழகிய மதுரையிலே நான் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். பி.ஓ.எல். பட்டப்படிப்புக்காகத் தனியே படித்துக் கொண்டு மிருந்தேன். அந்தச் சமயத்தில் சென்னையைச் சேர்ந்த வாரப் பத்திரிகை முதலாளி ஆசிரியர் ஒருவர் என் எழுத்துத் திறமையால் கவரப்பட்டோ, அல்லது என் எழுத்துத் திறமைக்கு பொங்கல் வைத்து என்னைத் தீர்க்க' - அது தான் சமயமென்று முடிவு செய்தோ, என் வீடு தேடி வந்தார். அப்போதுஅவரோடு உடன் வந்தவர் நாவலர் சோமசுந்தர பாரதியாரின் மருமகனும் - பிரபல வழக்கறிஞருமான திரு.எல். கிருஷ்ணசாமி பாரதி என்பதாக ஞாபகமிருக்கிறது எனக்கு. மதுரையே அதிகம் பழகிய என் தாய்க்கும், தந்தைக்கும் எங்கள் குடும்பத்தாருக்கும் - நான்

மதுரையை விட்டுச் சென்னைக்கோ, வேறு வெளியூருக்கோ புறப்பட நினைப்பது கூடப் பிடிக்காமலிருந்த காலம் அது. அந்தக் காலத்தில் அந்தச் சமயத்தில் நானும் எனக்குத் தேவையான நல்ல இலக்கிய நண்பர்களையும், நல்ல இலக்கியச் சூழ்நிலையையும், மதுரையிலேயே அமைத்துக் கொண்டு திருப்தியடைந்தேன். அந்தச்சமயத்தில்தான் நல்லவன்கதையில் வில்லன் புகுந்தது போல் நான் மேலே கூறிய வாரப் பத்திரிகைக்காரர் பசப்பு மொழிகளிடனும், மிகப் பெரிய எதிர்காலத் திட்டங்களுடனும் என்னை அணுகினார்.

''மெட்ராஸுக்கு வந்துட்டா நம்ம ஸ்தாபனத்துக்கு ரொம்ப உபயோகமாயிருக்கும். எனக்கும் நிம்மதி. உங்க பொறுப்பிலே இனிமேல் ஸ்டாண்டர்டு 'மன்த்லி' மாகஸீன் ஒன்னையும் ஆரம்பிச்சுடலாம்'' என்று அவர் தேனொழுகப் பேசினார். அந்த சமயத்தில் என் உண்மை நண்பர்கள் சிலர் எனக்குக் கீழ் வருவது போன்ற அறிவுரைகளைக் கூறினர்.

''அந்த ஆளுக்கு இதே பிழைப்பு. ஆனால் நம்பிக்கைக்கோ வாக்கு நாணயத்திற்கோ தகுந்த ஆளில்லை. வாக்கு சுத்தம் கிடையாது. சொன்ன வார்த்தையைக் காப்பாற்ற மாட்டாத ஆள். அப்ஸ்டார்ட். மேன் ஆப் மூட்ஸ். மேன் ஆப் ஸட்ராங் லைக்ஸ் அண்ட் டிஸ்லைக்ஸ், எனவே யோசித்துச் செய்யுங்கள். பரம்பரைப் பெருந்தன்மையில்லாத ஆஷாடபூதிகளிடம் போய்ச் சிக்கிக் கொண்டு திண்டாடாதீர்கள்.''

''...............மா ? யோசனை பண்ணிச் செய்யுங்கள். இன்னிக்குச் சொன்னதை நாளைக்கு மறந்திடற ஆள். 'ஆமாம் போடறவனைத்தான் பிடிக்கும். சுதந்திர நோக்குள்ளவனுடனே ஒத்துப் போகாத ஆள். ஜாக்கிரதை.''

''அந்த ஆபிஸிலே எந்த நல்லவனும் நிலைக்கிறது வழக்கமில்லையே.... அதை நம்பியா போறீங்க....''

- இப்படிச் சொல்லிய பலருடைய அறிவுரையும் மறக்கும்படி என்முன் சத்தியங்களும், சாகஸப் பேச்சுக்களும் புரிந்தார் அந்த முதலாளி. என் போதாத வேளையோ அல்லது எனக்குத் தமிழ்ப் பத்திரிகைத் தொழிலுக்கு மேற்படி காரியலாயம் புரிந்து வரும் துரோகங்களை நான் நேருக்கு தெரிந்துக் கொண்டாக வேண்டிய விதி வேளையோ நான் சென்னைக்கு வர நினைக்கலானேன். தமிழாசிரியர் பதவிக்கு விலகல் கடிதம் தரவும் முடிவு

செய்தாயிற்று. இதற்கிடையில் ஒரு நல்ல பண்டிகை தினம் – (ஆவணியவிட்டத்திற்கு மறுநாளென்று நினைவு) பகலில் மேற்படி பத்திரிகைக்காரரிடமிருந்து ஒரு முக்கியமான காரியமாக உடன் சென்னை வருமாறு 'டிரங்க் டெலிபோனில்'- தகவல் தெரிவிக்கப்பட்டது. அந்தத் தகவலின் அழுத்தம், அது எனக்குத் தெரிவிக்கப்பட்ட வேகம் , அதை தெரிவித்த விதம் எல்லாம் மிகமிகப் பிரமாதமாயிருந்தன என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். மதுரையைச் சேர்ந்த எளிய இலக்கியத் தொழிலாளியாகிய நான் அன்று பகலில் அந்த ஒரு விநாடியில் கொஞ்சம் ஏமாந்து போனேன் போலிருக்கிறது. ஆனால் அன்று அப்படி மனம் நலிந்து போய் வரவில்லையானாலும் பணத் திமிங்கலங்களின் கைகளில் புனிதமான பத்திரிகை தொழில் படும் பாட்டைப் பற்றி நான் அதிகம் தெரிந்துகொள்ள முடியாமலும் போயிருக்கும். தொழில் என்கிற சுயலாபத்துக் காக எந்தெந்தக் குறைவான காரியங்களையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும், எப்படி எப்படித் தொடங்கி எப்படியெப்படி நம்பிக்கைத் துரோகங்களைப் புரிவார்கள என்பதையும் இந்தப் பட்டினத்துக்கு வரவில்லையானால் நான தெரிந்து கொண்டிருக்க முடியாமலே போயிருக்கும். இவர் களுடைய பத்திரிகை என்கிற காகிதம் இலக்கிய சேவை புரியாததோடு இவர்களிடமுள்ள ஊழியர்களின் வேதனையை – வாசகர்களுக்கு மறைக்கவும் வாசகர்களுக்கும் பத்திரிகையின் உயிர்நாடியான எழுத்தை உருவாக்குகிறவர்களுக்கும் நடுவே ஒரு நிரந்தர மறைப்பாகவே இருக்கவும் பயன்படுகின்றதென் பதையும் தெரிந்து கொண்டேன். ஒரு பத்திரிகையின் உள்ளே என்ன அநியாயம் நடந்தாலும் வெளியே அதைப் பற்றி அறிய அக்கறையோ உணர்வோ இன்றி என்றும் போல் அந்தப் பத்திரிகையை வாங்கி ஆதரிக்கும் 'பெரு மக்கள்' இருக்கும் போது முதலாளிகள் ஏன் கவலைப்படப் போகிறார்கள்.... ஓர் எழுத்தாளன் பழிவாங்கப் பட்டால் சக எழத்தாளர்களும் பதுங்கி ஓடி ஒளிகிறார்கள்.

வாசகர்களும் ஏனோதானோ என்று இருந்து விடுகிறார் கள். தமிழ்ப் பத்திரிகை முதலாளிகளுக்கு இது ஒரு பெரிய சௌகரியமான சூழ்நிலையாக இருக்கிறது. இன்று வரை அப்படித்தான் இருக்கிறது. புத்தியின் நஷ்டம் அவர்களைப் பாதிப்பதே இல்லை. பணத்தைக் காட்டி புத்தியை அடகு

பிடிக்கிறார்கள், புத்தி மலிவான விலைக்கு எப்போதும் கிடைக்கிறது அவர்களுக்கு. என்னைப் பற்றிச் சொல்லுமுன் இந்தியப் பத்திரிகைத் தொழிலுக்கும் உலகப் பத்திரிகைத் தொழிலுக்குமுள்ள முக்கிய வேறுபாடொன்றைக் காணலாம். வளர்ச்சியடைந்த நாடுகளில் பத்திரிகையாளன் என்பவன் புத்தியும் சுறுசுறுப்பும் உள்ள கூட்டத்திலிருந்து அல்லது வாழ்க்கையைப் புதிய கண்ணோட்டத்துடன் அணுகத் தெரிந்த முற்போக்குச் சிந்தனையாளர்களின் வட்டத்திலிருந்து உருவாவதைக் கண்டும் கேட்டுமிருக்கிறோம். ஆனால் நியூஸ் பிரிண்ட் காகிதத்தையும் ரூபாய் நோட்டுக்களையும் ஒரே உயரத்துக்கு அடுக்கி வைத்துக் கொண்டு மனோதர்மமில்லாத காகித ஆலையைப் போல் பத்திரிகை நடத்தும் இந்தியப் பத்திரிகை முதலாளிகளில் பலர் தங்கள் மகன், மருமகன், மைத்துனன், மாப்பிள்ளை ஆகியோருக்குப் பெரிய சம்பளத்தில் உத்தியோகம் கொடுத்து உடன் வைத்துக்கொண்டு, வருமான வரிப் பொய்க்கணக்கில் ஒத்துழைப்பும், உதவியும் கிடைக்கக் கூடிய வகையில் பத்திரிகைத் தொழில் என்னும் காமதேனுவைக் கறந்து பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பத்திரிகை நடத்துகிறவனிடமே புத்தி சம்பந்தமான பிரச்சினைகளில் முரண்பட்டு நின்று எதிர்க் குரல் கொடுக்கக் கூடிய இலட்சியக் வாதிகளும் பத்திரிகைத் தொழிலுக்கு வேண்டும் என்று மக்களும் நினைக்கிறார்கள். முதலாளிகளுக்கும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒப்புக் கொள்கிறார்கள். இந்தக் காரணத்தால் மனிதாபிமானம் என்ற உயர்வான – பெருமிதமான –இலட்சியத்தை முன் வைத்து நடத்தப்படுகிற பத்திரிகைத் தொழிலே அந்த நிலை நிலவுகிற நாடுகளில் பத்திரிகையாளன் மனித தர்மத்தின்–இரட்சகனாக – வானம்பாடிபோல் சுதந்திரமாக இருக்க முடிகிறது. ஆனால் வளர்ச்சியடைந்த நாடுகளிலும் நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகுதான் இந்த நிலை வந்திருக்கிறது. பத்திரிகையாளர்கள்–கன்ஸ்வர்வேடிவ் முதலாளிகளுக்குப் பயந்து – தயங்கி – முதல் முதலாக இங்கிலாந்தில் – யூனியன் ஒன்று அமைக்கப் பூர்வாங்கக் கூட்டம் நடத்தத் திட்டமிட்டபோது, கூட்டம் நடத்துவதற்குத் தனியான –அந்தரங்கமான இடமே அகப்படாமல் ஒரு பாழடைந்த கல்லறையிலே– இரகசியமாக நடத்த வேண்டியிருந்ததாம்.

நம் நாட்டில் நம் ஊரில் – உள்ள நிலையோ –கல்லறையில் ஓடிப் போய்க்கூட இந்த மாதிரி ஒற்றுமை –பத்திரிகையாளன்

என்ற இன உணர்ச்சிக் கூட்டங்கள் -இவற்றை எல்லாம் நடத்திவிட முடியாது. ஏனென்றால் பணமுதலைகளின் காகித ஆலைகளில் விசுவாசமில்லாத வெறும் காசுக்காகத் தன் ஆன்மாவையே விற்றுவிடுகிறது. இந்த நாட்டு உழைக்கும் பத்திரிகையாளர்களில் பெரும்பாலோர் – அப்படி ஆன்மாவை விற்றுவிடுகிற காரணத்தினால் தங்களுக்குத் தாங்களே கல்லறை களாகித்தான் நடமாடுகின்றனர்! இந்த நிலையில் வேறு கல்லறைகளை நாடிப் போக அவசியம் ஏன்?... முதலாளிகள் தங்கள் காரியாலயத்தில் செய்கிற முதல் காலித்தனம் – ஆசிரியர் குழுவைச் சேர்ந்தவர்கள் – ஒருவருக்கொருவர் – ஒற்றுமை யில்லாமல் தனித் தனிக் 'குரூப்' களாகப் பிரிந்து விலகி நிற்கும்படி ஏற்பாடு செய்வது தான். இந்த ஏற்பாட்டை நேரடியாகவோ மறைமுகமாகவோ அவர்கள் திட்டமிட்டுச் செய்வார்கள். சிலருக்கு – அவர்கள், வால் பிடிப்பவர்களாகவோ, கூஜாத் தூக்குகிறவர்களாகவோ இருக்கிறார்கள் என்பதற் காகவே காரியாலயத்தில் அதிக சௌகரியங்களையும் சுக போகங்களையும் அளிப்பார்கள். வேறு சிலருக்கு அவர்கள் தன்மானத்திலும் சுதந்திர நோக்கிலும் – திடமாகக் காலூன்றி நிற்பவர்களென்ற காரணத்தினால் சில சாதாரண சௌகரியங் களையும் வசதிகளையும் கூடச்செய்துதராமல் புறக்கணிப்பார்கள்.

பத்திரிகைக் காரியாலயத்தின் பேரில், காரியாலயச் செலவில் பெட்ரோல் – பழுது பார்க்கும் செலவுகள் போடப்படு வதாகக் கணக்கெழுதப்படும். கார்கள் பத்தோ – பனிரெண்டோ இருக்கும். ஆனால் காரியாலய உதவி ஆசிரியர்களோ, தொழி லாளர்களோ தவறிக்கூட அவசர ஆத்திரத்திற்கு – விடாத மழைத் தொல்லை உள்ள நாட்களில் அல்லது ஓயாத வெயில் தகிக்கும் கோடை நாட்களில் இந்தக் காரியாலய வாகனங்களில் பயணம் செய்கிற அந்தஸ்தை அடைய முடியாது.

இந்தக் காரியாலய வாகனங்கள் அதிபரின் மகள் வீட்டி லொன்றும், மைத்துனி வீட்டிலொன்றுமாக ஓடி உய்வித்துக் கொண்டிருக்கும். செலவுகள் ஆயிரம் ஆயிரமாகக் காரியாலக் கணக்கில் – ஏழை எழுத்தாளர்கள் எழுதியும் – பாட்டாளி அச்சுத் தொழிலாளிகள் பாடுபட்டு வளர்த்தும் உருவாக்கி அனுப்புகிற பத்திரிகை வருவாயில் நடைபெற்றுக் கொண்டிருக்கும். காரியாலயத்தைக் கவனித்துப் பாதுகாக்க என்று ஒரு டஜன்

கூர்காக்கள் சம்பளம் வாங்குவார்கள். ஆனால் மகளின் பங்களாவைக் காக்கவும், மாப்பிள்ளையின் அரண்மனையைக் காக்கவும் அந்தக் கூர்காக்கள் பயன்படுத்தப் பெறுவார்கள். ஆறு சமையற்காரர்களைக் காண்டீன் ஊழியர்கள் – என்ற பெயரிட்டு ஆபிஸில் சம்பளம் கொடுத்து – வேண்டிய உறவினர்கள் வீட்டில் எல்லாம் அவர்களைத் திதி பொங்கவும், விருந்து பொங்கவும் அனுப்பிக் கொண்டிருப்பார்கள்.

இந்தப் பக்கம் பத்திரிகைக்காகப் பாடுபடுகிற அச்சகத் தொழிலாளியும், புரூப் திருத்துகிறவர்களும், உதவியாசிரியர் களும் குடும்ப பாரத்தையும், நகர வாழ்வின் பகாசுரப் பணத் தேவையையும் தாக்குப் பிடிக்க முடியாமல் நலிந்து சீரழிந்து கொண்டிருப்பார்கள். அந்தப் பக்கம் பத்திரிகை அதிபர் அல்லது முதலாளி பெரிய பெரிய கார்களிலும் ஏர்க்கண்டிஷன் செய்த குளு குளு ரயில்களிலும், டெல்லிக்கும் பம்பாய்க்கும், கல்கத்தாவுக்குமாக விமானங்களிலும் பறந்து கொண்டிருப் பார்கள். இன்னும் சில தனிநபர் பத்திரிகை ஆலைகளில் ... ஸ்டோரீஸ் ஸ்குரூட் நைஸிங் – புரூப் ரீடிங்.. என்ற பெயரில் அதிபர்களின் மைத்துனிகள், மருமகள்கள் வவுச்சரில் கையெழுத்துப் போட்டு 500, 600 என்று வாங்கிக் கொண்டிருக்க, உண்மையிலேயே அந்தந்த வேலைகளை அந்தக் காரியலாயத்தில் செய்து கொண்டிருக்கும் அப்பாவி உதவியாசிரியர்கள் சில நூறும், இரு நூறும் கூலி வாங்கிக் குடும்ப இயந்திரத்தை நரகச்சாலையில் அந்தக் குறைந்த செலவில் ஓட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருப்பார்கள். இந்தியப் பத்திரிகைத் தொழிலிலும், என்னைப் போல் சக்திவாய்ந்த தனி நபர்கள் கூடக் கஷ்டப்படுவதற்கும் புறக்கணிக்கப்படுவதற்கும் ஒவ்வொரு விதத்திலே இந்த முதலாளிமார்களின் மேற்கண்ட அடிப்படை ஊழல்களும், சூழ்ச்சிகளும் காரணமாக முடியும்.

எனது வேலையை நான் இழந்த இடத்தில் தர்மமும், சங்கராச்சாரியாரும் போற்றப்பட்டாலும் அங்கே இப்படி ஊழல்கள் மலை, மலையாக உண்டு. அந்த ஊழல்களை மறைக்கவே இந்த தர்மக் கூக்குரலும் சங்கராச்சாரியார் பக்தி வேஷமும் பயன்படுகின்றன. சிறுமை கண்டு பொங்குவதும் அசல் எழுத்தாளனின் ஆன்மீகக் குணங்களில் ஒன்று. அதை

அவன் எப்படி இழக்க முடியும்... நான் எந்தெந்த இடத்தில் திடுக்கிட்டேன், எந்தெந்த இடத்தில் இந்தத் தரங்கெட்ட ஆசாமிகளிடம் அருவருப்புக் கொண்டேன் என்பதை அடுத்து எழுதுகிறேன். நான் சாட்டுகிற குற்றங்கள் நீங்களும் வெறுக் கிறவைகளாகவே இருக்கும். நீங்களும் திடுக்கிடுகின்றவை களாகவே இருக்கும் அந்த ஊழல்கள்.

கால் நூற்றாண்டுக் காலத்திற்கு முன், அல்லது அதற்கும் முன், தேசிய உணர்ச்சி முறுகி எழுந்த காலத்தில், சுதந்திர வேட்கையும் சுதேசி எண்ணமும் எங்கும் பரவியிருந்த ஒரு வேளையில் – அவற்றையே புனித இலட்சியங்களாக முன் வைத்து ஒரு குடிசையில் மங்கலமாகக் குத்து விளக்கேற்றினால் போன்ற நிலையில் இந்தியப் பத்திரிகைத் தொழில் தொடங்கப் பட் டிருக்கலாம். ஆனால் அதெல்லாம் பழைய கதை. அவ்வாறு எளிமையாகவும், அமைதியாகவும் புனித இலட்சியத்தை முன் வைத்தும் தொடங்கப்பட்ட பத்திரிகைத் தொழில் படிப்படியாக இன்று எந்த நிலைக்கு வந்துவிட்டதென்று கவனிக்கலாம்.

பாரதியாரின் இந்தியாவும்; திலகரின் கேசரியும், திரு.வி.க. வின் 'நவசக்தி'யும் எழுத்தாளர்களின் 'மணிக்கொடி'யும் பத்திரிகைகளாக நடத்தப்பட்ட காலத்து அடிப்படை இலட்சியங் களும், நோக்கங்களும், வேறு .. இன்றைய நோக்கங்கள் வேறு. செலவும், வரவும், குவிகின்ற இலாபமுமே பெரியதாகத் தோன்றாமல் வேறு சில இலட்சியங்களும் முன் நின்று பெரியதாகத் தோன்றிய காலம் அது. அன்று பத்திரிகைகளின் ஆன்மா அதன் எழுத்தில் நிறைந்திருந்த சத்திய ஆவேசத்திலும் தார்மீக உணர்ச்சியிலும் இருந்தது. இன்று போல வெறும் பணத்திலும் அதிகாரத்திலும் அது அன்று இல்லை. இன்றைய தமிழ்ப் பத்திரிகைகள் ஆசிரியர் குழுவிலிருப்பவர்களுக்கு ஒரு விதமான சுதந்திரமும் இல்லை. உரிமைகளும் கிடையாது. திரு.வி.க. வை. கோவிந்தன், ஜீவானந்தம் போன்றவர்கள் பத்திரிகைகளை வளர்த்த வளத்தில் எத்துணைக்கு எத்துணை உரிமை வேட்கையும் மனிதாபி மானமும் நிறைந்திருந்தனவோ அத்துணைக்கு அத்துணை இன்று கூலிகளாய்ப் பஞ்சைகளாய்த் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர் குழுவில் – அல்லது அந்தப் பெயரில் நிர்வகிக்கப்படுகின்ற ஓர் அடிமைப் பண்ணையில் – சிலர் திண்டாடுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்று பார்க்கலாம்.

கடந்த பத்து வருடங்களில் சிந்தனைக்கு விருந்தளிக்கும் சிறந்த வாரப் பத்திரிகை... – என்று தனக்குத்தானே பிரகடனப்படுத்திக் கொள்ளும் ஒருவாரப் பத்திரிகையில் – ஆசிரியர் குழுவைச் சேர்ந்த ஒரு பதின்மரும், ஓவியர்களில் ஓர் ஐவர் அல்லது அறுவரும் – விலக்கப்படுதல், பழிவாங்கப்படுதல் – வஞ்சகமாக மோசம் செய்யப்படுதல் போன்ற விதங்களில் தொடர்ந்து காயடிக்கப் பட்டிருக்கிறாாகள். ஆனாலும் தமிழ் மக்கள் அந்தப் பத்திரிகையை இன்னும் படிக்கிறார்கள்.

இன்னார் நேற்றிலிருந்து அந்தப்பத்திரிகையில் இல்லையாமே.. காரியாலயச் சார்பில் அவருடைய வீட்டில் வைக்கப்பட்டிருந்த டெலிபோனைக் கூட அறுத்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்களாமே ...மேஜை நாற்காலிகளைக் கூட ஒழித்து எடுத்துக் கொண்டு போய்விட்டார்களாமே...– என்று அந்தக் காரியாலயத்தைப் பற்றி ஒரு செய்தியாய் இரண்டொரு மாதங்களுக்குக் குறையாமல் நிரந்தர அமங்கல நியூஸ் இருந்து கொண்டே இருக்கும். தமிழ்ப் பத்திரிகை உலகில் அற்பத்தனமான மனப்பான்மையுள்ள சிலர் பத்திரிகை முதலாளிகளாக இருப்பதால் தங்களுக்கு வேண்டாதவர்கள் என்று கருதப்படுகிறவர்களை மிகமிக நயவஞ்சகமாக – ஓநாய்த்தனமாகப் பழிவாங்குவார்கள். தங்கள் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் பணிபுரிய ஒரு புத்திசாலியை – நாசூக்காக விலைபேசும் போது அந்த உத்தியோக நியமனபேரம் கீழ்க்கண்ட விதமாக ஆரம்பமாகும்.

''உங்க ஸெர்வீஸ் நம் எஸ்டாபிளிஸ்மெண்டிற்கும் ரொம்ப அவசியம்னு நினைக்கிறோம்! ஆபிஸ் செலவிலேயே நீங்க குடியிருக்கிறதற்கு வசதியா ஒரு வீடு பார்த்தாச்சு. அங்கே ஒரு டெலிபோனும் வைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கோம். இனிமேல் நாமெல்லோரும் ஒரே குடும்பம் மாதிரி''–

இப்படி விரிக்கிற வலை – எப்போதும் ஒரே மாதிரித்தான் முடியும். உறவே முறிந்து ஆளைப் பழிவாங்க வேண்டுமென்று அவர்கள் முடிவு செய்ததும், டெலிபோனை அறுப்பார்கள். வீட்டைக் காலி செய்யச் சொல்லி ஏற்பாடாகும். முதல் நாள் வரை காரில் போய்வர ஏற்பாடுகளும் எடுபிடி ஆட்களும் காத்திருந்த நிலையைத் திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் இரத்து செய்து – நாலு பேருக்கு முன் அலட்சியம் செய்வார்கள். தீரனான பத்திரிகையாளன் என்பவன் – தன்னை வேலைவாங்கு

கிற ஆளின் சௌகரிய மயக்கங்களை அறவே புறக்கணித்தா லொழிய இன்று தமிழகத்தில் நிமிர்ந்து நடக்க முடியாது. ஒவ்வொரு பத்திரிகை அலுவலகத்திலும், எழுதும் திறமை, மனச்சாட்சி, மனோதர்மம் – இவை இல்லாத ஆட்கள் பலர் – இவையெல்லாம் உள்ள நல்லவர்களாக அங்கு பணிபுரியும் சிலரைப் பற்றிக் கோள் சொல்லுதல், சிண்டு முடிதல் போன்ற திருப்பணிகளுக்காகவே தொடர்ந்து இருப்பார்கள். வெளிப்பார்வைக்கு இவர்கள் மெய்யெலாம் திருநீறு பூசி வாய்க்குவாய் – பரமஹம்ச விவேகாநந்த சாரங்களை விதந்து பேசிப் பரம அப்பாவிகளாய் – ஆசாரசீலர்களாய் தோற்றுவார்கள். ஆனால் உள்ளமோ நஞ்சுமயமாய் இருக்கும். இவர்களுடைய பக்தி இவர்களுக்கு ஒரு கவசம் அல்லது போர்வை. அசல் வாழ்வில் – உள் அந்தரங்கத்தில் இவர்களின் சிலர் காட்டிக் கொடுக்கிறவர்களாகவும் கூட்டிக் கொடுக்கிறவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் முட்டாள் உலகத்தின் கண்களுக்கு இவர்களுடைய பக்திதான் தெரியுமே தவிர களங்கக் கறைகள் தெரியாது.

பத்திரிகையின் விற்பனையாகாத பழம் பிரதிகளை –ஒரு கணக்கிலும் சேர்க்காமல் நிறுத்து எடை தூக்கி ஆயிரக் கணக்கில் பணம் வாங்கிப் பைக்குள் போடுவதில் கவனமாக இருப்பார் ஒரு டைரக்டர். பைண்டிங்கில் 'கட்' ஆகி விழும் ஜெல்லி காகிதத்தை விற்றுச் சுருட்டுவதில் மும்முரமாக இருப்பார் ஒரு டைரக்டர். முதலாளிகளுக்குக் கால் கை பிடிக்கிற ஆட்கள் கூட சில கம்பெனிகளில் திடீரென்று டைரக்டர்கள் ஆகி இரகசியங்களைக் காப்பாற்றுவதும் உண்டு. இப்படிப்பட்ட சில கம்பெனிகளில் தெரிந்தோ தெரியாமலோ அரசாங்க முதலீடாகிய இன்ஷ்யூரன்ஸ் பங்குகளும் கூட இருக்கும்.

இந்தக் காரியாலயத்திற்கு வேண்டிய ஓர் அரசியல் தலைவர் – மாலை வேளைகளில் வருவார். அவர் வருகிற நேரம் பார்த்து – பெரிய கம்பெனிகளில் பங்குதாரர்களாகிய சில வியாபாரிகளும் அவரைக் காண வருமாறு அழைக்கப்படுவார்கள். இவர்களுடைய சந்திப்பில் (சந்திக்க வைக்கும் ஏற்பாட்டில்) பத்திரிகை முதலாளி பயனடைவார். அரசியல் தலைவர் பெயரைச் சொல்லி 'ஹி யூஸ்டு டு கம் எவ்வரி ஈவினிங்..... இஸ் வெரி ஈகர் டு ஸீயூ '' – என்று அரசியல் தலைவருக்குச் சொல்லப்படும். இந்த இருவர்

சந்திப்பில் பயனடகிறவர் பத்திரிகைக்காரராக இருக்கிற தேசம் இது. திலகரும், பாரதியாரும் பத்திரிகை நடத்திய தேசத்தில் இன்று 'பிம்ப்' வேலை (பரிதாபம் !பரிதாபம் ! வெட்கம் ! வெட்கம் ! ) செய்கிறவன் எல்லாம் இலட்சக்கணக்கில் பத்திரிகை விற்று விடுகிறான்.

சமீபத்தில் சென்னையில் பத்திரிகை – எழுத்துலக ஜாம்பவானாகிய பி.எஸ். ராமையா என்கிற சிறந்த எழுத்தாளரின் மணி விழா நடந்தது. அப்போது அவர் தொடர்ந்து ஓராண்டுக்கு மேல் விடாது சிறு கதைகள் எழுதி வளர்த்த இரண்டு வார இதழ்களின் ஆசிரிய முதலாளிகள் அந்த விழாக் கூட்டத்துக் காவது போனால் போகிறதென்று வந்திருக்கிறார்களா என்று நான் கூர்ந்து கவனித்து ஏமாந்தேன். தமிழ் எழுத்தாளனும், பத்திரிகையாளனும் தன்மேல் விசுவாசமில்லாத அதே சமயத்தில் தான் மட்டும் விச்வாசமாயிருக்க வேண்டுமென்று எதிர்பார்க்கப படுகிற ஒரு முதலைக் கூட்டத்துக்கு உழைப்பதாக அன்று எனக்குத் தோன்றியது. எந்த எழுத்தாளன் பாராட்டப்படுவதிலும் –பத்திரிகை முதலாளிமார்களுக்கு மனப்பூர்வமான சந்தோஷமோ, திருப்தியோ கிடையாது.

சில பத்திரிகை முதலாளிகள் தாங்களும், தங்களுடைய புத்திர பாக்கியங்களும் கிண்டி ரேசுக்கும் போகும் போது எந்த நம்பருள்ள குதிரை ஜெயிக்கும் என்று ஜோஸியம் சொல்லுகிற சோதிடர்களைத் தங்கள் தினசரி இதழில் உதவியாசிரியர்களாக வைத்திருக்கும் விநோத இரகசியம் கூடத் தமிழ்த் திருநாட்டில் இங்கு உண்டு. உத்தியோகம் சோதிடம், நியமனம் உதவியாசிரி யர் வேலை. இன்னும் சில பத்திரிகைகளில் முதலாளிகளுக்கு வேண்டிய "ஸ்நாஃப்'களின் கலியாண போட்டோ, கருமாதி போட்டோ டான்ஸ் அரங்கேற்றம், வெளிநாட்டுப் பயண விவரம் இவற்றைப் போடுவதில் ஒத்துழைப்பவர்கள் தான் ஆசிரியர் குழுவில் இருக்க முடியும். இன்னும் சில பத்திரிகைகளில் முதலாளிமாரின் காதற் கிழத்தியர் அல்லது காமப் பரத்தையர் போல் ஆசிரியர் குழுவிலுள்ளோர் அலைய வேண்டும். முதலாளி தீஷதர்களின் காலில் விழுந்தால் இவர்களும் ஓடி விழ வேண்டும், முதலாளி ஏதாவது ஹோமம் பண்ணி ஊரை ஏய்த்து வேஷம் போட்டால் இவர்களும் போட வேண்டும். மனோதர்மம், புத்தியின் பெருமிதம், பத்திரிகைத் தொழிலுக்கு

வேண்டுமென்று நீங்கள் நினைத்தால் உங்களுக்கு இங்குள்ள நிலை புரியவில்லை என்றுதான் அர்த்தம். இந்தச் சூழ்நிலையை உங்களுக்குச் சொல்லியபின் இனி இங்குள்ள பத்திரிகையாளரின் தராதரம் பற்றியும் – இவர்களுக்குள்ள இடையூறுகள் பற்றியும் – இவர்களில் நல்லவர்களைப் பழிவாங்க முயலும் நயவஞ்சர்கள் பற்றியும் படிப்படியாகக் கூற முடியும். ஒரு வேளை இதிலுள்ள ஊழல்கள் எல்லாம் தமிழ் வாசகர்களுக்கு முன் என்னால் விளக்கப்பட்ட பின்பு இந்த விஷயத்தில் அவர்கள் கண்கள் திறந்து நல்லது கெட்டதைப் பகுத்து உணருவார்களோ என்னவோ?

நான் மிகவும் நயவஞ்சகமாகவும் சூழ்ச்சிக்கு ஆளாகியும் வேலை நீக்கப்பட்டதற்கு ஒரு மாதம் முன்னால், திருச்சியி லிருந்து வெளிவரும் ஒரு மாத இதழில் ''இன்றைய தமிழ் எழுத்தாளனின் அசௌகரியங்கள்' – என்ற தலைப்பிலே துணிவுடன் ஒரு கட்டுரை எழுதியிருந்தேன். என்னை வெளி யேற்றுவதில் –பத்திரிகை முதலாளிகளுடன் ஒத்துழைத்து சகல ஏற்பாடுகளையும் செய்த ஓர் 'எழுத்தாளர் ' – மேற்படி கட்டுரையை எடுத்துப்போய்ச் சில பகுதிகளைக் குறிப்பிட்டுக் காண்பித்து மேலிடத்தார் மனத்தை மாற்றினாராம். வாசக நேயர்களின் வசதிக்காக அந்தத் திருச்சிராப்பள்ளி மாத இதழில் வந்த கட்டுரையைக் கீழே அப்படியே தருகிறேன்.

''இன்றைய தமிழ் எழுத்தாளனின் சௌசகரியங்கள்' அல்லது 'சௌகரியக் குறைவுகள்' என்று அமைத்திருக்கக் கூடாதா? என்பதாக இதைப் படிக்கிறவர்களுக்கு ஒருகேள்வி கேட்கத் தோன்றும். கேட்கத் தோன்றுவது நியாயமாயிருக்க லாமே ஒழிய அப்படிக் கேட்பது நியாயமாயிருக்க ம்டியாது. 'சௌகரியங்கள்' – என்று தலைப்பில் வந்திருந்தால் இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு ஏதோ சௌகரியங்கள் இருப்பதாக நாமே ஒப்புக் கொண்டு விட்டாற் போலத் தோன்றும். 'சௌகரியக் குறைவுகள்'– என்று தலைப்பில் வந்திருந்தாலோ இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு சில சௌகரியங்களோடு சில குறைகளும் இருக்கின்றன எனத் தோன்றும். அசௌகரியங்கள் மட்டுமே நிறைய இருப்பதாகச் சொல்ல விரும்புகிற இந்தக் கட்டுரையின் நோக்கத்துக்குப் பழுது வராத வண்ணம் மேற்படி தலைப்பையே தேர்ந்தெடுக்க நேர்ந்தது. தொல்காப்பி யரும், திருவள்ளுவரும், கம்பரும் இலக்கிய இலக்கணங்களைப் படைத்த காலத்தில்,

இத்தனை விதமான காப்பிரைட், ராயல்டி, தொந்தரவுகளும், அபிப்ராய பேதங்களும், அவர்களைப் பாதித்திருக்க நியாயமில்லை. அவர்களுடைய அமர இலக்கண இலக்கியங்கள் –அவர்களே எழுதிய – அல்லது அவர்களுடைய அருமை மாணாக்கர்கள் – எழுதிய ஏட்டுச்சுவடிகளிலிருந்து பிரதி செய்து கொள்ளப்பட்டோ – மனனம் செய்யப்பட்டோ பரவின. இன்றைய இலக்கிய கர்த்தாவோ தன் படைப்பை ஓராயிரம் பிரதிகள் அச்சிடுவதற்குத் தகுந்த பதிப்பாளரைத் தேடுவதிலிருந்து ஒவ்வொரு முயற்சியிலும் படிப்படியான சிரமங்களை அடைய வேண்டியவனாகி இருக்கிறான். தான் எந்த தமிழ் மொழியில் எழுதுகிறானோ, அதே தமிழைத் தாய் மொழியாக வுடைய படிப்பறிவுள்ள மக்கள் ஆங்கிலப் புத்தகங்களில் மோகங் கொண்டு –தமிழ் வெளியீடுகளையும், புத்தகங்களையும் புறக்கணிப்பதையும், அலட்சியப்படுத்து வதையும் பார்த்துச் சகித்துக் கொள்வதுடன் அதை ஓரளவு மன்னிக்க வேண்டிய தர்மசங்கடமான நிலைமையும் இன்றைய தமிழ் எழுத்தாளனுக்கு இருக்கிறது.

இன்றைய தமிழ் எழுத்தாளனின் அசௌகரியங்கள் மூன்று கோணங்களில் அவனை நோக்கி வருகின்றன. முதலாவது பத்திரிகைகளிலும் இரண்டாவது வெளியீடுகளிலும் அவன் அடைகிற அசௌகரியங்கள். மூன்றாவதுஇந்த நூற்றாண்டின் ஐசுவரிய மோகினியும் ஜனரஞ்சக ராணியுமாகிய சினிமாச் சிங்காரியினால் அவன் அடைகிற அவமானங்கள். 'இந்த மூன்று துறைகளிலிருந்தும் தமிழ் எழுத்தாளன் ஏதாவது சில சௌகரியங்களையும் அடையலாமல்லவா?' என்று நீங்கள் கேட்க நினைப்பீர்கள். ஆனால் இந்த மூன்று துறையிலிருந்தும் ஒரு தமிழ் எழுத்தாளன் அடைகிற சௌகரியங்களைக் காட்டிலும் அசௌகரியங்களே அதிகமாகவும், கடுமையாகவும் இருப்பதால், சௌகரியங்களை ஒரு பொருட்டாக மதித்துக் கணிக்க வழியில்லாமல் போகிறது.

ஏறத்தாழ மூன்றரைக் கோடி அல்லது நாலரைக்கோடி எண்ணிக்கையுள்ள தமிழர்கள் பர்மா, மலாயா, இலங்கை, தென்னாப்பிரிக்கா உள்பட பல இடங்களில் பரவிக் கிடக்கிறார்கள். ஆயினும், ஓர் தமிழ் எழுத்தாளனின் இலாப நஷ்டக் கண்ணோட்டத்துடனே பார்த்தால் – இந்த நாலரைக்கோடி

மக்களடங்கிய மொழி சிறுபான்மையினர் பேசும் சிறுபான்மை வசதிகளடங்கிய சிறிய மொழியாகவே தோன்றுகிறதெனலாம்.

தமிழினத்தைச் சேர்ந்த – உயர் வர்க்கத்தாரும், உயர் மத்தியதர வர்க்கத்தாரும் தங்கள் வீட்டிலுள்ள சமையற்காரர்கள், கார் டிரைவர், வேலைக்காரர்கள் படிப்பதற்காகத்தான் தமிழ்ப் பத்திரிகைகளையும், வெளியீடுகளையும், உள்ளே நுழைய விடுகிற பாவத்தைச் செய்ய வேண்டியிருக்கிறதென்று நினைக்கிறார்கள். தாய்மொழி, தாய் மொழிப் பத்திரிகைகள் தாய் மொழி எழுத்தாளர்கள், தாய்மொழி இலக்கியம் –என்கிற கோணத்தில் இந்த உயர் வர்க்கத்தாரிடமும், உயர் மத்திய தர வர்க்கத்தாரிடமும், தேசிய உணர்ச்சி, சுயாபிமானம், எல்லாம் பூஜ்யமாகவே இருக்கிறது. மில் தொழிலாளி முனிசாமிக்கும், அட்டெண்டர் அங்கப்பனுக்கும், புதுமைப்பித்தனைப் பற்றியோ, திரு.வி.க.வைப் பற்றியோ தெரிந்திருக்கும். அதே சமயத்தில் அரங்கநாதன் ஐ.ஸி.எஸ்.ஸுக்கும், மானேஜிங் டைரக்டர் மார்க்கசாயத்துக்கும் ஆங்கில பாஷையின் அடி மட்டத்திலிருக்கும் ஏழாந்தர, எட்டாந்தர ஆசிரியனைக் கூடத் தெரிந்திருக்குமே ஒழியச் சுய பாஷையின் முதல்தரமான ஓரிரு ஆசிரியர்களின் பெயர்கள் கூடத் தெரிந்திருக்காது. இந்த நிலை கடந்த பத்தாண்டுகளில் ஓரளவு மாறியிருக்கிறது என்றாலும் இன்னும் நன்றாக இன்னும் விரும்பத்தக்க விதத்திலே மாறி வளர வேண்டும்.

சொந்த பாஷையில் நன்றாகப் பேசத் தெரியாமலும் அரைகுறைகளாக இருப்பதையே இன்னும் கௌரவமாகக் கொண்டாடிக் கொள்கிற 'பெரிய மனுஷாள்' இங்கே இருக்கிறார்கள். தேவன், கல்கி கிருஷ்ணமூர்த்தி, கி.வா.ஜ.போல் எழுத்தாண்மையும், தகுதியுமுள்ளவர்கள், ஆசிரிய பீடத்தில் அமர்ந்து செங்கோல் நடத்திய காலம் போக, இரண்டொரு வாக்கியங்கள் கூட எழுதத் தெரியாத – பத்திரிகை முதலாளிகளே – சௌகரியத்துக்காவும், கௌரவத்துக்காவும் – ஆசிரியராகிற அல்லது அந்த முதலாளிமார்களின் பிள்ளைகளோ, மாப்பிள்ளைகளோ, மைத்துனர்களோ அந்தப் பதவிக்கு வாரிசாக்கப்படுகிற பரிதாபகரமான நிலை இங்கே இருப்பதைக் காண்கிறோம்.

இதனால் இலக்கிய வர்க்கம் என்கிற ஒரு வலிமைவாய்ந்த இனம் உருவாகாமல் தனித்தனியாக சிதறிக்கிடக்கிற தமிழ் எழுத்தாளர்களின் சக்தியும் திறமையும் வீணாகிறது.

அவர்களுடைய உழைப்பும், திறமையும் மிகவும் மலிவான விலைக்கு வாங்கப்படுகின்றன. இன்ன எழுத்தாளர் எழுதுவதனால் இந்தப் பத்திரிகை விற்கிறது – இன்ன எழுத்தாளர் எழுதுவதனால் இந்தப் பத்திரிகைக்கு மதிப்பு என்று எழுத்தாளர்கள் பத்திரிகைக்கு 'குட் வில்' சம்பாதித்துக் கொடுக்கிற நிலை வர வேண்டும். அப்படி நிலை இருந்தாலும் தமிழ்ப் பத்திரிகை முதலாளிகள் அதை மறைத்துவிட முயல்வார்கள்.

எம்.ஜி.ஆர். மாறு வேடங்களில் நடித்த எட்டுப் படங்கள் யாவை? சிவாஜி கணேசன் சீறிக் கொதித்து வசனம் பேசிய செந்தமிழ்த் திரை ஓவியங்கள் என்னென்ன...'' என்று நேயர்களின் சினிமா ஞானத்துக்குக் கேள்வி போட்டு – எண்பதாம் பக்கத்தில் விடை தலைகீழாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதாய்ப் பெருமைப் படுகிற ஒரு பத்திரிகையும், ஆட்டுக்குட்டி, கோழி, குயில், மயில், கழுதை, குதிரை எருமை இவைகளைப்பற்றி எந்தெந்தத் தமிழ்த் திரைப்படத்தில் பாடல்கள் வருகின்றன என்ற மாபெரும் உண்மையை ஆராய்ந்து தொகுத்து வாசகர்களுக்கு அளித்து திரைத் துணுக்கு நல்கும் ஒரு செந்தமிழ் ஏடும், பாதாம் அல்வா, டீ, சுண்டல், முறுக்கு இவைகளை விற்பதாக எந்தெந்த நடிகர்கள் எந்தெந்தப் படத்தில் வேஷம் போட்டிருக்கிறார்கள் என்ற பேருண்மையைக் கண்டுபிடித்து சொல்லும் ஒரு பத்திரிகையுமாக, சினிமாவுக்கு 'மாலிஷ்' போடும் கைங்கரியத்தில் இறங்கியிருக்கும் தமிழ்ப் பத்திரிகைகளை இப்போது அதிகமாகப் பார்க்கிறோம். உண்மைக் கதை என்ற பெயரிலும் பல ஆங்கிலக் குப்பைகளை அப்படியே மொழிபெயர்த்துத் தள்ளுகிறார்கள். பத்திரிகை எந்த பாஷையில் வெளிவருகிறதோ அந்த பாஷையிலேயே சுயமாகக் கதை எழுதுகிறவர்களும், இலக்கிய விற்பன்னர்களும் நிறைந்திருக்கும் போது முழுக்க முழுக்க ஆங்கிலத்திலிருந்தோ, இந்தியிலிருந்தோ என்பது போல் அறிவிக்கும் பாணியில் அது மூலத்திலிருந்து மொழி பெயர்த்தது தான் என்பதை ஒத்த வாக்கியமொன்றை அந்தக் கட்டுரையின் முகப்பில் சேர்த்திருப்பார்கள். மைனாரிட்டி மொழியினருக்குள்ள தாழ்வு மனப்பான்மைக்கும் மெஜாரிட்டி மொழியினருக்குள்ள உயர்வு மனப்பான்மைக்கும் எத்தனை வித்தியாசம் பாருங்கள்!

உயரிய எழுத்துத் திறமையும் இலக்கிய கம்பீர்யமும் உள்ள இடத்தில் வசதிக் குறைவும் போதிய பொருள் வளமின்மையும், வசதியும் போதிய பொருள் வளமும் உள்ள இடத்தில் தகுதி அறியாமையுமாக இருக்கிறது நிலைமை. பத்திரிகைகள் நாவலுக்குப் பத்தாயிரம், சிறுகதைக்கு ஐயாயிரம், நாடகத்துக்கு நாற்பதாயிரம் என்று அறிவிக்கும் இலக்கியப் போட்டிகள் எல்லாம் படாடோபமாகவும், எழுத்தாளனை அவமானப் படுத்துவனவாகும் உள்ளன. போட்டி முடிவுகளிலும், பரிசுத் தேர்வுகளிலும் பட்சபாதகமான நீதிபதிகளின் தீர்ப்புகள் வெளியாகின்றன. எழுத்தாளர்கள் இனத்தின் இலக்கிய கௌரவத்தை காப்பாற்றும் விளைவுகள் பெரும்பாலும் இந்தப் போட்டிகளால் ஏற்படக் காணோம்.

பத்திரிகைகளில் தமிழ் எழுத்தாளனின் எழுத்துச் சுதந்திரத்திற்கும் குறைவான இடம் தான் உண்டு. கதாநாயகன் சிகரேட் பிடிப்பதாகவோ, அல்லது மது அருந்துவதாகவோ, ஒரு பெண்ணிடம் முறைதவறி நடக்க முயன்றதாகவோ – ஒரு கதையில் கற்பனை செய்தால் – ''வரவர இந்த ஆள் ரொம்ப 'சீப்' ஆக எழுதத் தொடங்கி விட்டான்.'' – என்று நினைக்கிற மனப்பான்மை சிலரிடம் இருக்கிறது. கண்முன்னால் நாம் காண்கிற யதார்த்த வாழ்க்கையிலே, புகை பிடிக்கிறவன், யாருக்கும் தெரியாமலே திருட்டுத்தனமாக மது அருந்துகிறவன், மனைவியை அடித்து நொறுக்கிற முரட்டுக் கணவன், கணவனை அடிக்கிற ராட்சஸ மனைவி, விபச்சாரம் செய்கிற ஆண்மகன், அதே காரியத்தைச் செய்கிற பெண் மகள் எல்லாம் தான் இருக்கிறார்கள். இவர்களது குணங்கள் அல்லது அதிகுணங்கள் – இலக்கியத்தில் ஓரளவு இடம் பெறுவது எப்படித் தவறாகும்... மனித வாழ்க்கையின் ஒவ்வொரு கோணத்திலும் உள்ள மறைமுகமான யதார்த்த உண்மைகளைக் கூட எழுத்துக்கு விஷயமாகத் தேடும் சௌகரியமும், உரிமையும், அமெரிக்கா விலும், ருஷ்யாவிலும், பிரிட்டனிலும், பிரான்ஸிலும் உள்ள எழுத்தாளனுக்கு இருக்கின்றன. தமிழ் எழுத்தாளனுக்கு அத்தனை சுதந்திரம் ஏற்பட்டு விடவில்லை என்றாலும் அவசியமான சில சின்னஞ்சிறு உரிமைகள் கூடக் கிடைக்க வில்லை. அசட்டுத்தனமான ஒரே வகைத் தியாகங்கள் கல்யாண மாப்பிள்ளைத் தகராறுகள் முக்கோணக் காதல்கள் காலேஜ்

காதல்கள் ஏழ்மைத் துன்பங்கள் திரும்பத் திரும்ப மெரினா கடற்கரையைச் சுற்றிவரும் தொடர்கதைகள் - இவைகளோடு தமிழ் எழுத்தாளன் அடங்கி விடலாமா?

புத்தகப் பதிப்பும் விற்பனையும்

புத்தகப் பதிப்பையும் அதன் விற்பனையையும் பொறுத்த வரை ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு என்னென்ன அசௌகரியங்கள் இருக்கின்றன என்பதை இனிமேல் கவனிக்கலாம். மாதக் கணக்கில் உறக்கம் விழித்து இராப்பகலாக உழைத்து உருவாக்கிய ஒரு நாவலை அல்லது ஆராய்ச்சி நூலை – எந்தப் பத்திரிகையிலும் தொடர்ந்து வெளியிடாமல் நேரடியாக அப்படியே புத்தகப் பதிப்பிற்குக் கொடுத்துப் புத்தக இலாபமும் பயனும் அடைகிற சௌகரியம், மில்லியன் கணக்கில் புத்தக விற்பனை நடக்கிற அமெரிக்க ஐரோப்பிய நாடுகளிலுள்ள ஓர் எழுத்தாளனுக்கு உண்டு. தமிழ் எழுத்தாளன் ஒரு சிறந்த நாவலை உருவாக்குவதற்குப் படுகிற சிரமமும் உழைக்கிற உழைப்பும், அந்த நாவல் பத்திரிகையில் தொடராக வெளி வந்து, அதன் மூலம் கிடைக்கிற ஊதியத்தால் நிவர்த்தியாகாததுடன் அதே நாவல் புத்தக வடிவில் பதிக்கப்பட்டுக் கிடைக்கிற ஊதியத்தினாலும் கூட கிடைப்பதில்லை. வெளியிடுகிறவரைதான் அந்தச் சாமர்த்தியம் எல்லாம். விற்பனைத் திறன் அதாவது 'மார்க்கெட்டிங் எபிலிடி' வேறு வகையானது. ஓடியாடி அலைந்து லைப்ரரி ஆர்டர்களையும் பள்ளிக்கூட ஆர்டர்களையும் வாங்குவதற்குப் பாடுபட்டுக் கொண்டிருந்தால் எழுதும் திறனும் சிந்தனை ஆற்றலும் குன்றும். எனவே கற்பனா சக்தியும் சிருஷ்டித்திறனும் உள்ளவனான எழுத்தாளன் ஒருவன் தன்னுடைய புத்தகத்தைத் தானே வெளியிடும் சிரமத்தையும் அதன் அபரிமிதமான இலாபத்தையும் சேர்த்தே ஒரு பதிப்பாளரிடம் விட்டு விட வேண்டியிருக்கிறது. பதிப்பாளர் முதற்பதிப்பு ஆயிரம் பிரதிகள் – மூன்றாம் பிரதிகள் அதே ஆயிரம் பிரதிகள் – என்று சம்பிரதாயமாகச் சொல்கிற அந்த ஆயிரம் பிரதி உண்மைக்கே எழுத்தாளன் தன்னைத் தியாகம் செய்தாக வேண்டியிருக்கிறது. எவ்வளவு வேகமாகவும், சுறுசுறப்பாகவும், விற்றாலும் அந்த ஆயிரம் பிரதிகளும் விற்று முடியக் குறைந்தபட்சம் ஒரு வருஷத்திலிருந்து ஒன்றே கால் வருஷம் வரை ஆகிறது. அப்படி விற்கிற விற்பனைத் தொகையிலிருந்து எழுத்தாளனுக்குக் கிடைக்கிற பகுதியைக் கூட்டிக்

கழித்து ஈவு வைத்தால் பன்னிரண்டு மாதம் அல்லது பதினைந்து மாதம் ஓர் எழுத்தாளன் சுமாராக வாழ்க்கை நடத்துவதற்குக் கூடப் போதுமான தொகையாக அது இராது.

ஏழை இனமாகிய எழுத்தாளர் இனத்தின் இந்தப் புத்தக வெளியீட்டுத் தொழிலுக்கும், விற்பனைக்கும் கூட இப்போது வேறு ஒரு விதமான போட்டி முளைத்திருக்கிறது. இந்தத் துறைக்குச் சிறிதும் தொடர்பில்லாத அரசியல் செல்வாக்கும் சந்தர்ப்ப சூழ்ச்சிகளும் இப்போது இதனுள்ளும் ஓரளவு புகுந்திருக்கின்றன. பல பொதுக் கூட்டங்களிலும், திறப்பு விழாக்களிலும், முன் தயாரிப்பில்லாமலும், கருத்துச் செறிவில்லாமலும் தங்களுக்குத் தோன்றுகிறபடி மந்திரிகளும், பிரமுகர்களும் பேசுகிற பேச்சுக்களைக் குறிப்பெடுத்துக் கட்டுரை போலாக்கி அவற்றையும் புத்தகமாகத் தொகுத்து அந்த மந்திரிகள் பேரிலும், பிரமுகர்கள் பேரிலும் விலை வைத்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள். சிருஷ்டித் திறன் ஒன்றையே பலமாக வைத்துக்கொண்டு இலக்கியம் படைத்து வைத்திருக்கிற எழுத்தாளனின் புத்தகமும், மந்திரியின் பேரோடும், பிரமுகரின் பேரோடும் செல்வாக்கைப் பலமாகக் கொண்டு வெளியாகிற புத்தகமும் போட்டியிட்டால் லைப்ரரிக்காரர்கள் முதலிய எல்லாரும் மந்திரி பேரில் வந்திருக்கிற புத்தகத்தைத்தான் முதலில் வாங்கப் பார்ப்பார்கள்.

அரை ரூபாய் விலையுள்ள புத்தகத்துக்கு ஆயிரம் ரூபாய் செலவழித்து வெளியீட்டு விழா வைப்பதன் மூலம் செல்வாக்கைத் தேடுகிறார்கள். 'பெர்ரி மாஸானும்', 'ஏர்ல் ஸ்டான்லி கார்டினரும்' கூடக் கடல் கடந்து வந்து இரண்டொரு மாதங்களில் ஆயிரமும் - இரண்டாயிரமுமாகப் பிரதிகள் செலவழிக்கிற இந்த தமிழ்நாட்டில் - சுய பாஷையில் வெளியாகிற முதல் தரமான புத்தகம் கூட ஆயிரம் பிரரதி விற்றதென்ற கௌரவத்தை அடையப் பல மாதங்கள் அல்லது சில வருடங்கள் ஆகின்றன. புத்தகங்களை மதித்துப் பரிசுகள் வழங்குகிற மாநில மத்திய அரசாங்கங்களின் அமைப்புகளில் கூட ஒரு தலைப்பட்சமான தேர்வுகளும் அரசியல் அந்த ரங்கத்தைச் சேர்ந்த செல்வாக்குகளும் புகுந்து வேலை செய் வதாகச் சொல்லப்படுகிறது. ஐம்பது மில்லியன் பிரதிகள், நூறு மில்லியன் பிரதிகள் என்று பிரமிக்கத்தக்க விதத்திலே பிரதிகள்

விற்பனையாகிற அகில உலக எழுத்தாளனின் நடுவில் வைத்துப் பார்க்கிற போது ஆயிரம் பிரதிகள் முக்கால் வருடத்திலும், முழு வருடத்திலுமாகத் தீர்கிற தமிழ் எழுத்தாளனின் இடம் மிகமிகச் சிறியது. ஆனாலும் இந்தச் சிறிய இடத்தில் கூடத் தமிழ் எழுத்தாளன் அடைகிற அசெளகரியங்கள் அதிகம்.

ஆயிரம் பிரதிகள் ஒரு வருடத்தில் விற்றாலும் – அப்படி விற்ற பிரதிகளில் எழுத்தாளருக்குச் சேரவேண்டிய ஊதியப் பகுதி வந்து சேர அதற்கப்புறமும் மூன்று வருடங்கள் பிடிக்கும். அப்படி வந்தாலும் முழுத் தொகையாகவோ, முழுப்பகுதியாகவோ கிடைக்காது. முதற் பதிப்புத் தீர்ந்தபின் முறையான முன்னறிவிப்போடு – இரண்டாம் பதிப்பு உரிய காலத்தில் வெளிவராது. பல நல்ல புத்தகங்கள் முதற்பதிப்போடு நின்று போவதும் உண்டு. சில புத்தகங்கள் முதற்பதிப்பு ஒரு பெயரிலும், இரண்டாம் பதிப்பு வேறொரு பெயரிலுமாக வெளிவந்து வாசகர்களை மருட்டும். சாதாரண மக்களின் கைக்கெட்ட முடியாத உயரத்துக்கு விலை வைக்கப்பட்டிருப்பதும் தமிழ்ப் புத்தகங்களின் குணாதிசயங்களில் ஒன்று. ஒரு வேளை விலை குறைவாக வைக்கப்பட்டால் கூடுதலான பிரதிகள் விற்பனையாகலாமோ என்னவோ? இப்படிச் சில காரணங் களாலே ஒரு தமிழ் எழுத்தாளன் வாழ்க்கைக்கு நிரந்தரமான வருவாயைத் தரும் மார்க்கமாகப் புத்தகப் பதிப்பையும் நம்புவதற்கில்லை.

தன் புத்தகத்தைப் பதிப்பிப்பதைவிட எந்தப் புத்தகத்தையாவது வியாபாரம் செய்தாலோ, கடை விரித்தாலோ கூட ஒரு தமிழ் எழுத்தாளனுக்கு அது இலாபகரமான தொழிலாயிருக்கும் போல் கப்பலில் தெரிகிறது. வந்து ஹார்பரில் இறங்கும் பத்து ஆங்கில நாவல்களை வாங்கிக் கடை விரித்தால் கிடைக்கிற கமிஷன் கூடச் சொந்தப் புத்தகத்தின் ராயல்டியை விடக்கூட இருக்கலாமென்று ஒரு தமிழ் எழுத்தாளன் உறுதியாக நம்பலாம். ஒரு மைனாரிட்டி மொழியில் – அகில உலகக் கணோட்டத்தில் மிகச் சிறியதாகிய தமிழைப் போன்றதொரு மைனாரிட்டி மொழியில் எழுத்தாளனாயிருக்கிறவனுக்குப் புத்தகப் பதிப்பிலும் விற்பனையிலும் கூட இத்தனை அசெளகரியங்கள் உள்ளன. இனிமேல் திரைப்படத் துறையைப் பற்றிக் கவனிக்கலாம்.

வடக்கே ஓடிச்சலித்து 'ஸெகண்ட் – ஹாண்ட்' ஆகிப்போன வங்காளிக் கதைகளும், இந்திக் கதைகளும், மராத்திக் கதைகளும் தமிழில் படம் எடுப்பதற்காக விலைக்கு வாங்கிக் கொண்டு வரப்படுவது மரபாகி விட்டதனால் –தமிழிலேயே சுயமாகப் பிறந்து தமிழிலேயே மூச்சுவிட்டுக் கொண்டிருக்கிற சுயபாஷைக் கதைகள் திரைப்படத்திற்கு லாயக்கில்லை என்று 'பிரஷ்டம்' செய்யப்பட்டாயிற்று. அதே சமயத்தில் சுய பாஷையில் வெளியாகின்ற நாவல்கள், சிறு கதைகள், தொடர்கதைகளி லிருந்து ஐடியாக்கள், வசனங்கள், உணர்ச்சிகரமான கட்டங்கள், முடிவுகள் ஆகியவற்றைத் திருடிப் புகுத்திக் கொள்கிற காரியத்தைச் சில திரைப்பட வசனகர்த்தாக்கள் கூசாமல் செய்து கொண்டிருக்கிறார்கள். 'காப்பிரைட்' சட்டமோ மயிரிழை அளவுதான் எழுத்தாளனின் உரிமையைக் காப்பாற்றுகிறது. எப்படித் திருடினால், 'காப்பிரைட் கேஸ்' வராது என்கிற விஷயத்தை முன் கூட்டியே தேர்ந்த வக்கீல் ஒருவரிடம் கலந்தாலோசித்துக் கொண்டுதான் அப்புறம் கதை திருடுகிறவர் களும் திருடுகிறார்கள்.

''ஸிங்கிள் ஐடியா ஒரே மாதிரி இருக்கறத்துக்காகக் கேஸ் ஒன்றும் போடறதுக்கில்லே. வேறே ஏதாவது உங்க கதையிலே ருந்து திருடிருக்கானான்னு சொல்லுங்க'' என்று பாதிக்கப்பட்ட எழுத்தாளனை வக்கீல் கேட்கும்போது, ''இந்தப் பாழாய்ப்போன காப்பிரைட் ஆக்ட்'' இத்தனை பலவீனமாகவா இருக்கிறது?'' என்று எழுத்தாளன் மனம் நைந்து போவதைத் தவிர வேறு வழியில்லை.

கதை திருடுகிற கயவர் – திரைக்கதை வசனம் டைரக்ஷன்– என்கிற பெயருடன் 'காடிலாக்' காரில் சவாரி செய்து கொண்டிருக்க... அவனுக்குத் திருட்டுக் கொடுத்த எழுத்தாளன் விசுக்கு விசுக்கென்று கால் நோக வக்கீல் வீட்டுக்கு நடைபோட வேண்டியிருக்கிறது. திரை நடிகர்களுக்குக் கருப்புப் பணம் இரண்டு லட்சமும் வெள்ளைப் பணம் இரண்டு லட்சமுமாக வாரிவாரிக் கொடுக்கிற தமிழ்ப் படாதிபதிகள் தப்பித்தவறி ஓர் எழுத்தாளனிடம் திரைப்படத்துக்குக் கதை கேட்க வந்து விட்டாலோ, அறுநூறு, எழுநூறு பக்கமுள்ள ஒரு முழுக் கதையை – இருநூற்றைம்பது ரூபாய்க்கோ முந்நூறு ரூபாய்க்கோ –பேரம் பேசுகிறார்கள். ஹிந்திப் படத்திலிருந்து 'டப்' செய்கிற

கதைக்குக் கூட -வெறும் கதை உரிமைக்காக மட்டுமே இருபத்தையாயிரம் முப்பதாயிரம் கொடுக்கிற படாதிபதிகள் - இரவு பகலாக உறக்கம் விழித்து எழுதிய ஒரு நாவலை ஒரு நூறுக்கும், முந்நூற்றுக்கும் எப்படித்தான் கூசாமல் கேட்கிறார்களோ? ஆகவே அற்புதமாகவும், மிக வேகமாகவும் வளர்ந்திருக்கிற தமிழ் சினிமா உலகிலும் சுயபாஷையின் இரண்டொரு முதல் தரமான எழுத்தாளர்களுக்குக் கூடச் சௌகரியமோ, இலாபமோ விளையவில்லை. அப்படி அல்லாமல் ஒரிரு ஏற்பாடுகள் நியாயமாக முடிந்தாலும் கூடத் திரைப்படத்திலோ, அதன் விளம்பரங்களிலோ, 'இன்னார் எழுதிய இன்ன நாவலிருந்து இந்தப் படம் தயாரிக்கப் பட்டதென்று மூலக் கதையின் பெயரும் மூலக் கதாசிரியனின் பெயரும் விளம்பரப்படுத்தப்பெறாமலேயே இருட்டடிப்புச் செய்யப்படுகின்றன.

கதைகளையும் ஐடியாக்களையும் திருடுவதில் தேர்ச்சி பெற்று விட்ட ஓர் திரைக்கதை வசனகர்த்தாவின் சமீபத் தயாரிப்பாகிய படம் ஒன்று ஐந்நூறு தமிழ் எழுத்தாளர்களின் சிறுகதையிலிருந்தும், தொடர் கதைகளிலிருந்தும், நாவலி லிருந்தும், கொஞ்சம் கொஞ்சமாகத் திருடி ஒட்டுப்போட்ட கதையாக இருந்த காரணத்தால்- அந்த ஐந்நூறு பேரும் தனித்தனியாக மேற்படியாருக்கு நோட்டீஸ் விட்டிருக் கிறார்கள். ''இந்த மூலக்கதை நான் எழுதினதே இல்லை. நாலு வருஷத்துக்கு முன்னாடி... வன்னு ஒருத்தர் அவசரத்துக்கு எங்கிட்டக் கொஞ்சம் பணம் வாங்கிட்டு தந்த ஒரு கத்தை ஸ்கிரிப்டைத் திருத்தி ஒழுங்கு பண்ணி இந்தப் படமா எடுத்திருக்கேன். என் மேலே தப்புச்சொல்றத்துக்கு ஒண்ணுமே இல்லீங்க''-என்று எதிலிருந்தும் திருடாமல் சொந்தமாகத் தயார் செய்த ஒரு சரட்டை விட்டு நோட்டீஸ் விட்டிருக்கிற ஐந்நூறு பேரையும் சமாளித்துப் புளுகிக் கொண்டிருக்கிறாராம். அந்தத் திரைக் கதை +வசனம் + தயாரிப்பு + டைரக்ஷன் + தயாரிப்பு + ஆளர். தமிழ் எழுத்தாளர்கள் இந்த விதமாகத் திரைப்படத் துறையிலும் அசௌகரியங்களையே அடைகிறார்கள். இதைத் தவிர இலக்கிய வளமும், கதாபாத்திரங்களை அமைப்பதில் தேர்ச்சியும் உள்ள தமிழ் எழுத்துலக ஜாம்பவான்கள் கூடத் திரைப்படத் தயாரிப்பாளர்களால் அவமானப்படுத்தப் படுகிறார்கள்.

''எங்களுக்கு இலக்கியமும் வேண்டாம்! வெங்காயமும் வேண்டாம். 'பாக்ஸ் ஆஃபீஸ்' ஹிட்! ஆகிற மாதிரி ஒரு படத்தைத் தயாரிக்கணும். அதுக்கத் தகுந்த மாதிரி யார் எழுதறானோ, அவனை வச்சு எங்க காரியத்தை நாங்க முடிச்சுக்குவோம்' – என்று வறட்டுக் கர்வம் பேசுகிற படாதிபதிகளைப் பார்த்துத் தமிழ் எழுத்தாளனின் ஏழை இதயம் நீண்ட நாட்களாகக் கொதிப்படைந்து போயிருக்கிறது. பத்திரிகை வெளியீடுகளிலும், புத்தகப்பதிப்பு விற்பனையிலும், திரைப்படத் துறையிலும் அடைகிற அசௌகரியங்களை விடச் சொந்தமாகவே தமிழ் எழுத்தாளனுக்கு ஓர் அசௌகரியமும் உண்டு. அதுதான் ஒற்றுமையின்மை,எந்த ஒரு தமிழ் எழுத்தாளனும் தான் கஷ்டப்படுகிற போதுகூடத் தன்னோடு ஃபீல்டில் இருக்கிற சக எழுத்தாளனின் அனுதாபத்தையோ, ஆதரவையோ பெற முடிவதில்லை. அவ்வளவேன்? 'தார்மீக ஆதரவு' என்று சொல்லப்படுவது கூட ஒரு தமிழ் எழுத்தாளனிட மிருந்து மற்றொரு தமிழ் எழுத்தாளனுக்குக் கிடைக்குமென்று உறுதியாகவோ நம்பகமாகவோ சொல்லிவிட முடியாதபடி இருக்கிறது இன்றைய நிலைமை. எல்லா அசௌகரியங்களை யும் விடப் பெரிய அசௌகரியம் இது ஒன்றுதான் என்று நினைக்கிறேன் நான்.

சங்கங்களும், மன்றங்களும் மாநாடுகளும், கருத்தரங்கு களும் ஒன்று கூடுகிறபோது, ஃபிஸிகலாக ஒரே மேடையில் சேர்ந்து பேசியும், சேர்ந்து உட்கார்ந்தும், சேர்ந்து உணவருந்தியும் ஒருமைப்பாட்டைக் கடைப்பிடித்தது போலக் காண்பித்து விட்டாலும் தமிழ் எழுத்தாளர்களுக்குள்ளே, தேவைக்கு அதிகமான அபிப்ராய பேதங்களும், போட்டி பொறாமைகளும் நிறைந்திருக்கின்றன என்பதை நாசூக்காக மறைத்து விடு வதற்கோ, மழுப்பி விடுவதற்கோ இல்லை.

எல்லா மொழி எழுத்தாளர்களுக்கு உள்ளேயும் இப்படி அபிப்ராய பேதங்களும் போட்டி பொறாமைகளும் இருக்கின்ற னவே! தமிழ் எழுத்தாளர்களுக்குள் இருப்பதும் இயல்புதானே? என்று நீங்கள் கேட்கலாம். பாதிக்கிற அபிப்ராய பேதங்கள், பாதிக்காத அபிப்ராய பேதங்கள் – என்று இரண்டுவிதம் உண்டு. தமிழ் எழுத்தாளர்களுக்குள் இருக்கிற அபிப்ராய பேதங்களோ தனித்தனியாக ஒவ்வொரு வரையும், மொத்தமாகப் பலரையும் இலக்கிய வாழ்வில் பாதிக்கிற அபிப்ராய பேதங்களாகவே

இருக்கின்றன. அதனால்தான் இந்த அபிப்ராய பேதமும் தமிழ் எழுத்தாளனின் மிகப் பெரிய அசௌகரியங்களில் ஒன்று என்பதாகக் குறிப்பிட்டேன்.

மேலே கண்ட கட்டுரையைத் திருச்சிராப்பள்ளியிலிருந்து எழுத்தாளர்களுக்காகவே வெளிவரும் மாத இதழான 'எழுத்தாள'னில் – 1965 ம் ஆண்டு பொங்கல் மலரில் நான் எழுதியிருந்தேன். நான் சார்ந்திருந்த பத்திரிகை நிறுவனத்தையும், பிற தமிழ்ப் பத்திரிகை முதலாளிகளின் ஊழல்களையும் ஓரளவு இந்தக் கட்டுரையில் வெட்ட வெளிச்சமாக்கியிருப்பதால் இதை வெளியிடுவதின் மூலம் 'என் சொந்த வாழ்க்கை பாதிக்கப் படுமோ' என முன்பாகவே எண்ணித் தயங்கவோ, பயப்படவோ செய்யாமல் –துணிவாக என் சொந்தப் பெயரில், 'நான் தான் எழுதியிருக்கிறேன் என்று' தெளிவாக இன்னொருவருக்குத் தெரியும்படியே எழுதியிருந்தேன் நான். பத்திரிகை அலுவலக நிர்வாகங்களில் நான் கண்ட ஊழல்களைத் தெரிவிப்பதிலோ, ஊரறிய வெளியிடுவதிலோ, எனக்குப் பயம் எதுவும் கிடையாது என்று என்னைச் சுற்றியிருக்கிறவர்களுக்கு வலியுறுத்தவே நான் மேற்படி கட்டுரையை எழுதினேன். வேலையைப் பற்றிய பயம் எனக்கு இருந்திருக்குமானால் மேற்படி கட்டுரையை வேறு ஏதாவது புனைப் பெயரிலோ, பொய்ப் பெயரிலோ எழுதியிருக்க முடியும். ஆனால் அது என் நோக்கமில்லை. அஷ்டாங்க மந்திரத்தைக் கோபுரத்தின் மேலேறிச் சொல்லிய போது இராமானுஜருக்கு எத்தனை பெருமிதம் இருந்ததோ அத்தனை பெருமிதம் இந்தக் கட்டுரையை எழுதிய போது எனக்கு இருந்தது. அதை உணராமல் நன்றியற்றவர்களும், நயவஞ்சகக் காரர்களுமாகிய பத்திரிகை முதலாளிகளின் தயவை மிகவும் கீழான முறையில் சம்பாதிக்க விரும்பிய ஓர் தமிழ் எழுத்தாளர் மேற்படி கட்டுரையைக் காட்டிக் கோள் மூட்டும் திருப்பணியைச் செய்தாராம். குப்பையும் கூளமும், ஊழலும் உண்மையற்ற போக்கும் மலிந்து விட்ட ஓர் இடத்திலிருந்து நான் வெளியேற வழி செய்து கொடுத்ததற்காக அந்த எழுத்தாளருக்கு நான் நன்றி செலுத்தக் கூடத் தயாராயிருக்கின்றேன். எனக்கு வேலை பற்றியோ, பிழைக்கும் வழி பற்றியோ, வயிற்றைக் கழுவுவது பற்றியோ, அதிகக் கவலையில்லை. ஆனால், கவலை உண்டு. ராஜாஜியைப் பெரியவர் பெரியவர் என்று தொழுது கொண்டாடும் ஒரு நிறுவனத்தில் பணி புரிந்து கொண்டே அவர் 'தமிழில்

எழுதுவது பெரும் பாவம்!'' என்று மேடைகளில் பேசிவந்தவன் நான்.

நான் வேலை நீக்கப்படுவதற்குச் சில மாதங்களுக்கு முன் பம்பாய் தமிழ்ச் சங்க விழா ஒன்றிற்குப் போய்ப் பேசினேன். அதில் 'பாரதியுகம்' என்ற பொருளில் பேசுகிற தினத்தன்று, ''மகாகவி பாரதியின் வாக்கினால் புகழப் பெற்ற தேச பக்தர்கள் யாரும் இந்நாட்டிலே பெரும் பாக்கியசாலிகள், காந்தியடிகள், சிவா, வ.உ.சி. எல்லாரையும் தம் வாக்கால் பாடிய பாரதி, இராஜாஜியை மட்டும் பாடவில்லை. பாரதியின் தலைமுறையில் வாழ்ந்தும் அவர் வாக்கில் ஒருமுறை கூட விழாத இராஜாஜியைத் துர்ப்பாக்கியசாலியாகத்தான் கணக்கிட வேண்டியிருக்கிறது'' என்று பேசினேன். கூட்ட முடிவில் ஒரு சநாதனி ''நீங்க ராஜாஜியைப் பெரிதும் போற்றும் ஒரு அலுவலகத்தில் வேலை பார்த்து சம்பளம் வாங்கிக் கொண்டே இப்படிப் பேசுவது நியாயமா?'' என்று என்னிடம் வந்து கேட்டார்.

''என் சொந்த அபிப்ராய சுதந்திரத்தை அடகுவைத்து நான் சம்பளம் வாங்கவில்லை. என் அபிப்பராய சுதந்திரத்தை நான் யாருக்கும் விற்கமாட்டேன்'' என்று அவருக்கு ஆணித்தரமாகப் பதில் கூறினேன் நான். அவர் பின்னர் இந்த உரையாடலைப்பற்றி நான் வேலைப்பார்த்த இடத்துக்கு எழுதிப்போட்டதாகவும் கேள்வி. சுதந்திரமான சிந்தனைகளும் தன் மானமும் உள்ள ஓர் எழுத்தாளன், வியாபார ஆதிக்கமும், முதலாளிகளின் நைப்பாசைகளும் நிறைந்த பத்திரிகாலயக் கிடங்குகளில் எப்படி வாழ முடியாமற்போகிறதென்று கொஞ்சம் காரணகாரியங்களோடு பார்க்கலாம்.

சமீபத்தில் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடத்திய சிறுகதை விழாவில் 'தேவன்' பற்றிப் பேசத் 'தேவன்' முன்பு வேலை பார்த்த பத்திரிகாலயத்தில் இப்போது வேலை பார்க்கும் ஓர் ஆள் தேர்ந்தெடுக்கப்பட்டு அழைப்பிதழில் பெயரும் அச்சடிக்கப் பட்டிருந்தார். கடைசியில் விழாவன்று அந்த ஆள் தேவனைப் பற்றிப் பேசவே வரவில்லை. விசாரித்தால், ''தேவனைப் புகழ்ந்து பேசுவது அவர் வேலை பார்க்கும் காரியாலய முதலாளிக்குப் பிடிக்குமோ, பிடிக்காதோ? என்று அவர் பயந்து போனதாகத் தெரியவந்தது. இப்படிப்பட்டவர்கள் தமிழ் நாட்டில் நிறைய இருக்கிறார்கள். மலையாளத்திலும் வங்காளத்

திலும் இருப்பது போல் தீரர்கள் பத்திரிகை தொழிலுக்கு வந்தால் இங்கேயும் முதலாளிகளின் கொட்டத்தை ஓரளவுக்கு ஒடுக்கலாம். ''அப்படியானால் இங்கு மாத வாரப்பத்திரிகை களில் இப்போது தீரர்கள் இல்லையா?'' என்று நீங்கள் என்னை ஒருகேள்வி கேட்கலாம். எப்படிப்பட்டவர்கள் பெரும்பாலும் இங்கு இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குச் சொல்கிறேன்.

பத்திரிகையாளன் அல்லது எழுத்தாளன் – என்பவன் தன்னுடைய அறிவுச் செருக்கையோ, சுய மரியாதையையோ, தன்னை ஆள்வதாகவோ காப்பாற்றுவதகாவோ நினைத்துக் கொண்டு திரிகிற பத்திரிகை முதலாளி உணரும் படியாகச் செய்த சம்பவங்கள் இங்கு நம் தமிழ்நாட்டில் மிகமிகக் குறைவு. தன்னுடைய சொந்தப் பத்திரிகையில் வாரா வாரம் யார் யார் எழுதுகிறார்கள், எப்படி எப்படி எழுதுகிறார்கள் என்பதைப் பத்திரிகை வெளிவருவதற்கு முன்போ, அல்லது வெளிவந்த பின்போ தெரிந்து கொள்ளக் கூட ஆசையோ, அவகாசமோ இல்லாத அலட்சியமான மனப்பான்மையுள்ள கொழுப்பெடுத்த முதலாளிகள் சிலர் தமிழ்நாட்டில் இருக்கிறார்கள். ''உங்கள் பத்திரிகையில் இந்த வாரம் இதைப்பற்றி எழுதியிருக்கிறார் களே?''–என்று இந்த முதலாளிகளிடம் யாராவது எப்பேதாவது கேட்டால் 'திரு திருவென்று ஒன்றும் புரியாமல் விழிப்பார்கள் அல்லது, 'அப்படியா?' நான் பார்க்கவில்லையே?'' – என்று அசடு வழியப் பதில் சொல்லுவார்கள். இவையெல்லாம் எதைத் தெளிவாக்குவதாய் நினைக்கிறீர்கள்? தங்கள் பத்திரிகைகளில் எழுதுகிறவர்கள் அல்லது உதவியாசிரியர்களாக வேலை பார்க்கிறவர்களுடைய தன்மானத்தைப் பற்றியோ, சுயமரி யாதையை பற்றியோ – இந்த முதலாளிகளுக்கு அதிகம் கவலையில்லை. அக்கறையும் கிடையாது. 'கிளப்பில்' பெருந் தலைகளோடு சீட்டாடுவது முதல் குதிரைப் பந்தயத்துக்குப் போவது வரை எத்தனையோ அக்கறையும் கவலையும் காட்ட வேண்டிய காரியங்கள் அவர்களுக்கு இருக்கும். உதாரணமாக ஒரு நிகழ்ச்சியை இங்கே வாசகர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அருள் வாக்குகளையும், ஆச்சாரிய சுவாமிகளையும் திடீரென்று கொண்டாடத் தொடங்கிய ஒருதமிழ் வாரப் பத்திரிகையின்

'வருடாந்திரப் பஞ்சாங்கமான தீபாவளி மலரில் – ஒரு கட்டுரையில் சங்கராச்சாரியரைப் பற்றி எழுதப்பட்டிருந்த ஒரு கருத்தினில் தவறான முடிவு ஒன்று இருந்தது. அந்தப் பத்திரிகை முதலாளி தாமே நேரில் போய்ப் 'பெரியவாளிடம்' கெஞ்சி வேண்டி அந்தக் கட்டுரையை வாங்கி வந்ததாக எல்லாரிடமும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார் என்றும் கேள்வி. அந்த நிலையில் பத்திரிகையில் 'வருடாந்திரப் பஞ்சாங்கமான' தீபாவளி மலர் வெளிவந்த மறுவாரம் – ஞானசூனியமான தன்னையே பத்திரிகையின் ஆசிரியராகவும் போட்டுக் கொண்டிருக்கும் மேற்படி வாரப்பத்திரிகையின் முதலாளி அவருடைய 'குடும்பக்' காரியமாக மதுரைக்கு வந்திருந்தார். அப்போது நான் மதுரையிலிருந்தேன். தற்செயலாக அவரைச் சந்திக்க நேர்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, "என்ன? நம்ப தீபாவளி மலர் எப்படியிருக்கு?" என்று அவர் சம்பிரதாயமாக ஒருகேள்வி கேட்டுவைத்தார். சம்பிரதாயமாகக் கேட்கப்பட்ட அந்தக் கேள்விக்குச் சம்பிரதாயமாகவே நானும் பதில் சொல்லிவிட்டுப் போயிருக்கலாம். ஆனால் நான் அப்படிச் செய்யவில்லை.

"மலரில் எடுத்த எடுப்பிலேயே சங்காராச்சாரியரைப் பற்றி எழுதியிருக்கிற கட்டுரையில் ஒரு பெரிய தப்பு இருக்கிறதே?" என்று அடிமடியைப் பிடித்தேன். ஆனால் அந்தக் குறையை அவர் சர்வசாதாரணமாக வரவேற்ற விதமும், அலட்சியமாகப் பதில் சொல்லிய தோரணையும் என்னை அயர்ந்து போகச்செய்து விட்டன.

"இந்தப் பெரியவாள்' பக்தி –ஸ்ரீ முகம் – கட்டுரை – தத்துவம் – இதிலெல்லாம் எனக்குப் பிரமாதமா ஒண்ணும் நம்பிக்கை கிடையாது. ஏதோ பாமர ஜனங்களுக்கு இப்பிடி ஆசாரிய சுவாமிகளைப் பற்றியும், பக்தியைப் பற்றியும் ரெண்டு பக்கம் வரணும்னு ஒரு பிரமை இருக்கு மோல்லியோ? அதுக்காகத்தான் இது மாதிரி எல்லாம் நடுநடுவே பக்தி விஷயம் ஏதாவது போடறோம். ஜனங்களுக்கு இதிலெல்லாம் மூடநம்பிக்கை – ஒரு விதமான பிரமை இருக்கு. அதனாலே இந்த மாதிரிக் கட்டுரைகளில் என்ன 'அபத்தம்' இருந்தாலும் சரீன்னு அப்படியே போட்டுட வேண்டியது" என்று சிரித்துக் கொண்டே கூறி மழுப்பினார் அவர். அவருடைய ஆஸ்தீக வேடம் கண்களில்

நீர்மல்க சங்கராச்சாரியாரிடம் கைகட்டி வாய் பொத்தி நிற்பது எல்லாம் எத்தனை பெரிய மாய்மாலங்கள் என்று அன்றைக்குத்தான் நான் தெரிந்து கொண்டேன். தனக்கு நம்பிக்கையோ, பற்றோ இல்லாததைக் கூடப் போலியாக நடிப்பதும் 'பத்திரிகை தர்மம்' என்று தான் கொள்ள வேண்டும் போலிருக்கிறது. 'டம்மி எடிடராக' (பேருக்கு ஆசிரியராயிருப்பவர்) இருக்கிறவர்கள் எந்த எந்த விதங்களில் தகுதிக்குறைவாகவும், புத்திக்குறைவாகவும் நடந்து கொள்வார்கள் என்பதற்கு இன்னும் ஓர் உதாரணம் கூடக் கூற முடியும்.

அதுவும் ஒரு தீபாவளி மலர் சமயம் தான். அதே வாரப் பத்திரிகை முதலாளிதான். அந்த ஆண்டில் தீபாவளியின் போது வெளியான தமது பத்திரிகையல்லாத மற்றப் பத்திரிகைகளின் தீபாவளி மலர்களை வைத்துப் புரட்டிக் கொண்டிருந்தார். இதென்ன ஆச்சரியமாயிருக்கிறது? இந்த ஆள் தன் பத்திரிகையைத் தவிர மற்றப் பத்திரிகைகளைக் கூடக் கையிலெடுத்துப் பார்க்கிறாரே' என்று நான் தாங்க முடியாத வியப்புடனே அவரைக் கவனித்துக் கொண்டிருந்தபோது – மிக விரைவாக அசுர வேகத்தில் எல்லாப் பத்திரிகைகளையும் புரட்டிப் பார்த்து விட்டுக் கீழே போட்டு விட்டார் அவர். நான் ஆச்சரியம் மேலிட்டு அவரை வினவினேன் :–

''என்ன இது? இவ்வளவு சீக்கிரமாகவா எல்லாப் பத்திரிகைகளையும் பார்த்து விட்டீர்கள்?''

''பார்க்கிறதாவது; ஒன்றாவது ? நான் பார்க்கிறதுக்கு என்ன இருக்கு இதிலெல்லாம்? எவ்வளவு 'அட்வர்டிஸ் மெண்ட்ஸ்' இருக்குன்னு ஒரு மாதிரி எண்ணிப் பார்த்தேன். வேறொண்ணு மில்லே! ஒரு வேளை இவர்களுக்கு நம்மைவிட அட்வர்டிஸ் மெண்ட்ஸ் கூட இருக்குமோ என்று தெரிந்து கொள்வதற்காக ஒரு புரட்டுப் புரட்டினேன்!' – என்றாரே பார்க்கலாம் அவர். தன் பத்திரிகையைவிட அடுத்த பத்திரிகையில் ஏதாவது நல்ல தரமான கதைகள், கட்டுரைகள், வந்திருக்குமோ என்ற பயத்தோடு அவர் மற்றைய பத்திரிகைகளைப் புரட்டவில்லையாம். 'அட்வர்டிஸ்மெண்ட் ரெவின்யூ தன்னை விட அவர்களுக்கு அதிகமா அல்லது அவர்களைவிடத் தனக்கு அதிகமா

பக்கங்களை எண்ணிப் பார்த்துக் கொண்டிருக்கிறாரென்று அவர் கூறியதிலிருந்து அன்றைய தினம் அவரைப்பற்றி நான் முடிவு செய்தேன்.

'கொக்குக்கு ஒன்றே மதி'' – என்பதுபோல் 'விளம்பர வருமானம்' 'விளம்பரதாரர்களின் ஆதரவு'– என்பதையே கவனத்தில் வைத்துக் கொண்டு – 'விஷயங்களின் உயர்வு' 'வெளியிடுகிற இலக்கிய அம்சங்களின் தரம்' – என்பவற்றை முற்றிலும் அலட்சியப்படுத்துகிற திமிங்கிலங்கள் தான் இங்கு பெரும்பாலான பத்திரிகை முதலாளிகளாயிருக்கிறார்கள். சாமர்த்தியத்தோடும் அசல் இலக்கியதாகத் தோடும் பத்திரிகைத் தொழிலில் நுழைகிற திறமை வாய்ந்த ஆசிரியர்கள், உதவியாசிரியர்கள், எழுத்தாளர்கள் கூட, நாளடைவில் மாறி ஒடுங்கி பத்திரிகைத் தொழிலில் தன்மானத்தையும் சுயமரியாதையும் இழந்து விடுகிறார்கள். பழுதுபட்ட அல்லது தேய்ந்த இயந்திரங்களாகிவிடுகிறார்கள்.

எனக்குத் தெரிந்த ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் – அந்தப் பத்திரிகை தொடங்கிய காலத்திலிருந்து வேலை பார்த்து வருகிற உதவியாசிரியர்கள் நான்கு பேருடைய நிலைகளை மாதிரிக்காக இங்கே கொஞ்சம் விளக்குகிறேன். ஓர் உதவியாசிரியர் 'புரூப்' திருத்துவதும் வருகிற கதை கட்டுரைகளை வாங்கி வைப்பதும், பத்திரிகையின் 'காம்ப்ளிமெண்ட்ரி' பிரதிகள் யார் யாருக்கு அனுப்பப்பட வேண்டுமோ–(இது ஆசிரியர் குழுவுக்குச் சம்பந்தமில்லாத) அவர்களுக்கு அனுப்புவதற்கான பட்டியலை வைத்துக் கொண்டு சரிபார்த்து அனுப்புவதும், நிர்வாகிகள் போய்ப் பார்த்து 'மாலிஷ் (உபசாரப் புகழ்) போடச் சொல்கிற ஆட்களுக்கு வகையாக 'மாலிஷ்' போட்டுப் பூச்சூட்டுவதுமே – வேலையாக இலக்கிய உணர்வே அற்றுப் போனவர். இவரை அட்வர்டிஸ்மெண்ட் மேனேஜர் தம் ரூமிலிருந்து ஃபோனிலோ, நேரில் வந்தோ, 'யோவ்! கொஞ்சம் வந்துட்டுப் போய்யா'' என்று விறகுக் கடையில் கூப்பிடுவது போல் (உதவியாசிரியர்களைக்) கூப்பிடுவதும் – சர்க்குலேஷன் மானேஜர் இவர் காலைச் சாய்த்து நடப்பதை நையாண்டி செய்து சிரிப்பதும் வழக்கம்.

இந்த நான்கு உதவி ஆசிரியர்களும், இவர்களைத் தேடி வந்திருக்கிற நண்பர்களுக்கு நடுவிலோ, எழுத்தாளர்களுக்கு நடுவிலோ – இலங்கை முதலிய வெளிநாடுகளிலிருந்து பார்க்க

வந்த பார்வையாளர்கள் அல்லது இரசிகர்களுக்கு நடுவிலோ எத்தகைய சூழ்நிலையில் அமர்ந்திருந்தாலும், ''யோவ்! கொஞ்சம் வந்துட்டுப் போய்யா''...... என்று தான் அழைக்கப் படுவார்கள். ஆனால் இவர்கள் முதலாளியை அழைக்கும்போது, 'மாமா' இருக்கிறாரா?– 'மாமா' வந்து விட்டாரா? என்று மாமாப் பட்டம் கொடுத்து அழைக்க வேண்டுமாம். இந்த 'மாமாப் பட்டம்' நாளடைவில் அசிங்கமான அர்த்த முடையுதாக உணரப்பட்ட பின்னால், 'பெரியவர் இருக்கிறாரா?' என்று மகா கௌரவமாக மாற்றப்பட்டது என்று செவிவழிச் செய்தி கூறுகிறது.

அதே காரியாலயத்தில் வேறு ஓர் உதவி ஆசிரியர் எப்போதோ அந்தப் பத்திரிகை முதலாளி எடுத்த ஓர் இந்திச் சினிமாப் படத்துக்கு வேறொருவர் வடக்கேயிருந்து எழுதின 'ஸ்கிரிப்டைக்' காப்பி எடுக்கவோ, உச்சரிப்பதற்குச் சொல்லிக் கொடுக்கவோ வந்தவர்– அப்புறம் வேறு வழி இல்லாத காரணத்தால் பத்திரிகையில் தங்கி விட்டார், இன்று அவரும் தேய்ந்த இயந்திரமாகிச் சுயமரியாதையற்றுப் போயாயிற்று.

இன்னொருவர் இந்தப் பத்திரிகை ஒரு காலத்தில் மதித்து வந்த வெளியூர் இலக்கிய வித்தகர் ஒருவரிடமிருந்து இந்தப் பத்திரிகைக்கு வரவேண்டிய கட்டுரைகளை உடனிருந்து பிரதிசெய்து தபாலில் அனுப்பிக் கொண்டிருந்தவர். இப்போது அந்த இலக்கிய வித்தகர் அமரராகி விட்டதாலோ என்னவோ காரியலயத்திலேயே தங்கி – இந்தக் காரியாலயம் வைத்துக் கொண்டிருக்கிற அல்லது இந்த காரியாலயத்தை வைத்துக் கொண்டிருக்கிற ஓர் அரசியல் தலைவருடனும் அவருடைய கூஜாவுடனும் வெளியூர்களுக்குப் போகவர இருக்கிறார்.

இவரைப் பற்றி ஒரு சுவாராஸ்யமான விஷயம். எங்கோ வெளியூருக்கு போனசமயத்தில் யாரோ ஒரு நண்பரிடம், ''நான் தான்நமது பத்திரிகையில் அரசியல் தலையங்கம் – உபதலை யங்கம் எல்லாம் எழுதுகிறேனாக்கும்! 'பெரியவர்' (அந்தக் காரியாலயம்வைத்துக்கொண்டிருக்கும்'–அரசியல்தலைவருக்கும் இந்த பெயர்தானாம்) கூடப் பழகறதினாலே நான்தான் இதை இத்தனை லட்சணமா எழுத முடியும்'' –என்று பெருமையாக இரண்டு வார்த்தைகள் சொல்லிக் கொண்டு விட்டார் போலிருக்கிறது. அவ்வளவு தான்! பிடித்தது சனி! இந்த வார்த்தை

கள் எப்படியோ முதலாளியின் காதுவரை எட்டிவிட்டன. அவர் இந்த ஆசிரியர் ஊர் திரும்பியதும் இவரை அழைத்து, ''நீங்க என்னமோ 'நான்தான் தலையங்கம் எழுதறேன்–' அப்படி இப்படீன்னு' ஊரெல்லாம் சொல்லிண்டு திரியறேளாமே? 'ஏதோ' பெரியவருக்குத் தள்ளாத காலத்திலே அவருக்கு ஒத்தாசையாகப் பணிவிடைகள் செய்யலாம்னு கூட வரேன்'' என்று தான் போகிற இடங்களில் சொல்லணுமே ஒழிய எழுதற தாக மூச்சு விடப்படாது. ஜாக்கிரதை ! – என்று முதலாளியின் அதிகார உரிமையோடு எச்சரித்தாராம். உடனே உதவி ஆசிரியரும் பயந்து மெய் விதிர்த்து நடுநடுங்கி, ''புத்தி சார்! இனிமே அப்படிச் சொல்லலை'' – என்று 'ஸரண்டர்' ஆனார். உண்மையில் 'தலையங்கம்' எல்லாம் இவரே எழுதிக் கொண்டிருந்தும் கூட 'வெளியில் அதைச் சொல்லிக் கொள்ளக் கூடாது' – என்று ஒடுக்கப்பட்டார். அடுத்த சில வாரங்களில் இவரைப் பழிவாங்கி ஒடுக்குவதற்காகப் பத்திரிகைத் தொழில் அனுபவமே இல்லாதவரும், சங்கராச்சாரியருடைய மடத்துத் திண்ணையில் தூங்கிக் கொண்டிருந்தவருமான ஒரு இருபத்தேழு வயதுப் பையன் தலையங்கம் எழுத அமர்த்தப்பட்டார். அவர் வந்ததும் இவர் 'டீஸ்' செய்யப்பட்டார்.

பெரியவரிடமிருந்து (சங்கராச்சாரியாருக்கும் இதே பெயர்தான்) வந்த பையன் சமஸ்கிருதமும் + ஆஸ்திகமும் கலந்து 'கொழ கொழ' தமிழில் எழுதிய அரசியல் விஷயங்கள் முதலாளியால் கொண்டாடப்பட்டன. அப்படிக் கொண்டாடப் பட்டதன் நோக்கம் முன்னாள் அரசியல் விஷயங்கள் எழுதிய வரை 'டீஸ்' (அவமானம்) செய்ய வேண்டுமென்பதுதான் எனத் தெரியவந்தது.

தி.ஜ.ர.வைப்போல் பரிபூரணமான பத்திரிகைத் தொழில் ஞானமும் நிறைந்த தொழில் அனுபவங்களும் உள்ளவர்களைக் கூட வாழ்க்கையில் சகல சௌகரியங்களையும் அடைய விடாத நாடு இது. பத்திரிகை முதலாளிகள் தான் வாழ்க்கையின் சகல சௌகரியங்களையும் இங்கு அடைய முடியுமே ஒழிய உழைக்கும் பத்திரிகையாளர்கள் எந்த சௌகரியத்தையுமே அடைய முடியாது போலிக்கிறது.

உழைக்கும் பத்திரிகையாளர்கள் அல்லது உதவியாசிரியர்

கள் பலர் தொழில் பயத்துடனும் தன்னம்பிக்கையற்றும் வாழ்கிறார்கள், 'வேலை போய்விடுமோ?' – 'வேலை போய்விடுமோ?' என்று பயந்து நடுங்குகிறார்கள். பெரிய குடும்பத்தின் சுமையும் நகர வாழ்வின் சிரமங்களும் அவர்களை இப்படிப் பயந்தான் கொள்ளிகளாக ஆக்கியருக்கிறதென்பது உண்மையாயினும் உழைக்கும் பத்திரிகையாளன் என்ற தொழிலினத்தின் வீரத்தை மொத்தத்தில் மற்றவர்கள் குறைத்து மதிப்பிடுவதற்கு வழி செய்து விடுகிறார்கள். ஓரிருவரை வைத்து அளவு செய்யப்படும் இந்த மதிப்பீட்டைக் கொண்டு, 'உழைக்கும் பத்திரிகையாளர்கள் எல்லாரும் வக்கற்றவர்கள் – போக்கில்லாதவர்கள் – இந்தத் துறையை விட்டு விட்டால் வேறு துறைகளில் முயன்று பிழைக்கவும் முடியாதவர்கள்' – என்று கொழுப்பெடுத்த பத்திரிகை முதலாளிகள் எல்லாரும் முடிவு செய்கிறார்கள்.

முன்னர் குறிப்பிட்ட உதவியாசிரியர்களின் அனுபவங்களைத் தவிர – வேறு சிலவகை ஆட்களுக்கு வேறு விதமான அனுபவங்களும் உண்டு. அதையும் தான் கொஞ்சம் பார்க்கலாமே! துரதிர்ஷ்டவசமாக நான் வேலை பார்த்த ஒரு பத்திரிகைக் காரியாலயத்தில் – என்னோடு வேலை செய்த உதவியாசிரியர் ஒருவர் – என்னுடைய நாவல் வெளியீட்டு விழா ஒன்றில் பேசுவதற்கு இணங்கியிருந்தார். என் மேல் நிரம்பிய அன்புள்ளவராகவும், பிரியமுள்ளவராகவும், காண்பித்துக் கொண்ட சிலரில் அவரும் ஒருவர். நிகழ்ச்சிகள் நிரல்களிலும், விழா அழைப்பிதழ்களிலும், சுவரொட்டிகளிலும் தாம் விழாவில் கலந்து கொள்ளும் இணக்கத்துடன் பெயரை வெளியிடவும் இசைவு தந்து விட்டார் அந்த உதவியாசிரியர். யாவும் அச்சாகி விளம்பரங்களும் – விழாவைப் பற்றிய பத்திரிகை அறிவிப்புகளும் கூடச் செய்யப்பட்டாயிற்று. இந்த நிலையில் எனக்கும் அந்தக் காரியாலயத்தாருக்கும் இடையே மனக்கசப்பு முற்றி உரிமைப் பிரச்சனை காரணமாக நான் அங்கிருந்து வெளியேற நேர்ந்து விட்டது, என்னுடைய நாவல் வெளியீட்டு விழா நாளோ, நான் அங்கிருந்து வெளியேறிய பின்பு ஒரு வாரத்துக்கு அப்பால் ஏதோ ஒரு தேதியிலே இருந்தது. நான் அங்கிருந்து வெளியேறிய பின்போ மேற்படி உதவி ஆசிரியருக்கு மனம் மாறிய பயம் வந்துவிட்டது.

''ஏன் ஐயா இந்தச் சமயம் பார்த்து அந்த மனிதருடைய

நாவல் வெளியீட்டு விழாவிலே கலந்து கொள்கிறீர் ... நமக்குப் படியளக்கிறவர்களின் கோபத்தைக் கிளரச் செய்யாமல் வாயை மூடிக் கொண்டு சும்மா இருப்பது தான் பிழைக்கத் தெரிந்தவனுக்கு அழகு'' என்று அவருடைய சகாக்களும் பிழைக்கத் தெரிகிற கலையை நன்கு கற்றுக் கொண்டவர்களுமாகிய சிலர் அவருக்கு யோசனை கூறியிருக்கிறார்கள். அவருக்கும் உள்ளூற நடுக்கம் வந்து விட்டது. எனவே முன்தகவல் கூடத் தெரிவிக்காமல் – சொல்லாமல் கொள்ளாமல் விழாவுக்கு வருவதைத் தவிர்த்து விட்டார் அந்த உதவியாசிரியர், சொந்த நட்பு விருப்பு – வெறுப்பு – உறவு – பகை – மானாபிமானங்களைக் கூட உத்தியோகம் பார்க்கிற – எஜமானனிடத்தில் மொத்தமாக அடகு வைத்துவிடும், ''அவர் தலைவர் – அன்னவர்க்கே சரண் நாங்களே''–என்பது போன்ற ''அவர்க்கே நாம் ஆட்செய்வோம்'' வகையறா ஆட்களே சென்னையில் பெரும்பாலான உழைக்கும் பத்திரிகையாளர்களாயிருக்கிறார்கள். இவர்களால் தொழிலின் மரியாதையையும் காப்பாற்ற முடிவதில்லை. சுய மரியாதையையும் காப்பாற்ற முடிவதில்லை.

வேறொரு சமயம் இன்னோர் உதவி ஆசிரியர் – பத்திரிகை முதலாளியிடம் அடைந்த அவமானகரமான அனுபவம் கேட்க அருவருப்பானது. இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் மனிதன் தன்மானத்துக்காகப் போராடுகிறானா என்பதை வைத்துத் தான் அவனுடைய தரத்தைக் கணிக்க முடிகிறது. அந்த உதவியாவிசிரியர் தன் சிறு கதைகளைத் தொகுத்துத் தொகுதியாக வெளியிட்டிருந்தார். தன் புத்தகம் ''வெளிவந்த மகிழ்ச்சி யில் உதவியாசிரியர் ஒரு காரியம் செய்தார். இவர் மேலோ இவருடைய இலக்கியத் தொண்டின் மீதோ கடுகளவு நன்றியும் இல்லாத பத்திரிகை முதலாளியின் மேல் இவருக்கு நிர்பந்தமாக ஏற்பட்டுவிட்ட நன்றியின் (!) காரணமாக – இவருடைய புதிய சிறுகதைத் தொகுதிப் புத்தகத்தில் ஒன்றை எடுத்து, 'என்னை ஆட்கொண்டு காப்பாற்றி வரும் இன்னாருக்கு' – என்று பரிவோடு எழுதிக் கையெழுத்தும் போட்டுக் கொண்டு போய்ப் பயபக்தியோடு கொடுத்தாராம்.

இவருடைய பயபக்தியையும் எஜமான விசுவாசத்தையும் புரிந்து கொண்டு நன்றி பாராட்டத் தெரியாத அந்த முதலாளி, 'சிறு கதைகளை வெளியிடுவதன் மூலம் இவருடைய புகழ்

வெளியில் பரவிவிடுமோ... '- என்று அசூயைப்பட்டு இவர் அன்போடு கொடுத்த புத்தகத்தைக் கையில் புரட்டிப் பார்த்துக் கொண்டே.

'' ஒரு ஸ்தாபனத்தில் வேலை செய்வதோடு மட்டும் திருப்திப்படணும். அப்படியில்லாமல் இது போலப் புஸ்தகம் வெளிவரணும்னு நினைக்கிறதும், அந்தப் புஸ்தகத்துக்குப் புகழ் 'ராயல்டி' எல்லாம் கிடைக்கணும்னு நினைக்கிறதும் சோரம் போறது மாதிரி. நல்ல சம்சாரம்னாப் புருஷன் வாங்கிக் கொடுத்த சுங்குடிப் புடவையே போதும்னு ஒரு திருப்தி மனப்பான்மை வேணும். புருஷன் வாங்கிக் கொடுத்த சுங்குடிப் புடவை போறாதுன்னு சோரம் போறவ மாதிரி இப்பிடிப் புஸ்தகம் எழுதற ஆசை. அது, இது எல்லாம் கூடாது'' - என்று தர்மோபதேசம் செய்தார். ஒரு வேடிக்கை என்னவென்றால் மேலே கண்ட பத்திரிகை முதலாளிக்குச் சொந்த வாழ்க்கை அப்படி அமைந்து விட்டதன் காரணமாகவோ என்னவோ யாரிடம் எதைப் பேசுவதற்கு வாயைத் திறந்தாலும், 'சோரம் போவது - கள்ளப் புருஷன், விபசாரம் - அவிசாரித்தனம்' - என்று இப்படி வழக்கமான நாலைந்து 'அநுபூதி வார்த்தைகள்' தான் வந்து விழும்.

மேலே கண்ட அவருடைய உபதேசப்படி கிடைக்கிற முடிவோ மகா மகா பயங்கரமானது. அதாவது தரமற்ற பத்திரிகை முதலாளிகளாகிய இந்த ஈனப் பிறவிகள் எல்லாம் தங்களிடம் வேலை பார்க்கும் உதவியாசிரியர்களாகிய பெண்சாதிகளுக்குப் புருஷர்களாக இருக்கிறார்கள் என்றாகிறது. மேற்படி பத்திரிகை முதலாளி தன்னிடம் அன்போடு தமது சிறுகதைத் தொகுதியைக் கொடுக்க வந்த உதவியாசிரியரிடம் 'சுங்குடிப் புடவை' - உதாரணத்தைச் சொல்லி அவமானப்படுத்தியதோடு போகாமல் தன்னைப் பரிசுத்த புருஷனாக வேறு கற்பித்துக் கொண்டதுதான் தாங்க முடியாதது. 'இரண்டு ஃபுல் பேஜ்' அட்வர்டிஸ்மெண்டிற்காக ஆயிரம் தடவை சோரம் போகிற ஆட்கள் அடுத்தவனுக்குத் தர்மோபதேசம் செய்வதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது... நபரின் வேண்டுகோளுக்கிணங்க வேறு சித்திரம் ஒன்றை வெளியாருக்கு வரைந்து கொடுத்தவிட்ட காரியாலயச் சித்திரக்காரர் ஒருவரிடமும் அருவருப்பு அடையத் தக்க இந்தச் சுங்குடிப் புடவை உதாரணம் அதே முதலாளியால்

ஒரு முறை கூறப்பட்டதென்று தெரிகிறது.

காதால் கேட்டு மனமும், உடம்பும் கூசக்கூடிய இந்தச் சுங்குடிப் புடவை உதாரணத்தைக் கேட்க நேர்ந்த உதவியாசிரியர் என்ன செய்தார் என்று நினைக்கிறீர்கள்... பதினேழு பக்கத்துக்குக் கடிதம் எழுதி முதலாளியின் 'பெருந்தன்மையையும்' தன்னையும், தன் குடும்பத்தையும் ரட்சித்துவரும் அவருடைய 'உபகாரத் தன்மையையும்' – பாராட்டி இனிமேலும் தன்னைத் தொடர்ந்து. ரட்சித்து வரவேண்டுமென்ற வேண்டுகோளுடன் தெரியாத்தனமாய் சிறுகதைத்தொகுதி வெளியிட்டுவிட்டதற்குக் 'கன்ஃபெஷன்' – அதாவது 'பாவ மன்னிப்புக்' கேட்டுக் கொண்டாராம்.

எழுத்தாற்றலோடு வருகிறவர்களைப் படிப்படியாகக் 'காயடித்து'த் துருப்பிடிக்க வைப்பதும் காரியாலயம் தொடங்கிய நாளிலிருந்து வருஷத்துக்கு இரண்டு சித்திரக்காரர்களையோ தொழிலாளர்களையோ வேலையிலிருந்து வெளியே தள்ளித் தெருவில் அவர்கள் நிற்பதைப் பார்த்து மகிழ்வதுமாகவே பிழைப்பு நடத்தும் சில பத்திரிகைகள் – தர்மம் – தனிநபர் சுதந்திரம் – பற்றி இன்னும் எழுதி வருகின்றனவே – 'அதை நினைத்தால்தான் தமிழ் மக்கள் அதாவது இந்தப் பத்திரிகைகள் என்ற பாவங்களை வாங்குகிற தமிழ் மக்கள் எத்தனை பெரிய ஏமாளிகள்'.... என்று நினைக்கத் தோன்றுகிறது. தர்மம் தனிநபர் சுதந்திரம் பற்றிப் பேசுகிற இந்தக் கருப்புப் பணக் குப்பைகளுக்குத் தேசபக்தியும் கிடையாது. தெய்வபக்தியும் உண்மையாகக் கிடையாது. ஆனாலும் பொறுமையாகவோ மறதியாகவோ, அல்லது மந்தமாகவே தானோ – இவற்றை வாங்கவும், படிக்கவும் செய்கிற தமிழ் மக்களை இன்னும் காண்கிறோம். குமுறுகிறோம். இந்தப் பத்திரிகைகளும் சங்கராச்சாரியாருடைய ஸ்ரீ முகங்களோடு தான் புறப்பட்டு உலாவுகின்றன.

சமீப காலத்தில் எனக்குக் கிடைத்த சில உபதேசங்களை நினைத்து நான் அடிக்கடி சிரித்துக்கொள்கிறேன். முக்கால்வாசி நாள் வெளியூர்களில் கந்தபுராணம் அபிராமி அந்தாதி – சொற்பொழிவுகளில் ஈடுபடுவதும் , மீதமிருக்கும் கால்வாசி நாட்களில் உள்ளூர் – அதாவது – சென்னை நகரத்திலிருக்கும் பிராம்மண விதவைகளுக்குக் கதாகலாட்சேபம் செய்வதுமாயிருக்கிற ஓர் இலக்கிய ஏட்டின் ஆசிரியர், ''அவருக்கு அந்த ஆபீசிலே நிறையச் சம்பளம் கொடுத்திண்டிருந்தா...

அவாளுக்கு அடங்கிப் பணிவா விநியமா அவா ஸொல்றதைப் பண்ணி – வேண்டாம்கிறதை விட்டுவிட்டுக் காலத்தைத் தள்ளிண்டிருக்கலாம். வீணாக் கெடுத்துண்டுட்டார். பத்திரிகை வேறே (தீபம்) ஆரம்பிச்சிருக்கா. பாவம்! கையைச் சுட்டுக்கப் போறார்.'' – என்று எனக்காக அனுதாபப்பட்டதாகக் கேள்விப் படுகிறேன். இது உண்மையாயிருக்கும் பட்சத்தில் என்னைப் போல் குமுறாமல், சுதந்திரமாயிராமல் ஆபீசுக்கு அடங்கி விட்டுக் கொடுத்துக் கொண்டு காலந்தள்ளும் அந்தப் 'பெரியவருக்கு' நான் தெரிவிக்க விரும்புபவை பின்வருமாறு :

1. நிறையச் சம்பளம் என்ற ஒன்று மட்டும் வாழ்க்கை இலட்சியமில்லை. அதற்கப்பாலும் சில நல்ல தாகங்கள் எனக்கு உண்டு.
2. அடங்குவதும், அவசியமின்றித் தகுதியற்றவர்களுக்குப் பணிவதும், எனக்குப் பிடிக்காதவை.
3. சொல்றதைப் பண்றதும், வேண்டாம்கிறதை விடறதும் சிந்திக்கிறவனால் முடியாத காரியம். அதற்கு அச்சுயந்திரமே போதும்.
4. காலந்தள்ளுவதற்கு – நான் தள்ளாத காலத்தவனில்லை. காலத்தைப் பிடித்துத் தள்ளுகிற இளவயதுக்காரன் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை.
5. நான் கையைச் சுட்டுக் கொள்ள மாட்டேன். ஆனால் என் கை பலரது தீமைகளை நிச்சயமாகச் சுடும்.

# திக்கெட்டும் பரவுக தீபச்சுடர்

## நா. பார்த்தசாரதி

தமிழ்ப் பெருமக்களுக்கு இதோ இன்று ஒரு நல்ல செய்தி! குரோதி நீங்கி இன்று விசுவாவசு வருடம் பிறக்கிறது. இந்தப் புதிய ஆண்டும் நமது தீபமும் பிரகாசிக்கத் தொடங்கும் முதல் நாள் இது. இந்த நல்ல நாளில் என்னைப் பற்றியும் என் முயற்சியைப் பற்றியும் இதோ உங்களிடம் சில வார்த்தைகள்.

பரிசுத்தமான எண்ணங்களுடன் தணியாத சத்திய வேட்கை யுடனும் எல்லா இடங்களிலும் அறிவின் பிரகாசமும் உண்மையின் ஒளியும் துலங்க வேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்துடனும் இன்று இந்தத் தமிழ் ஆண்டு தினத்தில் நான் ஓர் இலக்கியத் தீபத்தைப் பக்தி சிரத்தையோடு ஏற்றி வைக்கிறேன். இதன் பிரகாசத்தில், பகைமை, போட்டி, பொறாமை, இலக்கிய மாரீசம், நாட்டைக் கெடுக்கும் நச்சு இலக்கியப் புல்லுருவிகள் – ஆகிய விதவிதமான இருள்களெல்லாம் அகன்று விலகி ஓடுமாக ! தீபம் நல்லவர்களாகிய எல்லார்க்கும் ஒளியாகவும் தீயவர்களாகிய எல்லார்க்கும் சுடு நெருப்பாகவும் இருக்கும். அப்படித்தான் இருக்கவும் வேண்டும்.

நான் இன்று தொடங்கும் இந்தப் பத்திரிகை ஏற்கெனவே என்றுமிருக்கும் எந்தப் பத்திரிகைக்கும் போட்டியோ எதிரியோ அல்ல. எந்தப் பத்திரிகையும் இது வரை சாதிக்காமல் இந்தப் பத்திரிகை இனிமேல் சாதிப்பதற்கென்றே சில துணிவான இலக்கிய முயற்சிகள் இன்னும் மீதமிருக்கின்றன. தீபம் இனி அத்தகைய இலக்கியக் காரியங்களைத் தொடங்கி மேற்கொள் வதற்கு இருக்கிறது. இதனுடைய ஜகஜ்ஜோதியான புதிய பிரகாசத்தினால் எதனுடைய பழைய அழுக்குகளாவது தெரியு மானால் அது அப்படித் தெரிவதில் அழுக்கு இருக்கிறதென்பதைக் குறிக்குமே ஒழிய – இது அந்த அழுக்கைத் தென்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டு பிரகாசிக்கின்றதென்று ஆகாது – இதன் குணம் பிரகாசம் என்பது மட்டும்தான் இங்கு நமக்கு தேவையானது உண்மை! எனவே அதைமட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்றைய நிலையில் ஒரு புதிய பத்திரிகை தொடங்கு வதிலுள்ள கஷ்டங்களை எல்லாம் நண்பர்கள் எனக்கு நிறைய எடுத்துச் சொன்னார்கள். இது கஷ்டம் நிறைந்ததென்பதாலேயே

இதைத்தான் தொடங்க வேண்டுமென்ற தீரனின் ஆசை - இயல்பான ஆசை - நியாயமான ஆசை- எனக்குள் எழுந்தது. இதில் சிரமங்கள் நிறைய இருக்கின்றன என்பதனாலேயே இதை நான் துணிந்து மேற்கொள்ள வேண்டியவனாகிறேன். இந்த வழியில் 'இலட்சிய வேகமுள்ள பல நல்ல எழுத்தாளர்கள் ஏற்கெனவே தொடர்ந்து சென்று ஒருவர் பின் ஒருவராகத் தோற்றிருக்கிறார்கள்' என்பதனாலேயே அவர்கள் சார்பில் அவர்களுடைய தோல்வி களுக்கெல்லாம் வட்டியாக இதில்நான் வெற்றி பெற வேண்டு மென்ற தன்னம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது. இந்தத் தன்னம்பிக்கை தான் என்னிடம் நான் வெற்றி பெறுவதற்காக வைத்திருக்கும் வைரம் பாய்ந்த ஆயுதம். இது மேடு பள்ளம் நிறைந்த பாதை என்பதாலேயே இதில்நான் துணிந்து நடப்பதற்காக எப்போதும் போல் வலது காலை முன்னெடுத்து வைத்திருக் கிறேன். என்னுடைய இந்த வழியில் இடையூறுகள் நிறைய இருக்கும் என்பதே எனக்குமலையத்தனை தைரியத்தை அளிக்கிறது. நான் இன்று ஏற்றி வைக்கிற இந்தத் 'தீபம்' தமிழிலக்கிய உலகில் சகல இருளையும் நீக்கிப் புத்தொளி பரப்ப வேண்டுமென்று எனக்கு கொள்ளை ஆசை - நான் இதை ஏற்றி வைக்கிறேன் என்பதனால் மட்டும் அல்ல; என்னால் ஏற்றப்படுவது எதுவோ அது சத்திய வேட்கை மிக்கதோர் சுடர் என்பதால்தான். இந்த ஞான நெருப்பில் நானோ தீக்குளித்து எழத் துணிந்திருப்ப தற்காகத் தமிழ்த்தாய் நிச்சயம் என் பக்கம் துணை நிற்பாள். தமிழன்பர்களாகிய நீங்களும் துணை நிற்பீர்களென்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. இது வேறு வழி இல்லாத காரணத்தால் இலட்சக் கணக்கில் பணம் முடக்கும் 'ஓர் காகித வியாபாரி' நடத்த முன்வரும் இச்சை - பச்சை-நிறைந்த கவர்ச்சிப் பத்திரிகை அல்ல. தன்மானமும் நேர்மையுமே இருகரங்களென நம்பும் ஓர் அசல் எழுத்தாளனின் ஆத்ம சோதனைதான் இந்தப் பத்திரிகை - இதற்கு நீங்கள் அளிக்கும் ஆதரவு ஓர் நியாயமான எழுத்தாளனுக்கு அளிக்கும் ஆதரவாகும். இதைவிட அதிகமாக இதன் சத்தியத்தை வற்புறுத்த வெறும் வார்த்தைகளை நான் சாட்சிக்கழைக்கத் தயாராயில்லை. முன்பு மலர்ந்து கருகிய எல்லா நல்ல பத்திரிகைகளையும் போல் இதுவும் விரைவில் வாடிக் கருகி நின்று விட வேண்டும் - அல்லது நின்று விடும் - என்று நம்புகிறவர்களுக்கு ஒரு வார்த்தை. இது தோற்று விடும் என்று எவ்வளவு பலமாக நீங்கள் நம்புகிறீர்களோ, அதே போன்று அல்லது அதைவிட அதிகமான பலத்தோடு இது வெற்றி

பெற வேண்டுமென்று நான் நம்புவதற்கும் எனக்கு உரிமை உண்டு அல்லவா? பல நல்ல பத்திரிகைகளை ஆதரிக்கத்தவறி தின்று விழுங்கி ஏப்பம் விட்டு நிற்கும் பண்பார்ந்த தமிழகம் இதையும் அப்படிச் செய்யுமானால் அதற்காக நான் ஏன் வருந்த வேண்டும்? நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? தமிழர்களின் பெருந்தன்மைக்கு இதுவும் ஒரு சோதனை. யார் ஜயிக்கிறார்களென்று பொறுத்திருந்து தான் பார்ப்போமே! ஸ்டீபன் ஸ்பெண்டரும், டி.எஸ். எலியட்டும், தங்கள் தனித்துவத்தோடு மேற்கு நாடுகளில் ஒரோர் இதழ்களை நடத்தியிருக்க முடியுமானால் இங்கும் ஏன் அப்படிப் புதியதுவும் தரமானதுவுமான நல்ல முயற்சிகள் வளரலாகாது? இதற்குத் தமிழ்ப் பெருமக்கள் தான் பொருத்தமும் பயனும் அமைகின்ற வகையில் ஒரு சரியான நல்ல பதிலைச் சொல்லுதல் வேண்டும்.

நில்லுங்கள் ஒரு நிமிஷம்! இறுதியாக இன்னும் ஒரு வார்த்தை! இந்த முயற்சிக்காக நான் சேர்த்திருக்கிற மூலதனம் வெறும் பணம் மட்டுமேயல்ல. மனோதர்மமும், தன்னம்பிக்கையுமே எனது பல மான மூலதனங்கள். ஒரு காகித வியாபாரி பத்திரிகை தொடங்கும் போது அவர் விற்கும் காகிதத்தைப் போலே மற்றொரு வர்ணக் காகிதமாகிய பணமும் அதிகாரமுமே அதற்கு மூலதனமாகலாம். ஆனால் ஒரு எழுத்தாளன் பத்திரிகை தொடங்கும் போதோ பணத்தைவிட மனோதர்மமே பெரிய மூலதனமாக அமைய முடியும். அப்படித்தான் நானும் அமைத்துக் கொண்டிருக்கிறேன் இப்போது. எனவே தீபத்தின் சந்தாதாரர்களுக்கும் விற்பனை யாளர்களுக்கும், இதுவரை அருகில் நெருங்கிவராத எல்லா விளம்பரதாரர்களுக்கும் இந்த விநாடியில் அன்புடன் ஒரு வேண்டு கோள் விடுக்கிறேன். ஓர் சத்தியமான எழுத்தாளனின் மனோதர்ம முயற்சிக்கு நீங்கள் எப்படி எப்படி எல்லாம் துணை நிற்க முடியுமோ அப்படி அப்படி எல்லாம் தயை செய்து துணை நிற்க வேண்டும். இந்தப் பத்திரிகையின் விலை இப்போது சற்றே அதிகமாகத் தோன்றலாம். எழுத்தாளர்கள் சன்மான விஷயத்திலும், வேறு பல துறைகளிலும் இந்தப் பத்திரிகை மேற்கொண்டிருக்கும் உறுதி காரணமாகவும் பொறுப்புக் காரணமாகவும் 75 காசு விலை வைத்தாலே ஓரளவு நஷ்டத்தினைத்தான் தவிர்க்க முடியுமே ஒழியச் சிறிது லாபத்தையும் கூட எதிர்பார்த்துச் சிந்திக்க முடியுமென்று தோன்றவில்லை. எதிர் காலத்தில் வேறு வசதிகள் பெருகினால் எங்களுக்கு லாபமில்லாது போனாலும் வாசகர்களுக்கு அதிக

வசதிகள் தரவே நினைப்போம். இதையும் தமிழ்ப் பெருமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன். என்னோடு தோழமை பூண்டு இந்த முயற்சியில் என்னுடன் வரும் இலட்சிய எழுத்தாள நண்பர்களுக்கு நான் நன்றி கூறி முடித்து விடப் போவதில்லை. அந்த உயர்தரமான நட்பை உடனே நன்றி கூறி முடித்துவிடவும் நான் தயாராயில்லை. அவர்களுடைய தோழமையை நான் தொடர்ந்து வழிபட விரும்புகிறேன். வழிபட விரும்புகிற தோழமைக்கு நன்றி கூறிக் கணக்குத் தீர்த்து விடுவது நியாயமில்லை என்பது என் கருத்து. தீபம் தமிழ் எழுத்தாளர்களின் சுதந்திரமான சிந்தனைக்கும் முற்போக்கு நினைவுகளுக்கும் வசதியான ஒரு மேடையாக அமையும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. எழுத்துலகச் சிற்பிகள் சேர்ந்து படைக்கும் இந்த இலக்கிய ஏட்டைப் பலப்படுத்துவதற்கு தமிழிலக்கிய உணர்வுள்ள ஒவ்வொருவரும் நேரே சந்தாதாரராகி ஆதரிக்க வேண்டும். இதைவிட இன்னும் நான் இங்கு என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? உங்கள் உணர்வுகளுக்கும் என் உணர்வுகளுக்கும் நடுவில் வெறும் வார்த்தைகள் வந்து நின்று தானா பேச வேண்டும்? மீண்டும் பார்க்கலாம்.



# 'தீபம்' நா.பார்த்தசாரதி
# திருமதி சுந்தரவல்லி

விலை
ரூ. 40